

சம்பியனானார் மரின் சிலிச்

பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 290 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 27, வெள்ளி 12.09.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

24 பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=


தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h

ஈரப்பதம்: 48%

காற்றழுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04

## பாலச்சந்திரன் குறித்து எதுவுமே தெரியவில்லை

### மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்

பிரபாகரனின் மகன் பாலசந்திரனின் மரணத்துக்கு யார் காரணம் என்பது குறித்து இன்னமும் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. "இந்தச் சம்பவம் குறித்து நாங்கள் விசாரணை செய்து வருகிறோம். இராணுவம் இதனை செய்திருக்கும் என நான் கருதவில்லை" - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய ஊடகமான 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் முழு வடிவம் 23 ஆம் பக்கத்தில்

## அமைச்சர் டக்ளஸிடம் நீதிமன்றில் நேற்று குடைந்து குடைந்து குறுக்கு விசாரணை

### இந்தியாவில் கடந்த புதன்கிழமை வரை பிணையில் வரமுடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஒரு நபர் தான் என்பதை ஒத்துக்கொண்டார்

யாழ்ப்பாணம், செப். 12

'உதயன்' பத்திரிகைக்கு எதிராக இழப்பீடு கேட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்த மானநஷ்ட வழக்கில் நேற்று அவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாகக் குடைந்தெடுக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். விசாரணை நேற்றைய தினம் முடிவடையாத காரணத்தால் வழக்கு நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் குறுக்கு விசாரணை தொடரும்.

விக்கிலீக்ஸ் தகவல்களை 'உதயன்' பத்திரிகை வெளியிட்டதற்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் 1000 கோடி ரூபா நட்டஈடு கேட்டு அவதூறு வழக்குத் தாக்கல்செய்திருந்தார் அமைச்சர் டக்ளஸ். அந்த வழக்கு நேற்று விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். அவரது சாட்சியத்தை அவர் தரப்பு சட்டத்தரணி அப்துல் ஏ.மஜித் நெறிப்படுத்தினார்.

தனது சாட்சியத்தில் அமைச்

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவர்கள் 56 பேர் நேற்று ஒரேநாளில் கைது

### படகுகள், உபகரணங்களும் பறிமுதல்



யாழ்ப்பாணம், செப்.12

இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றைய தினம் பெரும் எண்ணிக்கையான இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் 21 பேரும், தலைமன்னார் கடற்பரப்பில் 30 மீனவர்களும், நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 5 மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் இலங்கைக் கடற்படையினரால் கூடுதல் எண்ணிக்கையான இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பம்

22 ஆம் பக்கம் பார்க்க

## பேரவை செயலக விரிவாக்கத்துக்கு வந்தது நிதி

யாழ்ப்பாணம், செப். 12

கைதடியிலுள்ளவடக்குமாகாண பேரவைச் செயலகத்தின் அடுத்த கட்டட விரிவாக்கத்துக்கு நூறு மில்லியன் ரூபா வந்து சேர்ந்துள்ளது என்றும், அதனை விட மேலும் 270 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார் என்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார். கடந்த வாரம், நிதி அமைச்சின் செயலாளர் ஜெயசுந்தர யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அப்போது கைதடியிலுள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தையும்

22 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் சார்ஜன்ட் கைது; முன்னாள் போராளியாம்

மட்டக்களப்பு, செப்.12

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொழும்புக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். கந்தையா ஜெகதீஸ்வரன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

1989 ஆம் ஆண்டு இவர் பொலிஸ்சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னர் பல ஆண்டுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்தார் என்றும் பல குற்றச் செயல்களோடு சம்பந்தப்பட்டிருப்பதான தகவ

22 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் போராளி கைது ரிஜடியினரிடம் ஒப்படைப்பு

### குற்றங்களுடன் தொடர்புடையவர் என்கிறது பொலிஸ்

கிளிநொச்சி, செப். 12

கிளிநொச்சிப் பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் அவர் என்றும் பொலிஸார் கூறினர். 34 வயதுடைய கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த பீற்றர் விக்கினேஸ்வரனே கைது செய்யப்பட்டார்.

22 ஆம் பக்கம் பார்க்க



நெடுங்கேணி ஒதியமலைப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக வெட்டப்பட்டு, அரியப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மற்றும் பாலை மரங்கள் நேற்று இரவு முள்ளியவளைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. ரிப்பர் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட இந்த மரத்துண்டுகளை முள்ளியவளை குமாரபுரம் பகுதியில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ற-433)

## வெளிநாடுகளில் உள்ளோர் குறித்து இராணுவம் பதிவு

யாழ்ப்பாணம், செப். 12

"வெளிநாடுகளில் உங்கள் உறவினர்கள் யாராவது வசிக்கின்றனரா ?" எனக் கேட்டு வீடு வீடாக இராணுவப் பதிவு நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. இராணுவச் சீருடையில் சென்றே இராணுவத்தினர் இந்தப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஏழாலைப் பகுதியில் நேற்றுக் காலை வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர், வீடுகளிலுள்ளவர்களின் விவரங்களைத் திரட்டியுள்ளனர். "வீட்டில் வசிப்பவர்கள் யார்? அவர்களின் பெயர் விபரங்கள் ? அவர்கள் எங்கே வேலை செய்கின்றனர் ? வேறிடங்களிலிருந்து யாராவது வீட்டில் வந்து தங்கியுள்ளனரா? வெளிநாடுகளில் உறவினர்கள் உள்ளனரா ?" என்ற விவரங்களைக் கேட்டுப் பதிவு செய்துள்ளனர். இராணுவச் சீருடையில் வந்து திடீரென இந்தப் பதிவு நடவடிக்கைகள் இராணுவத்தின

22 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்துக்கு வடக்கு முதலமைச்சர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 12

"இராணுவத்தினர் மக்களையும், எங்களையும் படம் எடுப்பதை உடனே நிறுத்த வேண்டும்"- இவ்வாறு சிங்கள மொழியில் இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுத்தார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

"இராணுவத்தில் சிலர் இங்கு வந்து படமெடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அறிகிறேன். எமது பாதுகாப்புக்கா அல்லது மக்களை அச்சுறுத்துவதற்கா படம் எடுக்கின்றீர்கள்? நாங்கள் இராணுவத்தினரை எங்களைப் பாதுகாக்குமாறு கேட்கவில்லை. இராணுவம் இங்கு இருப்பதால் எமது மக்கள் தான் பாதுகாப்பின்றி பயத்துக்கு ஆளாகின்றார்கள். படம் எடுப்போர் அவ்வாறு செய்வதை உடனே நிறுத்த வேண்டும். இல்லை என்றால் எங்கள் இளைஞர் யுவதிகளைக் கொண்டு உங்களின் படங்களை நாம் எடுத்து தெற்கிலே பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோம்" - என்று சிங்களத்தில் எச்சரித்தார் முதலமைச்சர்.

வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கோழிப் பண்ணைக்கான

22 ஆம் பக்கம் பார்க்க

# சர்வகட்சிக் குழுவின் பரிந்துரையை செயற்படுத்தாததாலேயே பிரச்சினை

*அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறுகின்றார்*



கொழும்பு. செப்.12
சர்வகட்சிக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாது விட்டமையாலேயே அரசுக்குப் பாதக நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.
அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காமையால் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்டுவது சிரமமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளர் இளவரசர் அல் ஹுசெய்னை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. புறச்சக்திகளின் அழுத்தம் காரணமாகவும், தமிழ் பூர்வீகத்தைக் கொண்ட காரணத்தினாலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார்.
போர் நிறைவின் பின்னர் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்க நேரிடும் என்று முன்னரே லங்கா சமசமாஜக் கட்சி எச்சரிக்கை விடுத்திருந்தது.
சர்வதேச நிபுணர்கள் அடங்கியவிசாரணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்தி இந்தக் குற்றச்சாட்டுக்களை முறியடிக்குமாறும் நாம் கோரியிருந்தோம்.
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.
இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலேயே இறுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க ஜனாதிபதி, வெளிநாட்டு நிபுணர்களை நியமித்துள்ளார்" - என்று தெரிவித்துள்ளார்.(ற)



*2014ஆம் ஆண்டுக்கான தேசிய புத்தகக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சி எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண் காட்சி இரவு 9 மணிக்கு நிறைவடையும். இதனுள் 300 கண்காட்சிக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

## வாழ்வக நிறுவன நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வுகள்



வலி.வடக்கு, செப்.12
மருதனார்மடத்தில் அமைந்துள்ள விழிப்புலனற்றோருக்கான அமைப்பான வாழ்வக நிறுவனத்தின் நிறுவுநர் கலாநிதி செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.
முற்பகல் 9 மணிக்கு வாழ்வக மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரன் தலைமை தாங்கினார்.
அன்னையின் நினைவாலயத்தில் இடம்பெற்ற மலரஞ்சலியைத் தொடர்ந்து வாழ்வகக் கொடி தலைவரால் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாழ்வக மாணவர்களின் அன்னை துதிப்பாடல் இடம் பெற்றது. தொடர்ந்து விருந்தினர்களின் உரையும் மற்றும் நினைவுப் பேருரையும் நடைபெற்றன.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 308 'பி' ஆளுநர் வைத்திய கலாநிதி வை .தியாகராசா, ஞானம் பவுண்டேசனை சேர்ந்த க.நவநீதன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.சுரேந்திரன், வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி பிராந்திய முகாமையாளர் றோய் நிக்கிலஸ் ஆகியோரும், கௌரவ விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனும் கலந்துகொண்டனர். (ற-86)

## பச்சைமிளகாய் சவாலுக்கு அழைக்கின்றார் புத்திக்க

கொழும்பு, செப்.12
இலங்கை நிதியை வெளிநாடுகள் பெற்றுக்கொள்ளும் பிரமிட் வேலைத்திட்டங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு உதவுவதற்காக நிதி சேகரிக்கும் வகையிலும் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பச்சைமிளகாய் சவாலை எதிர்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரண, அழைப்பு விடுத்துள்ளார்.
மூன்று பச்சைமிளகாய்களை 2 நிமிடத்துக்குள் சாப்பிட்டு முடிக்க வேண்டும் என்பதே இந்த சவாலாகும். இந்த சவாலை நேற்றுஎதிர்கொண்டுமூன்று பச்சைமிளகாய்களைஉண்ட புத்திக, இந்த சவாலை எதிர்கொள்ளுமாறு மேலும் ஐவருக்கு அழைப்பு விடுத்தார்.
கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும, மேல் மாகாணசபை உறுப்பினர் அநுர தீபால், ஊடகவியலாளர் சமன் பிரியங்கர, கலைஞர் காவிந்த பெரேரா ஆகியோருக்கேபுத்திக சவால் விடுத்துள்ளார். (ற)

## ஆங்கில கற்கைநெறியை பூர்த்தி செய்த இராணுவ அதிகாரிகளுக்குச் சான்றிதழ்

வலி.வடக்கு, செப்.12
யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியின் ஏற்பாட்டில் நடைபெற்ற படை அதிகாரிகளுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பில் சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பலாலி படைத் தலைமையகத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.
மங்கல விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து ஆங்கில பயிற்சி நெறியில் சித்தி அடைந்த அலுவலர்களின் ஆங்கில பாடல்கள் மற்றும் 'வெனிஸ் நகர வியாபாரி' என்னும் நாடகமும் இடம்பெற்றன.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை இராணுவப் பொலிஸ் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கலந்துகொண்டார்.
அத்துடன், யாழ்.மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரெரா மற்றும் யாழ்.மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படைகளின் கட்டளை அதிகாரிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், விமானப்படை வட மாகாண கட்டளை அதிகாரி, கடற்படையின் வட மாகாண கட்டளை அதிகாரி, பிரிட்டிஷ் கல்லூரியின் யாழ். மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சித்தி அடைந்த அலுவலர்களின் குடும்பத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (ற-86)

## ஜனாதிபதியிடம் நீதி கேட்டு மரத்தில் ஏறி போராட்டம்



கொழும்பு, செப்.12
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நியாயம் கேட்டு நபர் ஒருவர் கொழும்பு விஹார மஹாதேவி பூங்காவின் மரமொன்றின் மீது ஏறி போராட்டம் நடத்தி வருகின்றார் என்று தெரியவருகின்றது.
மாதம்பைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு போராட்டம் நடத்தி வருகின்றார். போட்டியொன்றில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டது என்றும், உரிய இடம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தே அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
பீ.டீ. ஹப்புவாராச்சி என்ற 45 வயதான நபரே இவ்வாறு ஜனாதிபதியிடம் நியாயம் கோரியுள்ளார்.
அவர் அநீதியிழைக்கப்பட்டது என்று குறிப்பிடும் போட்டி 2010 ஆம் ஆம் ஆண்டு நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## தேர்தலை ஒத்திவைத்தால் உண்ணாவிரதம் - *ஹரின்*

கொழும்பு, செப்.12
ஊவா மாகாணசபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டால் உண் ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாக ஐ.தே.கவின் மாகாண முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
"தேர்தல் ஆணையாளர் புதிய பாடல் ஒன்றை பாடி வருகின்றார். ஏதேனும் தேவையற்ற காரியங்களில் அவர் ஈடுபட்டால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன்." - என்று தெரிவித்துள்ளார் ஹரின்.(ற)



*பங்களாதேஷ் தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த குழுவினர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அதில் இருதரப்பு பரஸ்பர உறவுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. பங்களாதேஷ் தேசிய பாதுகாப்பு கல்லூரியைச் சேர்ந்த 32 பேர் கொண்ட குழுவினர் கடந்த 7 ஆம் திகதி இலங்கை வந்து ஒரு வார கால கல்விச்சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளனர்.*

## திருமலை சிறைச்சாலையில் சிறைக்கைதி கொடி விநியோகம்



திருகோணமலை, செப்.12
தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை சிறைச்சாலையில் சிறைக்கைதி கொடி விநியோகம் திருகோணமலை உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் டபிள்யு.ஜி.யு.தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றது.
இவ்வாறு கொடி மூலம் சேகரிக்கப்படும் நிதி சிறைக் கைதிகளின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரும், கிழக்கு மாகாண சபை அமைச்சரவையின் பேச்சாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை கலந்து கொண்டார். (ற-10)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 27 வெள்ளி (12.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 290


# ஐ.நாவின் மார்ச் மாத அறிக்கைக்கு இதுவரை பதிலளிக்கவில்லை அரசு

## பான் கீ - மூன் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்ரெம்பர் 12

**மனித உரிமை பாதுகாவலர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து ஐ.நாவின் விசேட அதிகாரிகள் குழுவால் மார்ச் மாதம் விடுக்கப்பட்ட அறிக்கைக்கு இலங்கை இன்னமும் பதிலளிக்கவில்லை என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 27 ஆவது அமர்வில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் அவர், ஐக்கிய நாடுகள், அதன் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை தொடர்பான அதன் பொறிமுறைகள் ஆகியவற்றுடனான இலங்கையின் ஒத்துழைப்பு குறித்து சில விவகாரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013 இலங்கைக்கு பயணம் மேற் கொண்ட பின்னர் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தன்னுடைய பயணத்துடன் தொடர்புடைய பல தனிநபர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும், இதனை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டதாகவும் பான் கீ-மூன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது அமர்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும், முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தன்னுடைய பயணத்துடன் தொடர்புடைய பல தனிநபர்கள் துன்புறுத்தப்பட்டனர் என்றும் தெரிவித்ததாகவும் பான் கீ-மூனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ரூபவாகினி கூட்டுத்தாபனம் 24 சிவில் அமைப்புகள் தொடர்பாக வெளியிட்ட செய்தி குறித்து விசேட அதிகாரிகள் குழுவொன்று இலங்கை அரசிற்கு கூட்டறிக்கை யொன்றை அனுப்பியதாகவும் அதற்கு இதுவரை

(22ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளாலேயே ஜனாதிபதியானார் மஹிந்த

### மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி

கொழும்பு, செப்.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் என்று கூறும் அரசு, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாலேயே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் ஏறினார் என்பதை மறந்துவிடக் கூடாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி.

பிரபாகரன் இல்லையென்றால் மஹிந்த ராஜபக்ஷ என்ற ஜனாதிபதி உருவாகியிருக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பெற்றுக் கொடுத்தது பிரபாகரன்தான் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அசாத் சாலி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஷரியா சட்டம் என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லாத போது அதற்கு எதிரான கண்டனம் தெரிவித்து அதனை நீக்க வேண்டுமென்று பொதுபலசேனா கூறுவது முட்டாள்தனமான விடயம். ஷரியா சட்டம் என்றால் என்னவென்று தெரியாமல் அதனை பற்றிப் பேசுவது வேடிக்கையாகவுள்ளது. திருடியவர்களின் கையை வெட்டுவதுதான் ஷரியா சட்டம். இலங்கையில் அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கேள்விகளுக்கு பதிலளிக்காது நழுவிக் கொண்டார் ஆளுநர்

யாழ்ப்பாணம், செப். 12

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் நேற்று ஊடகவியாலர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது. ஆயினும் ஊடகவியலாளர் முன்வைத்த, வடக்கு மாகாண முதலமைச்சர் நிதியம் உட்பட பல சிக்கலான கேள்விகளுக்குப் பதிலளிக்காது நழுவிக்கொண்டார் ஆளுநர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பின் இறுதியில், ஊடகவியலாளர்கள் கேள்விகள் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

"அரசியலமைப்பின் பிரகாரம் மாகாணசபை நிதியம், அவசரகால நிதியம் என்பன தான் அமைக்க முடியும். அதனை விட வேறு நிதியம் அமைக்க முடியாது" என்று ஆளுநர் தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர்கள், "நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முதலமைச்சர் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டால் அனுமதி வழங்கப்படுமா?"- என்று கேட்டனர். அதற்குப் பதிலளித்த ஆளுநர், "இதற்குத் தற்போது பதிலளிக்க முடியாது. வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நிதியம் ஏற்கனவே ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமையால் இது தொடர்பில் தான் அதிகம் பேச முடியாது"- என்றார்.

"அப்படியானால், ஆளுநர் நம்பிக்கை நிதியம் எந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது?" - என்று தொடர்ந்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த ஆளுநர், "இதுதொடர்பில் மேலும் பதிலளிக்க முடியாது"- என்று தெரிவித்தார்.

அதேபோன்று,'முல்லைத்தீவு மாவட்டத்துடன் சட்டரீதியாக இணைக்கப்படாத வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு எவ்வாறு நிதிகள் பங்கீடு செய்

(22ஆம் பக்கம் பார்க்க)

## 96 சதவீதம் கிடைத்ததையிட்டு சந்தோசப்பட்டுக் கொள்ளுங்கள்

### அறிவுரை கூறுகின்றார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், செப். 12

நூற்றுக்குத் 96 சதவீதம் கிடைத்ததையிட்டு சந்தோசப்பட வேண்டும். கிடைக்காத 4 சதவீதத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கக் கூடாது - இவ்வாறு அறிவுரை வழங்கியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி.

வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதில் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர் ஒருவர், "வன்னியின் இறுதிக் கட்டப் போரில்

(22ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண சைக்கிள் முல்லைத்தீவில் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் கடந்த ஆண்டு திருடப்பட்ட சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் மீட்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த திருட்டுச் சைக்கிளை வாங்கியவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான குறித்த சைக்கிளை திருடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர், அதனை முல்லைத்தீவு, விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றுள்ளார். சைக்கிளை வாங்கியவர் அதனை உபயோகித்துக் கொண்டிருந்த நிலையில், பொலிஸாரின் சோதனை நடவடிக்கை ஒன்றின்போது அது

(22ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸை விமர்சித்த செய்திக்காக 'தினக்குரல்' முன்பாக போராட்டம்

### வெளிவாரி பட்டதாரி மாணவர்கள்தான் நடத்தினராம்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் தினக்குரல் பத்திரிகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விமர்சித்து வெளியான செய்தியொன்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வெளிவாரி பட்டதாரி மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படும் ஒரு தொகுதியினரால் நேற்று குறித்த பத்திரிகை அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் கடந்த 9 ஆம் திகதி முதல் பக்கத்தில், 'வேலை தேடிப் போன பட்டதாரிகளுக்கு அரசியல் பாடம் நடத்திய அமைச்சர் - இணக்க அரசியல் செய்வது ஏன் என விளக்கம்' என்ற தலைப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒளிப்படத்துடன் வெளியான செய்தி குறித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி தொடர்பில், தினக்குரல் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை 4 பேர் சென்றுள்ளனர். அவர்கள் தம்மை வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள் எனத் தெரிவித்து பத்திரிகை ஆசிரியருடன் கலந்துரையாடியுள்ளனர். குறித்த செய்தி வெளியிடப்பட்டமையால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கூறியுள்ளனர். அத்துடன் குறித்த செய்தி தம்மால் வழங்கப்படவில்லை எனவும், இதனால் அமைச்சரிடம் தாம் மீளச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்து விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் சுமார் 30 பேர் வரையில் தினக்குரல் அலுவலகம் முன்பாகத் திரண்டுள்ளனர். அவர்கள் தமது முகங்களை பதாகைகளால் மறைத்துப் பிடித்தவாறே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 45 நிமிடங்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கைதடியில் யுவதி வன்புணர்வு: 2 பேர் அடையாம் காணப்பட்டனர்

தென்மராட்சி, செப். 12

கைதடிப் பகுதியில், ஆள்களில்லாத வீடொன்றில் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண், சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரில், இருவரை 8 மாதங்களின் பின்னர், சாவகச்சேரி நீதிமன்றில் அடையாளம் காட்டியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த யுவதியை ஓட்டோவில் அழைத்து வந்த ஒருவர், கைவிடப்பட்ட வீடொன்றில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தினார். அதன் பின்னர் தொலைபேசி மூலம் மேலும் நான்கு பேரை அவர் அவ்விடத்துக்கு அழைத்ததுடன், அவர்களும் யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்தினர்.

பாதிக்கப்பட்ட யுவதி இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்தார். வவுனியா பொலிஸார் அதுகுறித்த தகவல்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினர். அதையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த சாவகச்சேரிப் பொலிஸார் கடந்த முதலாம் திகதி ஒருவரையும், இரண்டாம் திகதி இருவரையும், மூன்றாம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆள் கடத்தல்காரர் 3 பேர் வாழைச்சேனையில் கைது

கொழும்பு, செப்.12

சட்டவிரோதமாக மேற்கு நாடுகளுக்கு ஆள்களைக் கடத்தும் மனிதக் கடத்தல்காரர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் களுவாஞ்சிக்குடியில் நடத்தப்பட்ட திடீர் வாகனச் சோதனையில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் இருந்த ஆவணங்களைப் பரிசீலித்ததன் அடிப்படையில் அக்கரைப்பற்றில் மற்றொரு நபர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடியில் கைது செய்யப்பட்ட இருவரும் அட்டாளைச்சேனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றைய நபர் அக்கரைப்பற்றுப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள், ஆள்களை மேற்கு நாடுகளுக்குச் செல்வதற்குத் தூண்டுவதோடு, அதற்குத் தேவையான ஆவணங்களையும் மோசடியான முறையில் தயார் செய்து

(22ஆம் பக்கம் பார்க்க)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.12
யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். (வ)

# கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.12
சுன்னாகம் சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டமும் ஒழுக்க விதிகளின் உபவிதிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்க மேல் மாடியில் சங்கத் தலைவர் ஆ.உதயசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.பாலகிருஸ்ணன், ஒன்றியத் தலைவர் ந.பிரபாகரன், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எல். துஸ்மந்த, தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.என்.எஸ்.கஸ்தூரி ஆராய்ச்சி, ஒன்றியச் செயலாளர் ஞான. சுரேந்தர், ஒன்றியப் பொருளாளர் எஸ். அருள்செல்வம், ஒன்றியப் பொருளாளரும், கண்காணிப்பு குழுத் தலைவருமான க.நாகராசா ஆகியோர் கலந்துகொள்வர். (வ)

★ ★ ★

நீர்வேலி கந்தசுவாமி ஆலய விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோயில் மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெறும். (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப்.12
மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

# திறந்த பல்கலையில் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.12
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் பொறியியல், மென்பொருள் எந்திரவியல் போன்றவற்றுக்கான பட்டக் கற்கை நெறிகளுக்கும், மனிதவள முகாமைத்துவம், பேச்சுமொழி ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொறியியல் கற்கை நெறிக்கு க.பொ.த. உயர்தரத்தில் கணித பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்பவியலின் அத்திபார மட்ட பாடங்களில் சித்தி அல்லது NDT, NDES, HNDE போன்ற உயர் தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மென்பொருள் எந்திரவியல் கற்கை நெறிக்கு உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அல்லது மூன்றாம் தரநிலை உயர் தகைமைகள் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மனிதவள முகாமைத்துவம் மற்றும் பேச்சுமொழி ஆங்கிலத்துக்கான மூன்று மாத கால கற்கை நெறிகளுக்கு க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம். இந்தக் கற்கை நெறிகளுக்கான வகுப்புகள் யாழ். பிராந்திய நிலையத்திலும், கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், முல்லைத்தீவுக் கற்கை நிலையத்திலும் நடத்தப்படும். இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். கிளிநொச்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். (உ-ரி)

## மரண அறிவித்தல்



திருமதி தவமணிதேவி (கமலா) சிவபாதசுந்தரம்


யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, பெரியதம்பிரான் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி (கமலா) சிவபாதசுந்தரம் 09.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் தேவராசா, தியாகராசா (பிரான்ஸ்), ந.ஜெகசோதிமலர், க.விமலாதேவி (இந்தியா), வரதராசா, காலஞ்சென்ற லெட்சுமி மற்றும் நற்குணராசா (பிரான்ஸ்), செல்வராசா (பிரான்ஸ்), க.சந்தானலெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், உதயசூரியன் (பிரான்ஸ்), சுந்தரகுமாரி, சிவகுமார், கமலகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும், தியாகலிங்கம் (வைத்தியசாலை, புங்குடுதீவு), ரஜனி (பிரான்ஸ்), சுஜிகலா (பிரான்ஸ்), வசந்தராசா (பிரான்ஸ்), ஜீவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு - 02 (52114) (45.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## தசாக கிருஹயக்ஞ (வீட்டுக்கிருத்திய) அழைப்பு



நிகழும் ஜயவருடம் ஆவணிமாதம்
19ஆம் நாள் (04.09.2014)
வியாழக்கிழமை தசமித் திதியில் சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா**

அவர்களின்
தசாஹாதி ஆத்மசாந்திக் கிரியைகள்
பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

13.09.2014 சனிக்கிழமை - தசாகம்
14.09.2014 ஞாயிற்றுக்கிழமை - ஏகோதிஷ்டம் - மாசிகம்
15.09.2014 திங்கட்கிழமை - சபிண்டீகரணம்
16.09.2014 செவ்வாய்க்கிழமை - கிருஹயக்ஞம்

மேற்படி எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்
கிரியைகளிலும் 16.09.2014 செவ்வாய்க்கிழமை நடைபெறும்
சமாராதனையிலும் (மதிய போசனம்) கலந்து கொண்டு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
வண்ணம் அழைக்கின்றோம்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(52105)(7.6.3)
குடும்பத்தினர்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 . 03 . 1940
உதிர்வு 12 . 09 . 2005

**அமரர் ஆசீர்வாதம் தோமஸ்**

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழ்வில் பல அனுபவங்களைப் பகிர்ந்து
பண்புமிகு பாசத்தின் உறைவிடமாய்
எம்முடன் பல காலம் இருந்து
வானகம் சென்ற எங்கள் ஐயாவே!
ஆண்டுகள் ஒன்பது ஆகியும் உங்கள் நினைவுகள்
எம்மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

(52062)(7.6.3)

மெலிஞ்சிமுனை,
ஊர்காவற்றுறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## ஒன்றுகூடலும் சிறுகதைப் பட்டறையும்

யாழ்ப்பாணம், செப்.12
தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் ஒன்றுகூடலும் சிறுகதைப் பட்டறையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறும். (வ)

## கோயிலாமனை சனசமூக நிலையத்துக்கு நிதி உதவி

கொடிகாமம், கோயிலாமனை சனசமூக நிலையத்தின் பௌதிக வளத் தேவைகளைப் பூர்த்திசெய்வது தொடர்பில் மின் மோட்டர் மற்றும் நீர்த்தாங்கி அமைப்பதற்கு பிரதேசவாசியான (லண்டன் சிங்கம்) கதிரவேலு தெய்வேந்திரம் என்பவர் 25 ஆயிரம் ரூபாவை குறித்த சனசமூக நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதேவேளை- அமரர் கனகசுந்தரம் சிவராசா ஞாபகார்த்தமாக அன்னாரது துணைவியார் ரூபா 25 ஆயிரத்தை நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். குறித்த நிதியின் மூலம் குறித்த சனசமூக நிலையத்துக்கு முன்பாக வீதி விளக்கு பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சனசமூக நிலைய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (வ-122)

## ஐக்கிய ஜெப பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.12
யாழ். மாவட்ட அனைத்து திருச்சபை தலைவர்கள் மற்றும் சபை மக்கள் இணைந்து நடத்தும் நிலையான சமாதானத்துக்கான ஐக்கிய ஜெபபெருவிழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



திருமதி
**சிறிகந்தநாயகி தணிகாசலம்**

தோற்றம் 15.07.1954 மறைவு 24.08.2013
திதி: அபரபக்க சதுர்த்தி

நான்முந்திப் போனால் உனைப்பார்க்க
இங்கு யாருமில்லை என்பதனால்
நான் இருக்கும் போதே நீ போனால்
நல்லது என நினைத்தேன் - அதற்கு
ஏன் இவ்வளவு அவசரம் காட்டி என்னைப்பிரிந்து சென்றாய்
வான் பார்த்த வெறுநிலமாய் வாடி நான் வதங்கிடவா.
நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தது போல்
வற்றாமல் என் வாழ்வில் வளம் கொழிக்கச் செய்தாயே!
பொற்றாலியோடெவையும் போம் எனுமாறு நீ போனதால்
கற்றாவின் மனம் போலக் கலங்குகின்றேன் உனை எண்ணி.

கணவர்: ச.தணிகாசலம்
வேளாவை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 . 09 . 1954
உதிர்வு 01 . 09 . 2007

**சின்னத்துரை சிவபாதம்**


(இலங்கை வங்கி வாடிக்கை சேவை முகாமையாளர்)
திதி : சங்கடஹரசதுர்த்தி

ஆண்டுகள் ஏழு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஓடி வந்து துணையாகி
வாடியுள்ள எங்களுக்கு
வனப்பளிப்பாய் என்றெண்ணி
காத்திருப்போம் வாருமையா.

பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.
குடும்பத்தினர்.

## இளைஞரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி, செப்.12
காணி துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட இளைஞரொருவர் விஷப் பாம்பினால் கடியுண்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. விஷப்பாம்பினால் கடியுண்ட சரசாலை வடக்கைச் சேர்ந்த கணேசன் விநோதன் (வயது -29) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு வெற்றுக் காணிகள் துப்புரவாக்கல் தென்மராட்சிப் பிரதேசத்தில் மும்முரமாக இடம்பெற்று வருவதால் அவ்வாறான பணியில் ஈடுபட்ட வேளையிலேயே அவரை விஷப் பாம்பு தீண்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



ஊருக்குள் நடக்கின்ற தனிப்பட்ட பகைகளுக்காக கழிவு ஒயில் வீசுகின்ற கலாசாரம் அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றது. அண்மையில் யாழ். கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் கடை ஒன்று விஷமிகளின் கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்காகியது. (வ-21)

## வெள்ளை பிரம்பு தின ஏற்பாட்டுக் கூட்டம்

ஒக்ரோபர் 15 ஆம் திகதிய சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிப்பது தொடர்பான ஒழுங்கமைப்புக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு லயன்ஸ் கழக உறுப்பினரும் வெள்ளைப் பிரம்பு தின ஒழுங்கமைப்பாளருமாகிய லயன் செ.மகாதேவா தலைமையில் நடைபெறும். (உ-ரி)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு குருநகரில் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், செப்.12
தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு குருநகர் பிரதேசத்தில் பெரு மெடுப்பில் சிரமதானப் பணிகள் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன
குருநகர் பிரதேசத்தில் இருக்கும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், முன்பள்ளிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்றவை டெங்கு தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார்.
இந்தச் சோதனை நடவடிக்கையின்போது இரண்டு இடங்களில் டெங்கு பரவுவதற்கான சூழல் காணப்பட்டன. உடனடியாக அந்தப் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதாக பரிசோதகர் ஜே.ராஜா மேலும் தெரிவித்தார். அத்துடன் குறித்த பிரதேசத்தில் தேங்கிக் காணப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகள் என்பன மாநகர கழிவகற்றும் பிரிவினரால் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
பிரதேசத்தில் உள்ள வடிகால்வாய்கள் மற்றும் கழிவுகள் ஓடும் சிறிய கால்வாய்கள் என்பவற்றைத் துப்புரவாக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இவற்றைவிட மக்களின் குடியிருப்புப் பகுதிகளும் பொது இடங்களும் சுகாதார பகுதியினரால் நேரில் சென்று அவதானிக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படவும் உள்ளன.



யாழ்.மடத்தடி தண்ணீர் தாங்கி சுற்றாடலில் இடம்பெற்ற சிரமதானப் பணியின் போது..

பிரதேசத்தில் இடம்பெற்று வரும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சுகாதார தொண்டர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.
இதேவேளை- தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வார நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையினரும் 521 ஆவது படையணியினரும் இணைந்து நேற்று சாவகச்சேரி நகர சபையின் திண்மக் கழிவகற்றல் திட்டப் பகுதியில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (வ-17-9)

## கும்பாபிசேகம்


யாழ்ப்பாணம், செப்.12
நயினாதீவு ஐயனார் ஆலய வருடாந்த மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.14 தொடக்கம் 7.34 மணி வரை நடைபெறவுள்ளது.
இதனைமுன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளையும் நாளை மறுதினமும் மாலை 4 மணிவரை நடைபெறும். (வ)

## விழிநீர் சொரியும் நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சந்தணம் ஆச்சாரி**
**சவுந்தரராஜன் ஆச்சாரி**
(உரிமையாளர் - துர்க்கா நகைப்பூங்கா)

**மண்ணில்** 12.10.1954
**விண்ணில்** 28.08.2010

திதி: அபரபஷ்ச சதுர்த்தி [12.09.2014]



அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
நான்கு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

**குடும்பத்தினர்.**
38, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நாட்டில் நடைமுறையில் இருப்பது மஹிந்த சிந்தனையா? சீன சிந்தனையா?

## நாடாளுமன்றில் சூடான வாதப் பிரதிவாதங்கள்

நாட்டில் தற்போது நடைமுறையில் இருப்பது மஹிந்த சிந்தனையா அல்லது சீன சிந்தனையா - என்று நேற்றுமுன்தினம் சபையில் கேள்வி எழுப்பியது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி. அதே வேளை, அலரிமாளிகையில் பாத்திரம் கழுவுபவர்கள் பற்றிய தகவலையும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அங்கு வெளியிட்டார். இதற்கிடையில், ஊவாமாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு படுதோல்வி காத்திருக்கின்றது என்று அரசு தெரிவித்தது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத் தில் 14 கேள்விகள் இடம்பெற்றிருந்தாலும் நேற்று முன்தினம் போன்றே நேற்றும் ஓரிரு கேள்விகளுக்கு மாத்திரமே பதில்கள் வழங்கப்பட்டன. சில கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அரச தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது.

கேள்விநேரத்தின்போது, ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிப்தியின் பணியாள்கள் தொடர்பிலும் அவர்களுக்கான செலவீனங்கள் குறித்தும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரிடம் எழுப்பியிருந்த கேள்விகளால் அரசதரப்பினருக்கும் அநுரவுக்குமிடையில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

**ஜனாதிபதிக்கு ரூ. 1,340 கோடி இது நியாயமா?**

அவ்வேளையில், இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பிய அநுர குமார, 2 கோடி மக்கள் வாழும் இலங்கையில், ஜனாதிபதியொருவருக்கு ஆயிரத்து 340 கோடி ரூபா செலவிடுவது நியாயமா என்று ஆளுந் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் வினவினார். இதற்கு பதில் வழங்கிய அமைச் சர் தினேஷ், நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ள பணியாள்களுக்கும் குறைவானளவு பணியாளர்களே ஜனாதிபதியடம் இருக்கின்றனர். எனவே, இது அநீதியாகாது என்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது, பிரதியமைச்சர் கீதாஞ்சன குணவர்தனவும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். இதைக் கண்ட அநுர " என்ன..... அண்ணன், தம்பி ஆகியோர் கூட்டிணைந்து பதிலளிக்கின்றனர் என்று நகைச் சுவையாக குறிப்பிட்டார். இதனால், ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர், இந்தச் சபையில் அண்ணன், தம்பிகள் என் எவரும் இல்லை. அமைச்சர்களும் உறுப்பினர்களும் தான் இருக்கின்றனர் என கூறினார்.

**அலரிமாளிகையில் பாத்திரம் கழுவுவது?**

இதையடுத்து கருத்து வெளியிட்ட அநுர எம்.பி., " ஆ.... அப்படியா...?? அண்ணன், தம்பிமார்கள் இல்லையென்றால், அலரிமாளிகையில் பாத்திரம் கழுவுகின்றவர்கள் இருக்கின்றனர்" என்று குறிப்பிடுகையில் சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது.

அதன் பின்னர் கேள்விசுற்று சூடு பிடிக்கவில்லை. இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் இடம்பெற்ற பேச்சுகளின் முன்னேற்றம் யாது? மேற்படி மீனவர் பிரச்சினை தொடர்பில் அரச தரப்பினரிடம் தலையீடு யாது என்பவை உட்பட மீனவர் பிரச்சினை சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அரச தரப்பில் ஒரு மாதகால அவகாசம் கோரப்பட்டது.

அதன்பின்னர் ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க, ஊவா மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன எனச் சுட்டிக்காட்டி, அதன் உண்மைத் தன்மை பற்றி அரசிடம் வினவினார்.

**தோல்விக்கு தயாராகுமாறு ஐ.தே.கவுக்கு கிண்டல்**

இதற்கு பதில் வழங்கிய ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் கடந்த திங்கட்கிழமையும் இதேகேள்வியை எழுப்பியிருந்தார். அதற்கு உரிய பதில் வழங்கப்பட்டது. தலைவர் என்ன கேட்டார் என்பதுகூட இவருக்கு தெரியவில்லை. தேர்தல் ஒத்திவைக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை. எனவே, படுதோல்வியை சந்திக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக வேண்டும் எனக் கூறிவிட்டு அமர்ந்தார்.

அதன்பின்னர், கடந்த திங்கட்கிழமை கோரம் இல்லாததால் சபை ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, நிறைவேற்ற முடியாமல்போன, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

**முதலீடுகள் அதிகரிப்பு**

அதனைத்தொடர்ந்த நேற்றைய விடயதானத்துக்கு அமைய, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை மீதான விவாதம் ஆரம்பமானது. குறித்த விவாதத்தை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன்யாப்பா அபேவர்தன ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

**வடமராட்சியில் வைத்து பிரபாகரனை பிடித்திருக்கலாம்**

அதேவேளை, போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் முதலீடு அதிகரித்துள்ளது. குறிப்பாக ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாத்திரமே தன்னால் மாற்ற முடியாது எனவும், ஏனைய அனைத்தையும் செய்யமுடியும் என்றும் சூளுரைத்த ஜே.ஆரால் பிரபாகரனை பிடிக்க முடியாமல் போனது. வடமராட்சியில் வைத்து அன்று பிரபாகரனை பிடித்தி ருக்கலாம். எனினும், டிக்ஸிற்றின் தலையீட்டால் அது முடியாமல் போனது என்று லலித் அத்துலத்துக்கு ஜே.ஆர். அறிவித்தார்.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த பிரேமதாஸவாலும் பிரபாகரனை அழிக்கமுடியாமல் போனது. சிறியளவான ஆயுதக்குழுக்களை அழிப்பதற்கு அவர் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார். கடைசியில் புலிகளாலே அவர் கொல்லப்பட்டார். சந்திரிகா, ரணில் ஆகியோர்கூட போரை முடிக்கவில்லை. எனினும், எமது ஜனாதிபதி அதைசெய்து முடித்தார். இதனால் தான் இன்று நாட்டில் ஸ்திரத்தன்மை நிலவுகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

**தாரை வார்ப்பு**

இதன் பின்னர் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி. அஜித் பி.பெரேரா, சீனாவைப்பற்றி பேசினால் இங்கு பலர் கொதிப்படைகின்றனர். அந்தளவு சீனாவுடனான உறவு வலுத்துள்ளது. தற்போது இங்கு நடைமுறையில் இருப்பது மஹிந்த சிந்தனையா அல்லது சீன சிந்தனையா என்று கேள்வி எழுப்பினார்.

**சபை ஒத்திவைப்பு**

அதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்தார்.

இதையடுத்து, தீர்ப்பை அறிவித்த பிரதி சபாநாயகர், விடயதானங்களுக்கு அப்பாலான முறையிலேயே பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, உரிய விடயத்துக்கு அமைய திருத்தங்களுடன் பிரேரணை முன்வைக்க முடியும்" என குறிப்பிட்டு, சபை நடவடிக்கைகளை 23 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தாதேவி குலசிங்கம்



முள்ளானையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தாதேவி குலசிங்கம் நேற்று முன்தினம் (10.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், குலசிங்கத்தின் பாசமிகு [illegible] மனைவியும், கனகமணி, காலஞ்சென்ற தவமணி மற்றும் புஸ்பாவதி, காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் விஜயாம்பிகை, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற அருட்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயலட்சுமி, அகிலன், விஜிதா, மாதவன், திலீபன் ஆகியோரின் அன்புத் தாயும், றதன், விஜிதா, லிங்கேஸ்வரன், மோகனப்பிரியா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு மாமியும், ரக்சா, ரிசி, மதுசிகா, லக்சிகா, ருலக்சன், எழில்வாணன், கஜிந்தன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அளவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீமாவளவு,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி. (52126) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் பத்தொன்பது ஆண்டுகள்

### செல்வன் சிறிஸ்கந்தராஜா றமேஷ்குமார்

(யா/யூனியன் கல்லூரி ஆண்டு II மாணவன்)



மண்ணில் மழலையாய் 12.06.1979

விண்ணில் தெய்வமாய் 12.09.1995

குடும்பம் எனும் கூடு அதில் சிறகு வரைந்த சிட்டுக்களாய் நாம் - அன்று
கூடி வாழ்ந்த நேரமதில் - காலன் நாடி வந்த வேளைதனில்
பூவிட்டு வீழ்ந்த இதழ் போல மண் மடிதனில் உறங்கச் சென்றாய்
ஈரொன்பதுடன் ஓராண்டு எமைப் பிரிந்தாலும்
இன்னமும் வாழ்கிறாய் எம் நெஞ்சினில்...

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. 52124(7.6.3)

குடும்பத்தினர்.


**காணி விற்பனைக்கு**

உடுவில் வடக்கு, பெரிய மதவடி, அப்ஸன் லேன் பகுதியில் வீட்டுடன் கூடிய 3 பரப்பு 12 குழி விஸ்தீரண முடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 128 6315 (52116) (7.6.3)

**கார் விற்பனை**

FB 15 நிசான் சனி JPNO

கார் விற்பனைக்கு (52126) 45.3.6)

யாழ்ப்பாணம்

தொ.பே. 077 336 3766

**காணி விற்பனை**

இல.17, இராமலிங்கம் வீதி (AGA Office இன் ஒரு பக்க எல்லையுடன் செல்லும் வீதி) சாவகச்சேரியில் கிணற்றுடன் அமைந்துள்ள ஒரு பரப்பு 4.07குழி காணி விற்பனைக்குண்டு.

(52126) 45.3.6) தொடர்பு: 077 871 9515

**மணமகள் தேவை**

30 வயது, யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச வங்கியில் அதிகார தரத்தில் பணியாற்றும் B.Sc M.Sc கல்வித் தராதரம் கொண்ட உத்தராடம் 4 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமில்லை. 3 சுற்று பாவம் 47 உடைய மணமகனுக்கு ஆசிரிய கல்விசார் தொழில் செய்யும் மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு:077 889 5456 (f/16581) (4.6.3)

**தவறிவிட்டது**

சின்னாலடி, அல்வாய் தெற்கு எனும் முகவரியுடைய வைத்திலிங்கம் பிறேமராசா என்பவரின் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறு தொகைப்பணம் என்பன அடங்கிய பேர்ஸ் 08.09.2014 அன்று தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயிலடியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:077 740 9588 (52129) (4.6.3)

**வீடு, காணி நியாயமான விலையில் விற்பனைக்கு**

யாழ்.நகர் மத்தியில் மாட்டீன் லேனில் ஒரு பரப்புக் காணியில் 4 அறைகள் (ஒரு A/C அறை), 2குளியலறை, சமையலறை கிணற்றுடன் வீடும் மற்றும் பாதை வசதியுடன் வீடு, கட்டக்கூடிய ¾ பரப்பு சதுரக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

பிரபல பாடசாலைகள், கோயில்கள், புகையிரதநிலையம், வைத்தியசாலை பேருந்து நிலையம் என்பன அருகில் உள்ளன.

தொடர்பு: 077 911 0703 (51575) (4.6.3)

**கார் விற்பனைக்கு**

அரச உத்தியோகத்தரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள நிசான் கார் உடன் விற்பனைக்குண்டு. NISSAN - March, HK.11, HD - XXXX Auto, Alloys wheel, Full option. 1300cc, 4 door, central locking Low mileage. Good condition. Rs 13/90, Jaffna Town.(தரகர் தேவையில்லை)

(52127) (12.3.6) தொடர்பு: 071 817 5811

**நிர்வாக உதவி அலுவலர் பதவி**

HNDM அல்லது அதற்கு சமனான தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 19.09.2014 ஆம் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்,
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (f/16552) (4.6.3)


## மரண அறிவித்தல்

### ஐயன் சின்னத்தம்பி (இருபாலை)



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அம்பனை - தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும், ஆனைக்கோட்டையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஐயன் சின்னத்தம்பி நேற்று (11.09.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பசுபதியின் அன்புக் கணவரும், மேனகா, ரவீந்திரன், மகேந்திரன் (சுவிஸ்), பாலேந்திரன், அமுதா (கனடா), காலஞ்சென்ற கருணாநிதி (பவா) மற்றும் சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), ரகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், [illegible] தர்மகுலசிங்கம் (மாகாணக் கணக்காய்வு அலுவலகம்), சத்தியானந்த தேவி (ஆசிரியை - யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), சாந்தி (சுவிஸ்), பவானி, ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (சுவிஸ்), ஜெயசுதன் (லண்டன்), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், Dr. செருஜனன் (களுபோவில வைத்தியசாலை), ஜதுர்ஷன் (மாணவன் - ஊவா, வெல்லஸ பல்கலைக்கழகம்), ரிஷானா, லக்ஷன், பர்மிளா (தாதிய மாணவி- யாழ்ப்பாணம்), சுஜீந்தன் (மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்), பிருந்தா, சுகிர்தா, மிதிலா, அவேந், சரண்சிஸ், அலன்சிஸ், [illegible], ஆர்த்திகா, லாவண்யா, [illegible], ஐஸ்வர்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்:
சி.ரவீந்திரன் (மகன்) (சி52125)(45.6.3)

# ‘டுவிட்டர்’ ஊழியர்களுக்கு ஐ.எஸ்.கொலை மிரட்டல்

## ஸ்லீப்பர் செல் மூலம் தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரிக்கை

வொஷிங்டன், செப்.12
அமெரிக்காவில் உள்ள டுவிட்டர் அலுவலக ஊழியர்கள், ‘ஸ்லீப்பர் செல்கள்’ மூலம் படுகொலை செய்யப்படுவார்கள் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையை ஐ.எஸ். ஐ.எஸ். தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள டுவிட்டர் அலுவலக ஊழியர்கள் மீது ‘ஓநாய் தாக்குதல்’ நடத்தப்படும் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்ததாக வோகேடிவ் இணையத்தளத்தில் செய்தி வெளியானது.

ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் டுவிட்டர் மிரட்டலில் என்று குறிப்பிடப்பட்ட ஹாஷ்டேகில், டுவிட்டர் நிர்வாகத்துக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஓநாய் தாக்குதல் நடத்தி அவர்களின் ஊழியர்களைப் படுகொலை செய்ய வேண்டும் அல்லது மாற்றுத் திறனாளிகளாக மாற்ற வேண்டும். இந்தப் பணியை அமெரிக்கா மற்றும் ஐரோப்பா அலுவலகங்களில் உள்ள நமது ஸ்லீப் பர் செல்கள் நிறைவேற்றுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்து.

அதே ஹாஷ்டேகில் வெளியிடப்பட்ட மற்றொரு டுவீட்டில், ‘அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ டுவிட்டர் அலுவலகத்தில் பணி புரியும் ஒவ்வொரு ஊழியரும் அவர்களது நிறுவன வாசலில் ஓநாய் தாக்குதல் நடத்த மனித வெடி குண்டாளர் ஒருவர் காத்துக்கொண்டு இருக்கிறார் என்பதை மனதில்-வைத்துக் கொள்ள வேண்டும்’ என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, ஐ.எஸ். ஐ.எஸ். இன் இந்த மிரட்டல் டுவீட்டுகளை, அந்த நிறுவனம் நீக்கியுள்ளது.

அதேபோல ஐ.எஸ் அமைப்புக்கு ஆதரவு அளிப்பதாக டுவிட்டரில் வாக்குறுதி தெரிவித்த அல் நுர்ஸா அல் மாக்திஷா என்கிற ஜெருசலேம் ஆதரவு அமைப்பின் தலைவர் துவாலாமூன் என்பவரின் பக்கம் மற்றும் கிளர்ச்சியாளர்களின் தொடர்புடைய வர்களாகக் கருதப்படும் பலரின் பக்கங்களைநீக்கி டுவிட்டர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (வ)

## ஐ.எஸ். ஆயுதக் குழுவை பூண்டோடு அழித்தொழிப்போம்

### நாட்டு மக்களுக்கு ஒபாமா உரை



சிரியாவிலும் இஸ்லாமிய அரச ஆயுதக் குழுவினருக்கு எதிராக வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரித்துள்ளார்.

நியூயோர்க்கில் அல் கொய்தா தீவிரவாதிகளால் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதன் நினைவு தினமான நேற்று, நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர், ஈராக் மற்றும் சிரியாவில் தாக்குதல் நடத்தி வரும் இஸ்லாமிய அரச ஆயுதக் குழுவுக்கு எதிரான போரை அமெரிக்கா தலைமை தாங்கி நடத்தும் என்று தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் தீவிரவாதிகள் எங்கிருந்தாலும் தேடி பூண்டோடு அழித்தொழிக்கப்படுவர் என்றும் அவர் எச்சரித்தார்.

இஸ்லாமிய அரச ஆயுதக் குழுவின் அச்சுறுத்தலுக்கு தாக்குதல் மூலம் பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள ஒபாமா, சிரியாவிலும் வான் வழி தாக்குதல் நடத்தப்படும் என்று கூறினார்.

ஈராக் அரசுப்படைகளுக்கு உதவும் விதமாக மேலும் 475 அமெரிக்க இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பப்படுவர் என்று அவர் அறிவித்தார்.

இருப்பினும், இது மற்றொரு ஈராக் போர் அல்ல என்பதையும் தெளிவுபடுத்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

சிரியாவில், ஜனாதிபதி ஆசாத் மற்றும் இஸ்லாமிய அரசுக்கு எதிராகப் போரிடும் கிளர்ச்சியாளர் குழுவுக்கு பயிற்சி மற்றும் ஆயுதங்களை வழங்க அந்நாட்டு நாடாளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.(வ)

## மனிதக்குண்டாக சிறுவரை பயன்படுத்துகிறது ஐ.எஸ்.

### ஐ.நா .பாதுகாப்புச் சபை அதிர்ச்சித் தகவல்



நியூயோர்க், செப்.12
ஈராக்கின் முக்கிய பகுதிகளை ஆக்கிரமித்து வரும் ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கம் அங்குள்ள குழந்தைகளை மனித வெடி குண்டுகளாக மாற்றுவதாக ஐ.நா. பாதுகாப்புச் சபை அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

நியூயோர்க்கில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் பங்கேற்ற அந்த அமைப்பின் உறுப்பினரும் ஈராக்குக்கான மனித உரிமைகள் கண்காணிப்பாளருமான லீலா செரோகி கூறுகையில்:-

“ஈராக்கில் 13 வயதுச் சிறுவன் ஆயுதங்களுடன் கிளர்ச்சியாளர்களால், பாதுகாப்புப் பணியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதை நான் கண்டேன். பொதுமக்களைக் கைது செய்து அவர்களின் பிடியில் வைக்கும் பணிகளில் அங்கு சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். சில சிறுவர்கள் மனித வெடி குண்டுகளாக ஈடுபடுத்தப் படுகின்றனர்”- என்றார்.

ஐ.நா.வின் அறிக்கையின்படி ஈராக்கில் தாக்குதல் நடத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆல், கடந்தவருடத்தில் மட்டும் சுமார் 700 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது உடல் உறுப்புகள்வெட்டப்பட்ட நிலைக்கு ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (வ)



ஈராக், சிரியாவில் மேலாதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினரை ஒடுக்குவது தொடர்பாக சவூதி மன்னருடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆலோசனை நடத்தினார். (வ)

## தனி நாடாகிறது ஸ்கொட்லாந்து செப். 18 இல் வாக்கெடுப்பு

ஸ்கொட்லாந்தில் அந்தநாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் முக்கியமான வாக்கெடுப்பு எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் ஸ்கொட்லாந்துக்கு சுதந்திரம் வேண்டும் என்று விரும்பி வாக்களித்தால் சுமார் 307 வருடங்களாக பிரிட்டனுடனும் வேல்ஸுடனும் சேர்ந்திருக்கும் ஸ்கொட்லாந்து பிரிந்து தனி நாடாக சுதந்திரம் பெற்றுவிடும்.

சுமார் 5.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஸ்கொட்லாந்து சுதந்திரம் அடைந்து பிரிந்து விட்டால் இந்தமுக்கிய அரசியல் மாற்றம் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பதவி விலக வேண்டும் என்பதற்கான அழுத்தத்தையும் உருவாக்கி விடும் என்பது குறிப்பிடத் தக்கது.(வ)

## பாகிஸ்தான் குண்டுவீச்சு; 35 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், செப்.12
பாகிஸ்தான் இராணுவம் நடத்திய விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 35 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வடக்கு வாஜிரிஸ்தான் பகுதி, தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தின்கீழ் உள்ளது. அங்குள்ள தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் அரசுக்கு சர்வதேச நாடுகள் நிர்ப்பந்தம் கொடுத்தன.

அதனையடுத்து கடந்த ஜூன் மாதம் முதல் தீவிரவாதிகளை அழிக்க பாகிஸ்தான் போர் விமானங்கள், தலிபான் முகாம்களை குறி வைத்து தாக்குதல்கள் தொடுத்து வருகின்றன. அமெரிக்க இராணுவமும் அவ்வப்போது ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்துகிறது. தற்போது வாஜிரிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளை வீசின.

இதில் 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அந்தநாட்டு பாதுகாப்புத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அங்கு பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 6 தீவிரவாதிகள் மற்றும் சிப்பாய் ஒருவரும் உயிரிழந்தனர்.

ஜூன் மாதம் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் எடுத்த அதிரடி நடவடிக்கையில் 950 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர். (வ)

## பாகிஸ்தானில் இடிந்தது மசூதி; 24 பேர் பரிதாபமாகச் சாவு

லாகூர், செப் 12
பாகிஸ்தானின் லாகூர் நகரில் மசூதி கட்டடமொன்று திடீரென இடிந்து விழுந்ததில் 24 பேர் உயிரிழந்தனர். 10 பேர் படு காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலம் லாகூரின் தரோக வாலா பகுதியில் உள்ள 2 மாடிகளுடன் கூடிய இந்த மசூதியில் பிரார்த்தனை நடத்துவதற்காக நேற்றுமுன்தினம் 40 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கூடினர்.

பிரார்த்தனை தொடங்கிய சிறிது நேரத்தில், திடீரென மசூதி கட்டடம் இடிந்து விழுந்தது. மசூதிக்குள் இருந்தவர்கள், இடிபாடுகளில் சிக்கினர். மசூதிக் கட்டடம் இடிந்து விழுந்த போது, குண்டு வெடித்தது போல் பயங்கர சத்தம் கேட்டது. இதனால் அயலில் இருந்த மக்கள் அதிர்ச்சியுடன் ஓடி வந்தனர். உடனடியாகப் பொலிஸ் மற்றும் மீட்பு படையினருக்குத் தகவல் தெரிவித்தனர். அவர்கள் விரைந்து வந்து மீட்பு பணிகளில் இறங் கினர்.

இந்த விபத்தில், மசூதிக்குள் இருந்த 24 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். நீண்ட நேர போராட்டத்துக்குப் பின்னர் அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன. இடிபாடுகளில் இருந்து 10 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைகளில் அனும திக்கப் பட்டனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது. கட்டட விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பஞ்சாப் மாநிலத்தின் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 120 பேர் உயிரிழந்துள்ள நிலையில், லாகூர் நகரில் நடந்த கட்டட விபத்து பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் எனப் பஞ்சாப் முதல்வர் தெரிவித்துள்ளார்.

அதிபர் மம்நூன் ஹுசைன், பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (வ)



## பொது இடங்களில் புகை பிடித்தால் ரூ.20,000 அபராதம்

### மத்திய அரசுக்கு குழு பரிந்துரை

டில்லி, செப்.12

பொது இடங்களில் புகை பிடிப்பவர்களுக்கான அபராதத் தொகையை ரூ.20 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று குழு ஒன்று பரிந்துரை செய்துள்ளது.

பொது இடங்களில் புகை பிடிப்பதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பு தடை விதிக்கப்பட்டது. அதையும் மீறி புகைப்பிடிப் போருக்கு 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. புகைப்பிடிக்கத் தடை விதிக்கும் சட்டப்படி, கல்வி நிறுவனங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு 100 மீற்றர் சுற்றளவுக்குள் புகையிலை தொடர்பான பொருள்களை விற்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், புகைபிடிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய சுகாதார அமைச்சகம் ஒரு குழுவை நியமித்தது அந்தக்குழு, மத்திய அரசிடம் தனது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது. அதில், பொது இடங்களில் புகைப்பிடிப் போருக்கான அபராதத் தொகையை ரூ.200 இல் இருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

மேலும், புகைப்பிடிப்பதை கட்டுப்படுத்தும் விதத்தில், உதிரியாக பீடி, சிகரெட் விற்பதற்குத் தடை விதிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. (வ)

## அக்னி-1 ஏவுகணை சோதனை வெற்றி



புவனேஸ்வர், செப்.12

அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லக் கூடிய அக்னி-1 ஏவுகணை வெற்றிகரமாக விண்ணில் ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது. அக்னி-1 ஏவுகணை அணு ஆயுதங்களுடன் 700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கக் கூடியது. இந்த ஏவுகணை ஒடிஷாவின் வீலர் தீவுப் பகுதியில் நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவி சோதிக்கப்பட்டது. இந்தச் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)



அண்மையில் இந்தியாவின் பல பகுதிகளிலும் விநாயகர் சதுர்த்தி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரமாண்டமான விநாயகர் சிலைகள் உருவாக்கப்பட்டு விநாயகர் சதுர்த்தி இறுதிநாளன்று, அந்தச் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டன. மும்பை நகரில் அவ்வாறு கடலில் கரைக்கப்பட்ட விநாயகர் சிலைகளால் கடற்கரைகள் பெருமளவு மாசடைந்திருந்தன. அவற்றை அரச பணியாளர்கள், தொண்டு நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள் இணைந்து சுத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## ஒரே நாளில் 2 பாலங்களைக் கட்டி இந்திய ராணுவ வீரர்கள் சாதனை



ஸ்ரீநகர், செப்.12

ஜம்மு- காஷ்மீர் பகுதியில் வெள்ளத்தில் பழுதடைந்து பயன்பாட்டுக்கு தகுதியற்றுப் போன 2 பாலங்களை 24 மணி நேரத்துக்குள் இந்திய இராணுவ வீரர்கள் மீண்டும் கட்டிமுடித்துச் சாதனை புரிந்துள்ளனர்.

காஷ்மீரில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்றி மீட்கும் பணியில் முப்படையினரும் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். உணவு மற்றும் தண்ணீர் இன்றி 1000 இராணுவ வீரர்களும், அவர்களின் குடும்பத்தினரும் சிக்கித் தவிக்கின்றனர். தெற்கு காஷ்மீர் மற்றும் ஸ்ரீநகரில் உள்ள பல்வேறு இராணுவ முகாம்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. 1000 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் தங்கள் குடும்பத்தினருடன் அந்த இடத்தைவிட்டு வெளியேறமுடியாமல், உணவு மற்றும் தண்ணீர் இன்றி தவித்து வருகின்றனர்.

இந்த இன்னலுக்கிடையிலும் சொந்த மனைவி, மக்கள் நலனைப் பற்றி கவலைப்படாமல் உயிரினும் மேலான தாய்நாட்டுக்கும், இந்த நாட்டின் மக்களுக்கும் அருந் தொண்டு ஆற்றிவரும் இந்திய இராணுவ வீரர்கள், ஜம்மு- காஷ்மீர் பகுதியில் வெள்ளப் பெருக்கால் பழுதாகி, பயன்பாட்டுக்கு தகுதியற்றுப் போன 2 பாலங்களை 24 மணிநேரத்துக்குள்ளாகவே மீண்டும் கட்டிமுடித்து சாதனை புரிந்துள்ளனர். பூஞ்ச் ஆற்றின் குறுக்கேயுள்ள ஷேர்-இ-காஷ்மீர் என்ற சாலைப் பாலம் காஷ்மீரின் பிற பகுதியை ஜம்மு பிராந்தியத்துடன் இணைத்து வைக்கிறது. கடந்த 6 ஆம் திகதி பூஞ்ச் ஆற்றில் கரைபுரண்டு ஓடிய வெள்ளப்பெருக்கில் இந்தப் பாலத்தின் பெரும்பகுதி அடித்துச் செல்லப்பட்டது. (வ)

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பிற நாடுகள் முயலக்கூடாது

## வலியுறுத்துகிறது இந்தியா

டில்லி, செப்.12

உள்நாட்டுப்போர் இடம்பெறும் ஒரு நாட்டில் உள்ள குடிமக்களை பாதுகாக்கிறோம் என்ற பெயரில் அந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பிற நாடுகள் முயற்சிக்கக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் இந்தியா கருத்துத் தெரிவித்துள்ளது.

> “இன அழிப்பு, போர்க்குற்றம், மனித உரிமை மீறல் உள்ளிட்டவற்றுக்கு ஆளாகும் மக்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட நாடு தவறிவிட்டால், அப்போது சர்வதேச நாடுகள் தலையிட்டு அந்நாட்டுக்கு உதவலாம்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அதிகாரபூர்வமற்ற பேச்சுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இதில், ஐ.நாவுக்கான இந்திய பிரதிநிதிக் குழுவின் முதன்மை செயலாளர் அபிஷேக் சிங் பேசியதாவது:-

உலக நாடுகள் கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. ஒரு நாட்டின் உள் நாட்டுப் பிரச்சினையில் வெளி நாடுகள் தலையிடுவதால், நிலைமை மேலும் சிக்கலாகி விடுகிறது. பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சிரமம் ஏற்படுகிறது. அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தை நடத்தி அமைதியான தீர்வு காண சர்வதேச நாடுகள் முயற்சிக்க வேண்டும்.

வலுக்கட்டாயமாகத் தலையிடும் போக்கைக் கைவிட வேண்டும். இன அழிப்பு, போர்க்குற்றம், மனித உரிமை மீறல் உள்ளிட்டவற்றுக்கு ஆளாகும் மக்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட நாடு தவறிவிட்டால், அப்போது சர்வதேச நாடுகள் தலையிட்டு அந்நாட்டுக்கு உதவலாம். எனினும், பாதிக்கப்பட்ட நாடு வேண்டுகோள் விடுத்தால் மட்டுமே சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும். அதுவும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகே இந்தச் செயலை மேற்கொள்ள வேண்டும்.

உள்நாட்டுப் போர் நிலவும் நாடொன்றில் உள்ள குடிமக்களைப் பாதுகாக்கிறோம் என்ற பெயரில் அந்த நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பிற நாடுகள் முயற்சிக்கக் கூடாது. 15 உறுப்பினர்களை கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை, உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தும் கடமையை முழுவதுமாக நிறைவேற்றவில்லை. இந்தச் சபையை மாற்றியமைக்க வேண்டும் - என்றார். (வ)

# தெலுங்கானா மாநில முதல்வர் வெளியிட்ட கருத்தால் சர்ச்சை



தெலுங்கானா மாநிலத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்துவோர் அனைவரும் 10 அடி ஆழத்தில் புதைக்கப்படுவார்கள் என்று தெலுங்கானா மாநில முதல்வர் சந்திரசேகர ராவ் கூறியமை இந்தியாவில் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது.

இந்தியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெலுங்கானா மாநிலத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடுவதாகச் சில ஊடகங்களைக் குற்றஞ்சாட்டிப் பேசிய போது தான் சந்திரசேகர ராவ் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு இந்திய அரசியல் தலைவர்கள் மற்றும் ஒருசில அமைப்புகளின் உறுப்பினர்களும் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஹைதராபாத் உள்ளிட்ட தெலுங்கானா மாநிலப் பகுதிகளில், ஒருசில தெலுங்கு மொழி செய்தி தொலைக்காட்சி நிறுவனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த ஒளிப்பரப்புச் சேவை தடை செய்யப்பட்ட விவகாரம் குறித்தான சர்ச்சைகளும் அந்த மாநிலம் முழுவதும் பரவி வரு கின்றன. இதனைத் தொடர்ந்து இதுதொடர்பான போராட்டங்கள் டில்லி உள்ளிட்ட நகரங்களிலும் கடந்த வாரம் முதல் நடைபெற்றுவருகின்றன. குறிப்பாக தடை செய்யப்பட்டுள்ள தொலைக்காட்சிகளில் பணிபுரியும் ஊழியர்கள் சிலரும் போராட்டங்களில் ஈடுபட்டுக் கைதாகி விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

தொடரும் இதுபோன்ற போராட்டங்களுக்கு எதிராகவும், அந்த ஊடக நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடும் நோக்கிலும் சந்திரசேகர ராவின் பேச்சு தற்போது அமைந்துள்ளது.

தெலுங்கானா மாநிலத்தில் நடை பெற்ற விழா ஒன்றில் உரையாற்றிய சந்திரசேகர ராவ், ஊடகங்களின் உரிமை என்கிற பெயரில் எதை வேண்டுமானாலும் செய்தியாக வெளியிடும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் குற்றம் கூறினார்.

பல ஆண்டு போராட்டங்கள் மற்றும் தியாகங்களுக்கு பிறகு தனி மாநில அந்தஸ்தை தற்போது தான் பெற்றுள்ளதாகவும் கூறிய அவர், இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள தனி மாநிலத்துக்கு அவப் பெயரை உண்டாக்கும் நோக்கில் சில தவறான செய்திகள் பரப்பப்படுவதை ஏற்க மாட்டோம் என்றும் கண்டனம் வெளியிட்டார். அதைத்தொடர்ந்துதான் அந்த மாநிலத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்துவோரை 10 அடி ஆழத்தில் புதைத்து ஒழிப்போம் என்று கடும் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தச் சூழலில் அவரது கண்டனப் பேச்சுக்கு இந்தியா முழுவதும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகளின் தலைவர்கள் இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டபோது, மாநில முதல்வர் பொறுப்பில் உள்ள ஒருவர் இது போன்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும் என்றார்கள். இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளில் கருத்துச் சுதந்திரத்துக்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். (வ)

# பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்நோக்குவதற்குத் தயார்

## இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்



கொழும்பு, செப்.12

உள்நாட்டு வெளிநாட்டு பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்நோக்கத் தயாராக உள்ளோம் என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"பயங்கரவாதம் தொடர்பிலான சகல அச்சுறுத்தல் களையும் எதிர்நோக்கும் ஆற்றல் இலங்கையில் காணப்படுகின்றது. அல்-குவைதா இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்பதனை இந்த உலகமே அறியும். தென் ஆசிய நாடுகளில் அந்த அமைப்பு ஊடுருவப் போவதாக அறிக்கைகள் வெளியிட்டிருந்தன.

நாட்டின் பாதுகாப்பு குறித்து அரசு தெளிவான தந்திரோபாயத் திட்டங்களை வகுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சு இந்த தந்திரோபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

எந்தவொரு பயங்கரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் இலங்கை இராணுவத்திடம் காணப்படுகின்றது.

உள்நாட்டு வெளிநாட்டு ரீதியான பயங்கரவாத அழுத்தங்களை எதிர்நோக்க இலங்கை எப்போதும் தயார். ஆனாலும் இலங்கையில் அல்-குவைதா அச்சுறுத்தல்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் குறைவு"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மொனோ ரயில் சேவை விரைவில் கொழும்பில்

கொழும்பு, செப்.12

கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த மொனோ ரயில் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. உலகின் தனித்துவமான போக்குவரத்து சேவையான மொனோரயில் திட்டத்தை கொழும்பிலும் நடைமுறைப்படுத்த விருப்பம் கொண்டுள்ளதாக ஹிட்டாச்சி மொனோரயில் பிரிவு அறிவித்துள்ளது.



இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானிய பிரதமருடனான வர்த்தகக்குழுவே இதனை அறிவித்துள்ளது. மொனோ ரயில் திட்டம், போக்குவரத்துக்கு மிகவும் காத்திரமான பங்கை அளிக்கும் என்றும் ஹிட்டாச்சி மொனோரெய்ல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு நகரத்தை மையப்படுத்தும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 1.3 பில்லியன் டொலர் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கான ஆய்வு நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளன. ஜப்பானின் ஜெய்க்கா திட்டம் முதல் கட்ட நிதிகளை வழங்கவுள்ளது. அதன்படி ஒருகிலோ மீற்றர் மொனோரயில் திட்டத்தை அமைக்க 57 மில்லியன் டொலர் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டம் மாலபே ஊடாக ரொபட் குணவர்த்தன மாவத்தை, பத்தரமுல்ல, தேசிய வைத்தியசாலை, உலக வர்த்தக மையம், கொழும்பு கோட்டை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களை மையப்படுத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மின்சார சபைக்கு எதிராக மனு தாக்கல்

கொழும்பு, செப்.12

இலங்கை மின்சார சபைக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் வாவியின் ஊடாக இலங்கை மின்சார சபை மேற்கொள்ளவுள்ள மின்சார பரிமாற்ற பணிகளை நிறுத்தக் கோரியே, அந்தப் பகுதி மீனவர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை எடுத்துள்ள இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

புத்தளம் வாவியின் மூலம் 1500- 2000 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. இலங்கை மின்சாரசபையின் புதிய திட்டத்தின் காரணமாக, அந்தப் பகுதியில் வாழும் குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தில் இருந்து அநுராதபுரத்துக்கான மின்சார இணைப்புத் திட்டத்தையே இலங்கை மின்சார சபை, புத்தளம் வாவியின் ஊடாக மேற்கொள்ளவுள்ளது. (ற)



கொழும்பு நகரின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் 450 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சால் நேற்றுமுன்தினம் கொழும்பு மாநகரசபையிடம் கையளிக்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சு வளாகத்தில் இடம் பெற்ற இது தொடர்பான நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்த வாகனங்களை கையளித்தார்.

கொழும்பு நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தடுத்தல், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கிலேயே இவ்வாகனங்கள் வழங்கப்பட்டன. (ற)

# 4 வயதுச் சிறுமி கடத்தல்; சந்தேகத்தில் பூசகர் கைது

கொழும்பு, செப்.12

கனேவத்தை, அம்பகொலவெள பிரதேசத்திலிருந்து நான்கு வயது சிறுமியொருவர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர், நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், குறித்த சிறுமியின் வீட்டுக்கு வந்து சென்ற பூசகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், மேலும் சிலரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பமாரா கேஷனி பண்டார என்ற நான்கு வயது சிறுமியொருவர் கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை, தனது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருந்த போது, கடத்தப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையிலேயே, மேற்படி சந்தேகநபர், கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டார். சிறுமியின் தாயாரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்ட பொலிஸார், சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற)

# ஜனாதிபதியின் பணியாளருக்கு 1,340 கோடி ரூபா நிதி செலவு

## சுகாதாரத்துறைக்கு செலவிடும் தொகையைவிட இது அதிகம் என அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.12

நாட்டின் சுகாதாரத்துறையை விடவும் ஜனாதிபதியின் பணியாளர்களுக்கு அதிகம் செலவிடப்படுகின்றது என்று சாடியுள்ளார் ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"நாட்டின் மொத்த சனத் தொகை இரண்டு கோடியாகும். சுகாதாரத்துறைக்கு ஆயிரத்து 100 கோடி ரூபா செலவிடப் படுகின்றது. ஜனாதிபதியின் பணியாளர்களது எண்ணிக்கை ஆயிரத்து 348 பேராகும். அவர்களுக்கான செலவு ஆயிரத்து 340 கோடி ரூபாவாகும்.

ஜனாதிபதிச் செயலணியின் தலைவர் வேறு ஆறு அரச நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்து வருகின்றார்.



நபர் ஒருவரால் இத்தனை பதவிகளை வகித்து தமது கடமைகளை ஆற்ற முடியுமா என்பது கேள்விக்குறியே"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஊவா உதவிகள் நிறுத்தப்படின் அரசில் இருந்து விலகுவேன்

## இப்படிக் கூறுகின்றார் மேர்வின் சில்வா

கொழும்பு, செப்.12

தேர்தல்கள் காரணமாக ஊவா மாகாண மக்களுக்கு வறட்சி நிவாரணங்கள் நிறுத்தப்படுமாக இருந்தால், தாம் அரசில் இருந்து விலகுவேன் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் மேர்வின் சில்வா.

களனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"ஊவா மாகாண மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டியது கட்டாயம்.

ஆனால் அங்கு தேர்தல் நடைபெறுவதைக் காரணம் காட்டி இந்த நிவாரணங்கள் வழங்கல் நிறுத்தப்பட்டால், நான் அரசில் இருந்து விலகி விடுவேன்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# படகு கவிழ்ந்து இரு மீனவர் சாவு



கொழும்பு, செப்.12

கொழும்பு முகத்துவாரம் கடலில் படகொன்று கவிழ்ந்ததில் இரண்டு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த படகில் இருந்த மேலும் இரண்டு மீனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காப்பாற்றப்பட்ட மீனவர்களில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த மீனவர்கள் பயணித்த படகில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு கடல் அலையில் சிக்கிக் கவிழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# நேரடி ஊழல்கள் காரணமாகவே வெளிநாட்டு முதலீடு இல்லை

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண தெரிவிப்பு

கொழும்பு, செப்.12

நேரடி ஊழல் மோசடிகள் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவதில்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண.

நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து அவர் அங்கு கூறியுள்ளதாவது,

"எதிர்க்கட்சிகள் சத்தம் போடுவதாலோ அல்லது ஊடகங்களில் ஊழல் பற்றி செய்தி வெளியிடப்படுவதாலோ வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்கவில்லை. நாட்டில் இடம்பெற்று வரும் பெரியளவிலான நேரடி மோசடிகள், ஊழல்களே முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய தயங்குவதற்கான காரணமாகும்.

போரின் பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்திருக்க வேண்டும். வியட்நாம் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையில் ஏன் முதலீடுகளை அதிகரிக்க முடியாது. வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க முடியாமைக்கு சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைவும் ஒரு பிரதான காரணியாகும்.

விரைவில் நாம் ஆட்சியை அமைப்போம். அதன் பின்னர் நேரடி முதலீடுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை



எடுப்போம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)




எதுக்கெல்லாம்
# நஷ்டஈடு
கேட்கிறாங்க!

விமானத்தில் இருந்து வெளியேறுமாறு கூறியதாலேயே தனது மனைவி உயிரிழுந்தார் என்று கூறி நபரொருவர் மூன்று விமான நிறுவனங்களின் மீது, வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தனது மனைவியின் இழப்புக்கு நஷ்டஈடாக 6 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுத் தருமாறும் குறித்த நபர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;-

வில்மா சோல்டெஸ் எனும் பெண் 185 கிலோகிராம் உடல் எடை உடையவர். இவர் கடந்த 2012 ஆம் ஆண்டு ஹங்கேரியில் அமைந்துள்ள அவருடைய விடுமுறை இல்லத்தில் உயிரிழந் துள்ளார். நீரிழிவு மற்றும் சிறுநீரக நோயால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் நியூ யோர்க்கில் உள்ள வைத்திய சாலையில் சிசிச்சை பெற்று வந்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள பிராங்ஸ் எனும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர் தனது கணவருடன் விடுமுறைக்காக ஹங்கேரிக்கு வந்தபோது, விமானத் தில் இருக்கையின் அளவு இவருக்கு போதியதாக இல்லாமையால் இரண்டு இருக்கைகளை இவருக்கும், ஒரு இருக்கை குறித்த பெண்ணின் கணவருக்குமாகப் பதிவு செய்து பயணித்துள்ளனர்.

இதன்பின்னர், மீண்டும் நியூயோர்க்குக்கு பயணிப்பதற்காக விமானப் பதிவுகளை மேற்கொள்ள விமான நிறுவனங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது, குறித்த பெண்ணின் நிறையும் உடலின் பருமனும் அதிகம் என்பதனால் இவர்களுடைய பதிவை அனைத்து விமான நிலையங்களும் நிராகரித்துள்ளன.

எனினும் இறுதியாக விமானமொன்றில் இருக்கையொன்றை பெற்றுக் கொண்ட போதும், குறித்த பெண் தனது சக்கர கதிரையில் இருந்து விமானத்தின் இருக்கையில் அமருவதற்கு தடுமாறியதைக் காரணமாகக் கூறி, அந்த பெண்ணை வெளியேறுமாறு விமானி கூறியுள்ளார்.

அதனையடுத்து ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக, அந்த பெண் தனது விடுமுறை இல்லத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, தனது மனைவியின் உயிரிழப்புக்கு குறித்த விமான சேவை நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும், தனது மனைவியின் மறைவால் ஏற்பட்ட வேதனையின் காரணமாகவே தான் விமான நிறுவனங்கள் மீது 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ததாக அவரது கணவர் ஜெனோஸ் தெரிவித்துள்ளார்.

## இவர்களில் வெல்லப்போவது யார்?



தமிழ், ஹிந்தி பட உலகில் நயன்தாரா, திரிஷா, காஜல் அகர்வால், அனுஷ்கா, ஹன்சிகா, சமந்தா, சுருதிஹாசன் போன்றோர் முன்னணி கதாநாயகிகளாக உள்ளனர்.

இவர்களில் சுருதிஹாசன், சமந்தா இடையே மட்டும் கவர்ச்சிப் போட்டி நடக்கிறது. அரைகுறை ஆடையிலும், நீச்சல் உடையிலும் தாராளம் காட்டுகிறார்கள். சுருதிஹாசன் ஹிந்தியில் விலைமாதுவாக படுக்கையறை காட்சியில் நெருக்கமாக நடித்து பரபரப்பு ஏற்படுத்தினார். தெலுங்கு படங்களில் ஆபாசமாகக் குத்தாட்டமும் ஆடி வருகிறார். சுருதியின் கவர்ச்சி படங்கள் இணையத் தளங்களில் பரவி வருகின்றன. கவர்ச்சிப் படங்களை படக்குழுவினர் வெளியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுருதிஹாசன் முறைப்பாடும் செய்துள்ளார்.

சுருதியை போல் சமந்தாவும் கவர்ச்சிக்கு இறங்கியுள்ளார். அஞ்சான் படத்தில் நீச்சல் உடையில் தோன்றி திரையுலகினரை அதிர வைத்தார். உச்சகட்டமாக இருவரும் தற்போது ஆங்கில பத்திரிகைகளுக்கு கவர்ச்சி 'போஸ்' கொடுத்தும் அசத்தி உள்ளனர். இனி வரும் படங்களில் இருவரையும் இன்னும் கவர்ச்சியாகப் பார்க்கலாம்.



## பற்றில்லாத புண்ணியத்துக்கும் பயன் இல்லை

புண்ணியம், பாவம் இரண்டுமே பிறவியை அளிப்பன. கர்ணன் தான தர்மங்கள் செய்யும்போது பயன்கருதியே செய்தான். கண்ணனுக்குத் தான் செய்த புண்ணிய பலன் அனைத்தையும் தானம் செய்த போது பற்றில்லாமல் அதாவது எதையும் எதிர்பார்க்காமல் செய்தான். இதனால் இந்தத் தானத்துக்கு எந்தப் பலனும் விளையவில்லை.

புண்ணியம் செய்தவர் மேலான பிறவியையும், பாவம் செய்தவர் கீழான பிறவியையும் அடைவார்கள். எந்தப் புண்ணியமும் விளையாத நிலையில் கர்ணன் இறைவனுடைய திருவடியை அடைந்தான்.

ஞானக்கதிர்

## ரிலாக்ஸா வாசியுங்க

ஒரு கணினி நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாக ஒரு நேர்முகத் தேர்வு. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக மின்னஞ்சல் முகவரி கேட்டார்கள். மின்னஞ்சலா ? எனக்கு மின்னஞ்சல், இணையம் எல்லாம் தெரியாதே, என்றான் துடைக்க வந்தவன்.

"கணினி நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு மின்னஞ்சல் முகவரி இல்லையா? ச்சே!" என்று அவனை அனுப்பி விட்டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் 10 டொலர்கள் இருந்தன. அதைக் கொண்டு சந்தையில் வெங்காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 டொலர் லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம் வாங்கினான், மீண்டும் விற்றான். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டான்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பது சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவனிடம் பேச வந்திருந்தார். அவனுடைய மின்னஞ்சல் முகவரி கேட்டார்.

வியாபாரி, மின்னஞ்சல் முகவரி இல்லை என்று பதிலளிக்க, மின்னஞ்சல் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா..? உங்களுக்கு மட்டும் மின்னஞ்சல், இணையம் எல்லாம் தெரிந்திருந்தால் ?, என்று ஆச்சரியமாகக் கேட்டார் வங்கி ஊழியர். அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கணினி நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன், என்றார் வியாபாரி.

## நச்சுன்னு ஒரு



மனைவி: நான் செத்துப்போயிட்டா, என்ன செய்வீங்க?
கணவன்: எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும்.

மனைவி: நான் செத்தா இன்னொரு கல்யாணம் செய்வீங்களா?
கணவன்: பைத்தியம் என்ன வேண்டுமானாலும் செய்யும்.

வேலைக்காரி : உங்கள் பையன் என்னைப் பார்க்கின்ற பார்வையே ஒரு மாதிரி இருக்கு
முதலாளி : கவலைப்படாதே.... சித்தி என்கிற முறையில் பார்த்திருப்பான்.

ஒருவன் கடவுளிடம்: கடவுளே என்னுடைய மனைவியை ஏன் மிகவும் அழகாகப் படைத்திருக்கிறாய்?
கடவுள் : அப்போ தான் நீ அவள் மேல் அன்பாக சந்தோஷமாக இருப்பாய்.
அவன் : அதுசரி தான், அதே சமயம் அவளை ஏன் வடிகட்டின முட்டாளாக படைத்திருக்கிறாய்?
கடவுள் : அப்போதுதான் அவள் உன் மேல் அன்பாக இருப்பாள்.

முடி வெட்ட வந்த வழுக்கைத் தலைக்காரர், சலூன்காரரிடம்: என் தலையிலே தான் முடி மிகவும் குறைவாக இருக்கு. முடி வெட்டுறதுக்குப் பாதி பணம் வாங்கக் கூடாதா?
சலூன் கடைக்காரர் : உங்களுக்கு முடி வெட்டுறதுக்காக நான் பணம் வாங்கவில்லை. முடியைத் தேடிக் கண்டு பிடிக்கத்தான் பணம் வாங்குகிறன்.

## விவேகானந்தர் சிந்தனையிலிருந்து....



"மனம் தனது முயற்சியை அடையப் பல நிலைகளில் நின்று முயல்கிறது. முதன் முதலாக, அது தூலத்தைப் பின்பற்றுகிறது, படிப்படியாக சூட்சுமத்துக்குச் செல்கிறது. எல்லோரும் எமது சகோதரர்கள் என்னும் தன்மையை நாம் எப்படி அடைகிறோம் என்பதைப் பார்ப்போம். முதலில் இந்தச் சகோதரத் தன்மையை ஒருசிறுகுழுவினுள் உணர்கிறோம். பிறருக்கு அல்லாமல் தனக்கென மட்டுமே வாழும் குறுகிய இரக்கமற்ற ஒரு குழுவில் தான் இந்தச் சகோதரத் தன்மை, முதலில் தென்படுகிறது. ஆனால், படிப்படியாக மிகவும் விரிவான நிலையை அடைகிறது.


### சகோதரத்தன்மை விரிவடையுமொன்று

பிறகு பண்பு பற்றிய நுண்ணிய உலகை அடைகிறோம்."

"ஆங்கிலேயர்களான நாங்கள் பாராட்டும் பல குழுக்கள் இறந்துவிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஆனால் எங்களைப் பற்றி பிரெஞ்சுக் காரர்கள், 'இங்கிலாந்தில் பல பிரிவுகளிலிருந்தாலும் அங்கு முழுவதும் வீசுவது ஒரே மணமே' என்று கூறுவதை நீங்கள் அறிந்திருப்பீர்களே!'

"ஆனால், அவை மறைந்துதான் தீர வேண்டும். அடிப்படை இல்லாமல் அவை எழுப்பப்பட்டுள்ளன. அவற்றின் உயிர் நாடி அழியாது நிற்கும். ஆனால் அதுவும் இன்னோர் இயக்கத்தில் கரைந்து விடலாம். 'ஒரு மதத்தில் பிறப்பது நல்லது தான்' ஆனால் அதுவே நிலையென்று அதிலேயே உயிரை விடுவது நல்லதல்ல' என்பது உங்களுக்குத் தெரிந்தது தானே!"

# சீனாவின் முதலாவது விண்வெளி நிலையம் 2022 ஆம் ஆண்டில்



சீனா தனது முதல் விண்வெளி நிலையத்தை 2022 ஆம் ஆண்டு நிறுவப்போவதாகக் கூறியிருக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே, விண்வெளி நிலையம் அமைக்கும் வேலைகளைத் தொடங்கப்போவதாக சீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால் இப்போது அவர்கள் இது குறித்த விவரமான கால அட்டவணையை வெளியிட்டிருக்கிறார்கள்.

புதிய விண் ஆய்வுக் கூடம் ஒன்று இரண்டாண்டுகளில் ஆரம்பிக்கப்படும். அதன் பின்னர் ரொக்கெட்டுகள் மற்றும் பிற அமைப்புகள் உருவாக்கப்படும்.

சீன விண்வெளி வீரர்கள் ஏற்கனவே விண்வெளியில் கலன்களை பொருத்தும் நடவடிக்கைகளைப் பயிற்சி செய்து வருகின்றனர்.

சீனா ஒரு விண்வெளி சக்தியாக உருவாக வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாகச் சீனாவின் தலைவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஆனால் அதற்குத் தேவைப்படும் தொழில்நுட்பம் குறித்த விடயத்தில், ரஷ்யா மற்றும் அமெரிக்காவைவிட , சீனா பின் தங்கியிருக்கிறது.




## ஸ்மார்ட் கைபேசியை கட்டுப்படுத்தும் புதிய சாதனம்

மோட்டோ எக்ஸ் மற்றும் மோட்டோ ஜி ஆகிய ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளதாக மோட்டோறோலா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் மற்றுமொரு சாதனத்தையும் அந்த நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

மோடோ ஹென்ற் எனப்படும் இந்தப் புதிய சாதனமானது ஸ்மார்ட் கைபேசிகளை குரல் வழி கட்டளைகள் மூலம் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. மேலும் புளூடூத் வயர்லெஸ் தொழில் நுட்பம் மூலம் செயற்படக்கூடிய இந்தச் சாதனத்தின் விலையானது 149.99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## மிகச்சிறிய வயர்லெஸ் கீபோர்ட்

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக புதிதாக அறிமுகமாகும் சாதனங்களின் அளவு சிறிதாகிக் கொண்டே செல்கின்றது.

இவற்றின் மற்றுமொரு அங்கமாக பொக்கெட்டில் வைத்து பயன்படுத்தக்கூடிய Flyshark எனும் வயர்லெஸ் கீபோர்ட் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்த கீபோர்ட்டானது ரப்லெட் மற்றும் ஸ்மார்ட் கைபேசி பாவனையாளர்களுக்கு பெரிதும் உதவக்கூடியதாகக் காணப்படுகின்றது.

இதேவேளை அன்ரோயிட், ஐ.ஓ.எஸ். சாதனங்களில் மட்டுமே இந்த கீபோர்ட் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




## அப்பிளின் புதிய வரவு ஐபோன் 6 மற்றும் ஐபோன் 6 பிளஸ்

பலரும் எதிர்பார்த்த அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் 6 மற்றும் 6 பிளஸ் (6+), கலிபோர்னியாவில் உள்ள குபர்டினோ நகரில் நடைபெற்ற பிரமாண்ட நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.

ஐபோன் 6 மொடல்களை அறிமுகப்படுத்தி, அந்தநிறுவனத்தின் சி.இ.ஓ., பேசுகையில், இன்று ஐபோன் 6 மற்றும் 6 பிளஸ் மொடல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டு மாடல்களும் மெலிதாக இருக்கும். ஐபோன் 6 போனின் டிஸ்பிளே 4.7 இன்ச் என்ற அளவிலும், 6 பிளஸ் போன் டிஸ்பிளே 5.5 இன்ச் என்ற அளவிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் போன்களில் ரெட்டினா எச்டி டிஸ்ப்ளே உள்ளது.

இந்த போன்கள் மற்றைய போன்களை விட 25 சதவீதம் வேகமாக இருக்கும். இந்த போன்கள் வளைவான முனை கொண்டதாக இருக்கும். ஐபோனுக்காக 1.3 லட்சம் அப்ளிகேசன்கள் உள்ளன. அதிகமாக விற்பனையாகும் ஸ்மார்ட்போன்கள் ஐபோன்கள்தான். இன்றைய நாள் ஐபோன்கள் வரிசையில் மிகப்பெரிய சாதனை எனக் கூறினார்.

## MeMo Pa- 7 டேப்லட்

ஆசஸ் (Asus) நிறுவனம் மீமோ பா-7 (MeMo Pa- 7) எனும் 1.83 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய குவாட் கோர் இன்ரெல் ஏரொம் இசட் 3560 64- பிற் புறொசெஸ்ஸர் (Quad Core Intel Atom z 3560 64- bit Processor) இணை உள்ளடக்கிய புத்தம் புதிய டேப்லட்டை அறிமுகம் செய்துள்ளது.

இந்த டேப்லட் பிரதான நினைவகமாக 2 ஜிபி ரம் (2 GB RAM) மற்றும் 16GB அல்லது 32 GB சேமிப்பு நினைவகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இவற்றுடன் 7 அங்குல அளவு 1920 X 1200 பிக்செல் ரிசொலூசன் (Pixel Resolution) உடைய HD தொடு திரையினைக் கொண்டுள்ளதுடன், அன்ரொயிட் 4.4 கிற்காற் (Android 4.4 KitKat) இயங்குதளம், 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## தரவிறக்கத்தில் சாதனை படைத்தது பேஸ்புக் அப்பிளிக்கேஷன்




தற்போது பில்லியன் கணக்கானவர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சமூகவலைத்தளமான பேஸ்புக், மொபைல் அப்பிளிக்கேஷன்களை அறிமுகப்படுத்தியுள்ளமை தெரிந்த விடயமே.

இந்த நிலையில் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய மொபைல் சாதனங்களுக்காக உருவாக்கப்பட்டு கூகுள் பிளே ஸ்ரோர் (Google Play Store) தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அப் பிளிக்கேஷன் ஆனது தரவிறக்கத்தில் சாதனை படைத்துள்ளது. அதாவது இதுவரை ஒரு பில்லியன் தடவைகள் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு முதல் Google Play Services, Google Maps, Gmail மற்றும் YouTube அப்பிளிக்கேஷன்கள் இவ்வாறு ஒரு பில் லியன் தடவைகளுக்கு மேல் தர விறக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சொகுசு ரயில் சேவை
Rs. 1690/- ONLY One Way
யாழ்/ கொழும்பு/ யாழ்
A/C | WI-FI | Toilet வசதி
இலவசம்
Special Tour Packages Available
MANOJ EXPRESS SERVICE
0777 517019 | 0772293206
31, Vihara Lane, Wellawatte
80, JMC Building, Kasthuriyar Road, Jaffna

# அக்கரைப்பற்று கடற்கரை மக்களுக்கு குடி தண்ணீர் திட்டம் ஆரம்பித்து வைப்பு

அக்கரைப்பற்று, செப். 12
அக்கரைப்பற்று சமூக சேவைகள் அமைப்பான பொலிகனினால் மக்களின் நன்மை கருதி அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்துக்கு சுத்தமான குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.
பொலிகன் அமைப்பின் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான என்.ஜமால்டீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வை குடி தண்ணீர் விநியோகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லாஹ் அஹமட் ஸகி கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இறைவாசகங்கள் அடங்கிய பெயர்ப் பலகைகளில் ஒன்றை திரை நீக்கம் செய்துவைத்தார்.
அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை உரையாற்றும் போது அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தை மாநகர சபை முதல்வரின் உதவியுடன் கடற்கரை வீதியை அகலமாக்கி கொங்கிறீட் வீதியாக நிர்மாணித்து அதற்கு மின்சாரமும் வழங்கப்படும் எனத் தெரிவித்ததுடன் குறித்த பிரதேசத்தில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்கவுள்ளதாகவும், பிரதேச மீனவர்களின் நன்மை கருதி மீனவர் தங்கும் இடங்களை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் பொலிகன் அமைப்பின் ஆலோசகர்களின் ஒருவரான கலாநிதி எம்.ஏ. முஸாதிக், அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் கே.எல்.எம்.சறூக், வங்கி முகாமையாளர் சுமட், வருமான வரி உத்தியோகத்தர் எஸ்.ரீ.அலாவுடீன், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் வை.பி.இக்பால், விவசாய உத்தியோகத்தர் ஏ.எல். முபாறக் காணி உத்தியோகத்தர்ஏ.எல்.எம். அன்ஸாரி மற்றும்பொலிகன்அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (வ-10)

## ஞானச்சுடர்' சஞ்சிகையின் 200 ஆவது இதழ் வெளியீடு

வடமராட்சி, செப்.12
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆன்மிக சஞ்சிகையின் 200 ஆவது இதழ் மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடை பெறவுள்ளது.
இந்தநிகழ்வில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையைத் தொடர்ந்து 200 ஆவது மலர் வெளியீட்டு வைக்கப்படும். சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆசிரியர் க.ஸ்ரீசந்திரனும், மதிப்பீட்டுரையை பிரபல எழுத்தாளர் தெணியானும் நிகழ்த்துவார்கள். ஞானச்சுடர் சஞ்சிகைக்கு ஆக்கங் களை வழங்கிய எழுத்தாளர்களும் கௌர விக்கப்படுவர். (வ-173)

## தரவட்டம்

தென்மராட்சி, செப்.12
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சங்கீத பாட ஆசிரியர்களுக்கான தர வட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

* * *

வடமராட்சி, செப்.12
வடமராட்சி வலயப் பாடசாலைகளில் பின்வரும் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக தரவட்டச் செயலமர்வு இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புலோலி மெ.மி.த. பாடசாலையில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
வணிகம், கணக்கியல், பொருளியல், கடல்வளம், மனைப்பொருளியல், விவசாயம், வடிவமைப்புத், தொழில் நுட்பம், செயன்முறைத் தொழில் நுட்பம்ஆகிய பாடநெறிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் பு.நந்தகுமார் கேட்டுள்ளார். (வ-108)

## வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியம் மூதூரில் நடத்திய ஒன்றுகூடல்



திருமலை, செப்.12
நல்லிணக்கத்துக்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியம் ஏற்பாடு செய்த முஸ்லிம் மற்றும் பௌத்த சமயத் தலைவர்களின் ஒன்று கூடல் நேற்று முன்தினம் புதன் கிழமை மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியில் இடம்பெற்றது.
சமயங்களுக்கு இடையில் புரிந்துணர்வை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப் பட்ட இந்தநிகழ்வில் நல்லிணக்கத்துக்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் தலைவர், வெலியமுவ பொத்தான பியரத்ன நாயக்க தேரர்,அலுவிகாரை விமலரத்ன நாயக்க தேரர்,அம்பகஸ் வெவ தம்மரத்ன நாயக்க தேரர், மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி பிரதி அதிபர் அஷ்யெக் கே.எம். ஹரீஸ் நத்வி , கந்தளாய் நஜா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்யெக் ஏ.ஆர்.எம். நஸீர் நத்வி, நல்லிணக்கத்துக்கான வடக்கு, கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் முக்கியஸ்தர் அஷ்யெக் தஸ்ரீக் நத்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (வ-40)


## விபத்துக்கள்

**தென்மராட்சி**
நாவற்குழி தச்சன்தோப்பு ஏ–9 வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அவற்றை ஓட்டிச் சென்ற இருவரும் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.
பொதுமக்களின் அழைப்பின் பேரில் மருத்துவமனை அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்த இருவரையும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு ஏற்றிச் சென்றது.
மறவன்புலோவைச் சேர்ந்த சிவராசா தினேஸ்குமார் (வயது–31), தச்சன்தோப்பைச் சேர்ந்த கந்தையா சுகந்தன் (வயது–31) ஆகியோரே விபத்தில் காயமடைந்தவர்களாவர்.
குறித்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ–9)



**தென்மராட்சி**
தென்மராட்சி, செப்.12
கடையில் பொருள்கள் வாங்குவதற்கு மூன்று சக்கர சைக்கிளில் சென்ற மாற்றுத் திறனாளியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது.
சம்பவத்தில் மாற்றுத் திறனாளியும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு நுணாவில் மத்தி ஏ–9 வீதியில் இடம்பெற்றது.
2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஷெல் வீச்சில் காயமடைந்து கால் நடக்க முடியாத நிலையில் மூன்று சக்கர சைக்கிளில் தனது காலத்தைக் கழிக்கும் நுணாவில் மத்தியைச் சேர்ந்த செல்லன் யோகராசா (வயது–70) என்பவர் அந்தப் பகுதியில் உள்ள கடையில் பொருள்கள் வாங்குவதற்காகச் சென்றுள்ளார்.
அவ்வேளை வேகமாக வெளிச்சமின்றி வந்த மோட்டார் சைக்கிள் இருட்டான பகுதியில் வைத்து முன்னால் சென்று கொண்டிருந்து மூன்று சக்கர சைக்கிளை மோதித் தள்ளியது. இதனால் தூக்கி வீசப்பட்ட மாற்றுத் திறனாளிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதுடன் அவர் பயணித்த சைக்கிளும் சேதமடைந்தது.
மூன்று சக்கர சைக்கிளை மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் தூக்கி வீசப்பட்டு கையில் பாதிப்பு ஏற்பட்டது. மிருசுவில் உசனைச் சேர்ந்த கந்தையா செல்வரத்தினம் (வயது–66) என்பவரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.
குறித்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (வ–9)

## குற்றங்களும் கைதுகளும்



**யாழ்ப்பாணம்**
நீர்வேலியில் தண்ணீர் இறைக்க பயன்பட்டு வந்த மின்மோட்டார் இனந் தெரியாதோரால் வீடு புகுந்து திருடப்பட்டமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
நீர்வேலி மத்தி, செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலடியை அண்மித்து நேற்று முன்தினம் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
எனினும் திருடப்பட்ட இயந்திரம் இதுவரை மீட்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.(வ–4)

**தென்மராட்சி**
தாம் செலுத்திச் சென்ற உழவு இயந்திரத்தால் நபரொருவரை மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 18 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பகுதியில் உழவு இயந்திரம் மோதி ஒருவர் மரணமான சம்பவம் தொடர்பான வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இவ்விதம் சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

**களுவாஞ்சிக்குடி**
களுவாஞ்சிக்குடி, செப், 12
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா ஜெகதீஸ்வரன் என்பவரே பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பொலிஸ் சார்ஜன்ட் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் என்றும் அவரது மகனும் த.வி.பு. இயக்கப் போராளியாக இருந்து உயிரிழந்தவர் என்ற தகவலின் பின்னணியிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (வ–10)

**மன்னார்**
மன்னார் மூர்வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து பொருள்களை சூறையாட முற்பட்ட 3இளைஞர்களை அந்தப்பகுதி கிராம மக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-
மன்னார் மூர் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றின் கதவுக்கு போடப்பட்டிருந்த பூட்டை உடைத்த குறித்த இளைஞர்கள் கடையினுள் சென்று முன் பகுதியில் வைக்கப்பட்டிருந்த குளிர் சாதனப்பெட்டியைத் திறந்து அதில் இருந்த ஐஸ்கிறீமை எடுத்து குடித்துள்ளனர்.
அதன்பின் தமது திருட்டு நடவடிக்கையை ஆரம்பித்த போது குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளரது மகனும், அவருடைய இரு நண்பர்களும் பிறிதொரு இடத்தில் இருந்து தமது கடைப் பகுதியை நோக்கி வந்த போது சந்தேகத்துக்கு இடமான முறையில் சிலர் கடைக்கு முன்னால் நிற்பதை கண்டு அருகில் சென்றுள்ளனர்.
இதன்போது திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த ஐவரும் தாம் வைத்திருந்த கூரிய ஆயுதங்களினால் அவர்கள் மீது கடுமையாகத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.
குறித்த மூவரும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையிலும் உடனடியாக உறவினர்களுக்கு தகவல் வழங்கியதையடுத்து மூர்வீதி கிராம இளைஞர்கள் ஒன்றிணைந்து அந்தப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
இதன்போது அருகில் இருந்த விடுதி ஒன்றில் இருந்து குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் ஒருவர் பிடிபட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் பயனாக மேலும் இருவர் மாட்டிக் கொண்டனர். எனினும் மீதியான இருவர் தப்பிச் சென்றனர். விசாரணைகளை மேற்கொண்ட மூர்வீதி கிராம இளைஞர்கள் குறித்த மூவரையும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். காயமடைந்த மூவரும் மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். கைது செய்யப்பட்ட திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று இளைஞர்களும் மட்டக்களப்பு ஏறவூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ–56)

**காத்தான்குடி**
காத்தான்குடி – மஞ்சந்தொடுவாய் குவைட் சிட்டி பகுதியில் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
குறித்த சிறுமி மஞ்சந்தொடுவாய் ஜின்னா வீதியைச் சேர்ந்த எம்.ஆர்.சஹறாப்தீன் பாத்திமா சீமா (வயது – 9) என்று இனங் காணப்பட்டுள்ளார். சிறுமியின் சடலம் பையில் இட்டு வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சிறுமியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
சிறுமியின் கொலை தொடர்பாக சந்தேகநபரொருவரை அம்பாறை மாவட்டம் பதியத்தலாவையில் வைத்து கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (வ–10)

## கைப்பணிப் பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், செப்.12
பனை அபிவிருத்தி சபையின் உரும்பிராய் மற்றும் இணுவில் பகுதியில் உள்ள பயிற்சி நிலையங்களில் கைப்பணி பயிற்சியை நிறைவு செய்த 60 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கல் மற்றும் கைப்பணி கண்காட்சி என்பனவும் இடம்பெறும்என்றுசபையின்தலைவர் பசுபதி சிவரெத்தினம் தெரிவித்தார்.
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் இருளன் கிராமம், இணுவில் கிழக்கு போன்ற பகுதிகளில் உள்ள பயிற்சி நிலையங்களில் பயிற்சியை நிறைவு செய்தோரில் 60 பேருக்கு இந்தச் சான்றிதழ்வழங்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வில் பாரம்பரிய சிறு கைத்தொழில் முயற்சிகள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவதுடன் கண்காட்சியையும் ஆரம்பித்தும் வைப்பார். (வ-17)

# மீள்குடியேற்ற வீடமைப்பில் இணைய முடியாத நிலை

## வளலாய் மேற்கு மீள்குடியேற்ற செயற்குழு மனு

அச்சுவேலி,செப.12
வளலாய் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியை யாவது உரிய முறையில் பயன்படுத்தி விவசாயம் செய்யவோ வீடமைப்பு திட்டத்தில் இணைந்து கொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக வளலாய்ப்பகுதி மக்கள் கவலை தெரிவிப்பதாக வளலாய் மேற்கு மீள்குடியேற்ற செயற்குழு வலி.கிழக்கு பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இதுதொடர்பாக வளலாய் மீள்குடியேற்ற செயற்குழு அனுப்பி வைத்துள்ள மனுவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வளலாய்ப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெறவில்லை. இதனால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலும் வெடிபொருள் அபாயம் குறித்த எச்சரிக்கை அறிவித்தல் பலகைகள் நடப்பட்டு மக்கள் நடமாடவோ பயன்படுத்தவோ முடியாமல் தடைசெய் யப்பட்ட நிலையில் உள்ளது. இதன் மூலம் முன்னர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட தோட்ட நிலங்கள் மற்றும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் உரியமுறையில் பயன்படுத்த முடியாமல் முடக்கப்பட்டுள்ளன. கிணறுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. மக்கள் வீடு அமைக்க கூடிய பகுதிகளிலும் கூட வெடி பொருள்கள் உள்ள பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதால் வீட்டுத் திட்ட உதவியையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அந்தப் பகுதி மக்கள் உள்ளனர். வெடிபொருள்கள் உண்டு என்று பகிரங்க அறிவித்தல் செய்த பகுதிகளில் இருந்து வெடிபொருள்களை துரிதமாக அகற்றி அந்நிலங்களை மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்காமல் இருப்பது மக்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. இந்த விடயத்தில் மேலும் காலதாமதம் செய்யா மல் பொதுமக்கள் தமது பகுதி நிலங்களைப் பயன்படுத்த வசதி செய்யுமாறு கோரியுள்ளனர். அத்துடன் இந்த விடயம் தொடர்பாக பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகளை நேரில் சந்தித்தும் தமது கிராமத்தின் சமகால நிலைப்பாட்டை விளக்கி கூறி இருப்பதாக வளலாய் மீள்குடியேற்ற செயற்குழுவின் தலைவர் எஸ்.துரைரத்தினம் தெரிவித்தார். (வ-11)

## 10 நாள்களில் விலங்கு கடிக்கு இலக்காகியோர் 36 பேர்

சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் கடந்த பத்து நாள்களில் 36 பேர் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றியுள்ளனர். இவர்களில் 27 பேர் நாய்களினாலும் 9 பேர் பூனைகளாலும் கடியுண்டதற்காக தடுப்பூசி ஏற்றியுள்ளனர். இதேவேளை - கடந்த ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான எட்டுமாத காலப் பகுதியில் 766 பேர் விலங்கு விசர் நோய்த்தடுப்பு மருந்து ஏற்றிக் கொண்டுள்ளதாக மருத்துவ மனை புள்ளி விவரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
பட்டியல் பிரகாரம் ஜனவரியில் 82 பேரும், பெப்ரவரியில் 72 , மார்ச் 66 பேரும், ஏப்ரல் 98 பேரும், மே 100பேரும்,ஜூன் 100 பேரும், ஜூலை 137 பேரும், ஓகஸ்ட் 111 பேரும் நாய்கள், பூனைகளால் கடியுண்டு தடுப்பூசி ஏற்றியுள்ளதாக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (வ-9)



யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த திங்கட்கிழமை நடை பெற்றது. அன்றையதினம் மாலை மரி அன்னை தேர்ப் பவனியாக அந்தப்பகுதி வீதிகளூடாக வலம் வந்து மக்களுக்கு அருட்பொழிவு வழங்கினார். (வ-135)

## குருநகரிலுள்ள 'சி'தரத்திலுள்ள உணவகங்களுக்கு காலக்கெடு

யாழ்ப்பாணம்,செப்.12
குருநகர் பிரதேசத்தில் 'சி'தரத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் இரண்டு வ்ாரத்துக்குள் தமது நிலையங்களை உரிய சுகாதார முறைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் என்று பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா கேட்டுள்ளார்.
இதுதொடர்பாக அவர் தெரிவிக்கையில்;
குறித்த பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வெதுப்பகங்கள் போன்றவற்றுக்கு தரச் சான்றிதழ்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.
சகல உணவு கையாளும் நிலையங்களும் சுகாதார பகுதியினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு தரம் பேணாத நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.
குறிப்பாக 'சி' தரத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் இரண்டு வாரத்துக்குள் தமது நிலையங்களை உரியவகையில் மாற்றி அமைக்க வேண்டும்.
அவ்வாறு மாற்றி அமைக்கத் தவறும் நிலையங்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதேவேளை சில உணவு கையாளும் நிலையங்களில் அச்சுத்தாளில் பொதியாக்கப் பட்ட உணவுப் பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை உடனடியாக அழிக்கப்பட்டன.(வ-17)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பிள்ளைகள் வழியில் நிம்மதி கிடைக்கும். பெண்களுக்கு காரியங்களில் ஏற்பட்ட தடைநீங்கி திருப்தியாக வாழ முடியும். சாதுரியமான பேச்சின் மூலம் பிரச்சினைகள் தீரும். பணவரத்து திருப்தி தரும்.

**இடபம்:** எதையும் ஆராய்ந்து அதன் பின்னர் அதில் ஈடுபடும் மனநிலை உண்டாகும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். காரிய அனுகூலங்களும் உண்டாகும். மனோதைரியம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளால் பதற்றம் அடைவார்கள்.

**கடகம்:** உறவினர்களுடன் கருத்து வேற்றுமை வரலாம். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடிப்பது நல்லது. பெண்கள் எந்தவொரு வேலையில் ஈடுபட்டாலும் அதுபற்றி ஒருமுறைக்கு பலமுறை யோசித்தபின் ஈடுபடுவது நல்லது.

**சிங்கம்:** காரிய தடங்கல்கள் உண்டாகி நீங்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். மனக்கவலை நீங்கி தெளிவு உண்டாகும்

**கன்னி:** நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் நன்கு முடியும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும்.

### நாளை

**ஆவணி-28 சனிக்கிழமை**

**13.09.2014**

திதி: பஞ்சமி
பி.இ.12.10 வரை
நட்சத்திரம்: பரணி
பி.இ.12.42 வரை

சுபநேரம்:
03.03-04.33 வரை
இராகுகாலம்:
09.03-10.33 வரை
மஹா பரணி

**துலாம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை சிறப்பாகச் செய்து முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறு வார்கள். குடும்பத்தில் இருப்பவர்களால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் மூலம் அனுகூலம் உண்டாகும். பெண்களுக்கு மனக்குழப்பம் நீங்கி தெளிவான சிந்தனை உண்டாகும். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும்.

**தனுசு:** மனக்கவலை நீங்கி எதிலும் தெளிவான முடிவு எடுப்பீர்கள். செயற்பாடுகள் எதிலும் தாமதமான போக்கு காணப்படும். . வெளியூர் பயணங்கள் மனதுக்கு சந்தோசத்தை தருவதாக இருக்கும்.

**மகரம்:** கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உங்களது சிறப்பான செயல்கள் மற்றவர்களின் பாராட்டைப் பெற்றுத்தரும். எதிர்பார்த்தபடி நிதிநிலை உயரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலான பணிகளைக் கவனிக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்:** பொறுப்புகள் அதிகரிக்கும். பெண்களுக்கு எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் காரிய தாமதம் உண்டாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மீனம்:** எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரண சேர்க்கை இருக்கும். காரிய தடை, வீண் அலைச்சல் ஏற்படலாம். திடீர் கோபம் ஏற்படும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 4 | | | | | 5 |
| | | | 5 | 2 | 3 | | 6 | 8 |
| | 4 | | 7 | | | 1 | | |
| 5 | 3 | 7 | | | | | | 1 |
| 1 | | 4 | 2 | | 5 | 9 | | 3 |
| 9 | | | | | | 6 | 5 | 4 |
| | | 3 | | | 1 | | 8 | |
| 8 | 7 | | 3 | 5 | 9 | | | |
| 4 | | | | | 2 | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 4 | 9 | 3 | 1 | 5 | 8 | 2 |
| 3 | 8 | 5 | 7 | 2 | 6 | 1 | 9 | 4 |
| 1 | 2 | 9 | 8 | 5 | 4 | 6 | 7 | 3 |
| 2 | 1 | 7 | 3 | 8 | 9 | 4 | 5 | 6 |
| 6 | 9 | 3 | 5 | 4 | 2 | 8 | 1 | 7 |
| 5 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 3 | 9 |
| 9 | 7 | 2 | 1 | 6 | 5 | 3 | 4 | 8 |
| 4 | 3 | 1 | 2 | 7 | 8 | 9 | 6 | 5 |
| 8 | 5 | 6 | 4 | 9 | 3 | 7 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசமைப்பில் உள்ளதைச் செயற்படுத்த பேச்சுவார்த்தை தேவை தானா?

ஒன்றரை வருடத்துக்கு மேலாக ஸ்தம்பிதமடைந்திருக்கும் அரச தரப்பு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான செய்திகள் சமீப நாள்களாக ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன. இதனை முதலில் தொடக்கி வைத்தவர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்ததான். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அரசு தயாராக இருக்கிறது என்றும், கூட்டமைப்புத்தான் பேச்சுக்காகக் கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். இது அரச மட்டத்தில் சிறிது சர்ச்சையை ஏற்படுத்த தெரிவுக்குழு மூலம் தான் இறுதித் தீர்வு என்று அடித்துக் கூறினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. தற்பொழுது ஜனாதிபதியும் கூட்டமைப்புடனான பேச்சுகள் குறித்து வாய் திறந்துள்ளார். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளைக் கூட்டமைப்புடன் நடத் தத் தாம் தயாராக இருப்பதாகவும் மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் குறித்து கூட்டமைப்பு தம்முடன் பேசலாம் என்றும் இந்தியாவிலிருந்து வெளிவரும் "இந்து"ப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி "இந்து"ப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், இலங்கை - இந்திய உறவு, வடக்கில் உள்ள இராணுவம், சிங்களக் குடியேற்றம், ஐ.நா. விசாரணைக்குழு ஆகியவை தொடர்பாகவும் கருத்து வெளியிட்டுள்ளார். அவரது அந்தச் செவ்வியில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

13ஆவது திருத்தத்தில் உள்ள மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் குறித்து கூட்டமைப்புடன் பேசத் தயார்.

மோடி அரசுடனான எங்களுடைய உறவுகள் எவ்விதம் பயணிக்கும் என இப்போது சொல்லமுடியாது. இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம் இந்தியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாத போதே இலங்கை இந்திய உறவுகளில் மாற்றம் நிகழ்ந்து விட்டது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததில் இந்திய அரசின் பங்களிப்பை நாம் மறந்துவிட முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமரைச் சந்தித்தது குறித்து நான் சீற்றமடைந்துள்ளேன் என்று வெளியான செய்திகளை நான் மறுக்கிறேன்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் 35 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இன்னும் பல விடயங்களை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். காணி போன்ற விடயங்களை ஒரே இரவில் நடைமுறைப்படுத்த முடியாது.

வடமாகாணசபையின் நிர்வாகத்தில் நாங்கள் எந்தத் தலையீட்டையும் செய்யவில்லை. யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வட பகுதியில் இராணுவத்தின் பிரசன்னத்தை 90 சதவீதமாகக் குறைத்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றம் இடம்பெறுகிறது என்பதை நான் முற்றாக நிராகரிக்கிறேன். தமிழர்களின் நினைவுத்தூபி எதுவும் அழிக்கப்படவில்லை. இலங்கையைப் பொறுத்தவரை அதன் பிரஜைகள் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழலாம்.

நாங்கள் ஐ.நா. விசாரணைக் குழுவையும் அது உருவான விதத்தையும் நிராகரிக்கிறோம். எங்களுக்கு மறைப்பதற்கு எதுவுமில்லை என்று ஜனாதிபதி தமது செவ்வியில் தெரிவித்திருந்தார்.

இது இவ்வாறிருக்க,'13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புதுடில்லியில் கூட்டமைப்புடனான பேச்சுகளின்போது இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியிருந்தார். மன்மோகன் தலைமையிலான காங்கிரஸ் அரசும் 13 தொடர்பாக இதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தது.

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், 13ஆவது திருத்தம் இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு இலங்கையின் அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுவிட்டது. ஆகவே 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாகச் செயற்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அரசமைப்பில் இல்லாத ஒன்றைப் பெற அதாவது 13+க்குத்தான் பேச்சு நடத்தப்பட வேண்டும். அரசமைப்பில் ஏற்கனவே உள்ள ஒன்றைச் செயற்படுத்த பேச்சுக்கு வாருங் கள் என்று அழைப்பது காலத்தை விரயமாக்கும் செயற் பாடாகும். 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து பேச்சுகளை நடத்தி மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களைப் பெறுவதன் மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். ஒப்பந்தம் மூலம் உருவான வடக்கு, கிழக்கு இணைப்பு சாதாரண நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாகத் துண்டிக்கப்பட்டதாலும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்படாததாலும் எதிர்காலத் தீர்வுகளுக்கு சர்வதேச உத்தரவாதம் அவசியமாகும்.

# தொடர்கதையாக மாறியுள்ள மூதூர் கிழக்கின் அவலங்கள்



திருகோணமலை மாவட்டத்தின் தனித் தமிழ் பிரதேசமாக மூதூர் கிழக்குப் பகுதி அமைந்துள்ளது. மூதூர் கிழக்கில் கட்டைபறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, சந்தோசபுரம், சாலையூர், அம்மன்நகர், பள்ளிக்குடியிருப்பு, கூனித்தீவு, சூடைக்குடா, நவரட்ணபுரம், சம்பூர் உட்படப் பல கிராமங்கள் காணப்படுகின்றன.

குளக்கோட்ட மன்னன் இந்தப் பிரதேசத்தை ஆண்டதாக வரலாறு உண்டு. தனித்துவமான கலை, கலாசாரம், வழிபாட்டு முறைகள் மூதூர் கிழக்குப் பகுதிக்கு மகுடம் சூட்டுகின்றன. 2006 ஆம் ஆண்டு இடம் பெற்ற போருக்கு முன்னர் மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் ஆட்சி இடம்பெற்றது. திருகோணமலை மாவட் டத்தில் தமிழ் மக்களின் வரலாற்றுச் சான்றுகள், கல்வெட்டுக்கள் என பல முக்கிய தொல்பொருள்கள் மூதூர் கிழக்கில் தான் உண்டு. இப்படிப்பட்ட ஒரு பிரதேசம் 2006 ஆம் ஆண்டு போரின் போது போரின் பெயரால் அழிக்கப்பட்டது. மக்கள் அன்று ஷெல் தாக்குதலால் வெளியேற்றப்பட்டனர். வெளியேற்றப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் 2008 ஆம் ஆண்டு மீளக்குடியமர்வு என்ற பெயரில் மீள்குடியேற்றப்பட்ட போதும், அரசால் அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு சூடைக்குடா, கூனித்தீவு, நவரட்ணபுரம் பகுதி மக்களும் மீளக்குடியேற்றப்பட்டனர். சூடைக்குடாவில் 86 குடும்பங்களும், கூனித்தீவில் 89 குடும்பங்களும், நவரட்ணபுரத்தில் 136 குடும்பங்களும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன. குடியேற்றப்பட்ட இந்த மக்கள் அடிப் படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின் றனர். இந்த மக்களின் நிலை குறித்து கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கு.நாகேஸ்வரனிடம் கேட்டபோது, சம்பூர் மக்கள் போன்று இவர்களும் அகதிமுகாம் வாழ்க்கை வாழ்ந்தவர் கள். பல வருடங்களாக அகதி முகாம்களில் பல்வேறு கஷ்டங்களை அனு பவித்தவர்கள்.

தொடர் போராட்டத்தின் பயனாகத்தான் இந்த மக்கள் அரசால் மீள்குடியேற்றப்பட்டனர். குடியேற்றப்பட்ட இந்த மக்களுக்கு அரசால் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது உண்மைதான். தற்காலிக கொட்டில்களில் வாழ்ந்து வரும் இந்த மக்களுக்கு இந்திய அரசின் வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்கு ஆரம்ப வேலைகள் தற்போது மூதூர் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

மீளக்குடியேற்றப்பட்ட கூனித்தீவு, நவரட்ணபுரம் மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களுடன் உரையாடியபோது, மூதூர் நகரப் பகுதியிலிருந்து நாம் வெகு தூரத்தில் இருக்கின்றோம். மூதூர் நகரிலிருந்து நவரட்ணபுரத்துக்கான பஸ் சேவை ஒரு நாளைக்கு இரு தடவை மட்டுமே வந்து செல்கின்றது. இவ்வாறு இரண்டு தடவை வந்து செல்லும் பஸ் கூட குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதில்லை. அவர்களது வசதிக்கேற்ப வந்து செல்கின்றனர்.

குறிப்பாக நீலாப்பளையிலிருந்து வரும் பஸ் சேவை நவரட்ணபுரத்துக்கும் வந்து செல்கின்றது. இந்த பஸ்ஸை எதிர்பார்த்து காத்திருப்பதில் எந்தவித பயனும் இல்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட நாங்கள் இலங்கை போக்குவரத்துச் சபையின் மூதூர் பணிமனை நடத்தும் பஸ் சேவையைக் கூட இன்று ஒழுங்கான முறையில் பெறமுடியாமல் இருக்கின்றோம் என்றால் நாங்கள் அப்படி என்ன பாவம் செய்தோம் என பாடசாலை மாணவி ஒருவர் என்னிடம் கேள்வி எழுப்பினார். இதிலிருந்து மீள்குடியேற்றப்பட்ட இந்த மக்களின் அவலம் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதை அறிய முடிகின்றது. ஒவ்வொருநாளும் வெவ்வேறு நேரங்களில் சேவையில் ஈடுபடும் இந்த பஸ் சேவை பெயரளவில் இடம்பெறாமல் குறித்த நேரத்துக்கு இடம்பெற இலங்கை போக்குவரத்துச் சபையின் மூதூர் பணிமனை பொறுப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இவ்விடத்தில் சுட்டிக்காட்டுகின்றேன். இது இவ்வாறிருக்க கடற்கரைச்சேனை கிராமத்தில் 267 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்ட போதும் இன்னும் 26 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படாமல் கட்டைபறிச்சான் நலன்புரி நிலையத்தில் தொடர்ந்தும் அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றன. 26 குடும்பங்களின் காணிகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களில் அரச அதிகாரிகள் வாய் திறக்கமாட்டார்கள். கடற்கரைச்சேனை கிராம மக்களின் பிரதான தொழில்களாக மீன்பிடி, விவசாயம், கூலித்தொழில் என்பன விளங்குகின்றன. கடற்கரைச்சேனை மக்களின் ஒரு பகுதியினர் மீளக்குடியேற்றப்பட்டு நான்கு ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் நிரந்தர வீட்டுத்திட்டம், மலசலகூடம், குடிதண்ணீர் போன்ற விடயங்களில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனக் கிராம மக்களின் ஒரு பகுதியினர் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - சுமார் 50 குடும்பங்களுக்கு மட்டுமே சமுர்த்தி முத்திரை வழங்கப்பட்டுள்ளது. அந்த முத்திரைகளும் ஐ.நா. மனித உரிமை முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மூதூர், கிளிவெட்டி அகதி முகாம்களை பார்வையிட வந்தபோதே வழங்கப்பட்டன எனக் கடற்கரைச்சேனை மக்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர். அரசால் வழங்கப்படும் சமுர்த்தி முத்திரை கூட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மூதூர் பிரதேச செயலகம் இந்த விடயத்தில் கவனம் எடுப்பது அவசியமாகும்.

மூதூர் கிழக்குப் பிரதேசம் போரின் காயங்களிலிருந்து இன்னும் மாற்றம் காணவில்லை என்பதற்கு பல அடையாளங்கள் அங்கு சாட்சிகளாக இருக்கின்றன. உதாரணமாக் கட்டைபறிச்சான் பொதுநூலகம் 2006 ஆம் ஆண்டு போரின் போது அழிக்கப்பட்டது. அது இன்னும் புன்ரமைக்கப்படாமல் போரின் அடையாளமாக விளங்குகின்றது. மூதூர் பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கட்டைபறிச்சான் பொது நூலகம் இன்று வேறு ஒரு கட்டடத்தில் பெயரளவில் மட்டும்தான் இயங்கி வருகின்றது. மூதூர் கிழக்கின் மிகவும் முக்கிய பிரதான பொதுநூலகமாக விளங்கிய கட்டைபறிச்சான் நூலகம் ஏன் புனரமைக்கப்படாமல் போரின் அடையாளமாக காட்சியளிக்கின்றது. இந்த விடயத்தில் மூதூர் பிரதேச சபை ஏன் கவனம் எடுக்கவில்லை என மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர், வேதனைப்படுகின்றனர்.

போர் இன்றி மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்று அரசு உலக அரங்கில் கூறி வருகின்றது. அது உண்மையானால், சம்பூர் மக்களை அவர்களது சொந்த மண்ணில் வாழும் உரிமையை ஏன் வழங்கவில்லை? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அகதி முகாம்களில் எட்டு வருடங்களைக் கடந்து வாழ்ந்து வருவதுதான் அரசு வழங்கும் நிம்மதியான வாழ்க்கையா? இவ்விடத்தில் மூதூர் கிழக்கின் இன்னும் ஒரு விடயத்தையும் வெளி உலகுக்கு வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது கட்டைபறிச்சான் கிராமத்தில் மூதூர் பிரதேச சபைக்குச் சொந்தமான பழைய சந்தைக் கட்டடத் தொகுதி கடந்த கால போரால் சேதமாகி இருந்தது. அதனைப் பொதுமக்கள் தங்களது சொந்த செலவில் சிறிது சிறிதாக புனரமைத்து சுற்றுவேலி மற்றும் சில திருத்த வேலைகளையும் ஆரம்பித்து சனசமூக நிலைய தேவைக்காக உருவாக்கி வந்தபோது, கடந்த மாதம் அந்தக் கட்டடத்தை இராணுவத்தினர் தமது மினி இராணுவ முகமாக மாற்றி, கட்டடத்தைச் சுற்றி பனை மட்டையால் வேலியமைத்து தங்களது பகுதியாக மாற்றியுள்ளனர்.

மூதூர் கிழக்கைப் பொறுத்தவரை இராணுவமுகாம், கடற்படை பயிற்சி முகாம், கடற்படை முகாம் அத்துடன் மக்களோடு மக்களாக பொலிஸார் என அரசு பாதுகாப்பை பல வகைகளில் உறுதிப்படுத்தி வருகின்ற நிலையில், மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் இவ்வாறான இராணுவ மினி முகாம் எதற்கு? போர் நிறைவடைந்து விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதற்குப் பிறகு ஏன் புதிதாக இராணுவ முகாம்கள் எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மூதூர் கிழக்கு மக்களின் பிரச்சினைகள் முடிவில்லாத தொடர்கதையான அவலமாகவே காணப்படுகின்றது.

# இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்

**வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் 15ஆவது மாநாட்டில் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.**



இன்றுவரையுள்ள ஜனாதிபதியோ, அரசோ இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை முன்வைக்கத் திடசங்கற்பமோ, எண்ணமோ கொண்டிருக்கவில்லை என்பது மிகத் தெளிவானதாகும். இந்த அரசில், ஜனாதிபதியிடம் நம்பகத்தன்மையை தமிழ் மக்கள் கொள்ளவும் இல்லை. 2011 ஐப்பசி 24ஆம் திகதி அமெரிக்க இராஜங்கத் திணைக்களம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தது. சம்பந்தன் தலைமையில் நாம் சென்றிருந்தோம். 2009இல் முடிவுக்கு வந்த போரின் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள், மனிதாபிமான உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் எமது கருத்துக்கள் கேட்கப்பட்டன.

சம்பந்தனின் பதில்களின் நம்பகத்தன்மையின் பேரில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2012ல் மார்ச் மாதத்தில் போர்க்குற்ற விசாரணை தொடர்பான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டதை உலகமே அறியும். ஓர் அரசியல் கட்சிக்கு மனித உரிமை சபையில் உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்கும் உரித்தில்லை என்பதையும் யாவரும் அறிவர். அரசுகளின் பிரதிநிதிகளும் தன்னார்வ மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் தான் பங்குபெறமுடியும் என்பதை அறியாதார் உள்ளனர். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் உறுப்புரிமை கொண்ட நாடுகளின் தலைநகரங்களில்தான் தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் அந்த நாடுகளின் தலைமைகளுடன் முடிந்தளவு பேச்சில் ஈடுபட்டிருக்கிறோம். வெளியிலும் முக்கிய நாடுகளின் ஆலோசனை மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் அனுசரணையுடன் நாம் இராஜதந்திர நடவடிக்கைகளில் அந்தந்த நாடுகளின் நம்பகத்தன்மையை பெற்றளவில் வேலை செய்திருக்கிறோம். அமெரிக்க,பிரித்தானிய முதலான வல்லாண்மை நாடுகளின் முன்னெடுப்புக்களால், இராஜதந்திர நடவடிக்கைகளால் குறிப்பாக மனித உரிமை சபையின் தலைவி நவநீதம்பிள்ளை அவர்களின் உயர்ந்த முயற்சிகளால் தற்போதுள்ள போர்க்குற்ற விசாரணைத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

இலங்கை வந்திருந்த மனித உரிமைகள் சபையின் தலைவியுடன் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பயனுள்ளதாக அமைந்தமையை சுட்டிக்காட்டவேண்டும். போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அந்தப் பிரேரணை நாம் எதிர்பார்த்த அளவு நிறைவைத் தராது விட்டாலும் அதையாவது நிறைவேற்ற முடிந்தமை பெரும் ஆறுதல் தருகின்றது. இராஜதந்திரச் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் நிறைந்த நாடுகளினால் தான் இந்தப் பிரேரணை நிறைவேறியது. இதனைக் கூட முறியடித்துவிட அரசு தரப்பு மட்டுமல்ல தமிழர் தரப்பிலும் எடுத்த முயற்சிகளை எல்லோரும் அறிவார்கள். இந்தப் பிரேரணைகள் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் அறிக்கை மற்றும் மனித உரிமை சபைத் தலைவரின் அறிக்கைகளின் அடிப்படையில் தான் உருவாக்கப்பட்டன என்பதை அறியவேண்டும். இந்தவிடயத்தில் கணிசமான புலம் பெயர்ந்த அமைப்புக்களின் முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதே நேரத்தில் தவறான முயற்சிகளைக் கண்டிக்காமலும் விட முடியாது.

ஐ.நா. மனித உரிமை சபையில் சென்ற முறை நிறைவேற்றப்பட்ட போர்க்குற்ற விசாரணைக்கான பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்ட தருணத்தில் தென்னாபிரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் நடுநிலை வகித்தன. தங்களைத் தற்காத்துக்கொண்டது மட்டுமல்ல நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அரசையும் த.தே.கூட்டமைப்பையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தி இனப்பிரச்சினை முதலானவற்றுக்கு தீர்வை ஏற்படுத்த நல்லிணக்கத்தை - ஏற்படுத்தவே நடுவு நிலைமை வகித்ததாகக் கூறின.

இதன் பொருட்டு தென்னாபிரிக்கா, தனது சிறப்புத் தூதுவராகச் செயற்பட ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் செல்வாக்கு மிகுந்தவரான அந்நாட்டின் துணை ஜனாதிபதி சிறில் ராம் போஷாவை நியமித்திருக்கிறோம் என்று கூட அறிவித்தது. இதன் தொடர்பில் அரசுப் பிரதிநிதிகளையும் த.தே.கூட்டமைப்பையும் தென்னாபிரிக்காவுக்கு வேறு வேறு சந்தர்ப்பங்களில் அழைத்துப் பேசியது. அவர் சென்ற ஜூன் மாதத்தில் இலங்கைக்கு வந்து பேச்சுக்களில் ஈடுபட்டார். த.தே.கூட்டமைப்பு முன் வைத்த வாதங்களை பெருமளவில் ஏற்றுக்கொண்டார் என்றே நம்புகின்றோம்.

ஆனால் தென்னாபிரிக்க ஜனாதிபதியைத் தங்களுக்கு உதவுமாறு அழைத்த இலங்கை ஜனாதிபதி, அழைத்த வேகத்திலிருந்து அடக்கி வாசிக்க ஆரம்பித்துள்ளார். நாம் ராம் போஷாவுடன் பேசாதுவிட்டால் நாம் அவர்களின் அனுசரணையை வென்றெடுத்திருக்க முடியாது. அரசின் ஏமாற்றுத்தனத்தை அவர்களும் அறிய வைப்பதில் நாம் வெற்றி பெறுவோம் என நம்புகிறேன். 60 ஆண்டுகளின் தொடர்ச்சியாக போர் முடிந்த பின் வரைக்கும் ஐ.நா மனித உரிமை சபையால் நிறைவேற்றப்பட்ட போர்க்குற்ற விசாரணை வரைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கொண்டிருந்த நடவடிக்கைகளையும் இராஜதந்திர செயற்பாடுகளையும் பொதுத் தேர்தல் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் வடக்கு, கிழக்கு மாநிலத்தின்; தமிழ் மக்கள் தொடர்ச்சியாக மிக திடசங்கற்பத்துடன் பெரும்பான்மையான வாக்குகளினால் எம்மை ஆதரித்து, ராஜபக்ஷ அரசுக்கும் உலகுக்கும் வெளிப்படுத்தியிருந்தமையைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதற்காக எமது தமிழ் மக்களுக்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சர்வதேச சந்தர்ப்பங்களைப் பற்றி நிற்போம். சர்வதேச சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாது விட்டால் இலங்கை அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வென்றெடுத்துவிடும். சர்வதேச சந்தர்ப் பம் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்குமென்பது இல்லை.தற்போதுள்ள சூழ்நிலையில் மத்திய கிழக்கிலும் முக்கியமாக இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை காஸா பள்ளத்தாக்கில் நடைபெறும் போர் உலகை ஆக்கிரமித்திருக்கிறது. அதே போல ரஷ்ய, உக்ரைன் போராட்டங்களைக் குறிப்பிடலாம். 2014 ஆரம்பத்தில் இலங்கை வந்த ரஷ்ய இராஜதந்திரி என்னிடம் வெளியார் தலையீட்டை தாம் விரும்பவில்லை என்று எடுத்துரைத்தார். இப்பொழுது ரஷ்யா தன் இன ரஷ்யர்களுக்காக உக்ரைன் மீது படையெடுத்து ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட நாடுகளும், நேட்டோவும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளமையையும், உக்ரைனை ஆதரித்து நிற்பதையும் குறிப்பிடலாம். இதுபோலவே சிரியாப் பிரச்சினையும், ஈராக் பிரச்சினையும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றில் வல்லாண்மை நாடுகளினதும் பிராந்திய நலன்கள் மற்றும் பொருளாதார நலன்கள் அந்தந்த நாட்டு நடவடிக்கைகளின்; பின்னணியிலிருக்கும். அண்மையில் ஐக்கிய அமெரிக்காவின் விமானப் போர்ப்படைக் கல்லூரியின் சர்வதேச பாதுகாப்புக்கான கற்கைகள் திணைக்களத்தின் பேராசிரியர் அமித் குப்தா இலங்கையின் மாநாடொன்றில் பேசும் பொழுது இலங்கையானது அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய புதிய கூட்டணியுடன் சமச்சீரான உறவுகளைப் பேணவேண்டும். அதுவே வளர்ச்சிப்பாதைக்கு நல்லது என்றும்- இலங்கை ஆசியாவில் ஒரு கேந்திர ஸ்தானத்தில் இருப்பதை மறந்துவிடக்கூடாது என்றும் கூறியிருக்கிறார் என்பதை ஆராய வேண்டும்.

பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா,தென் ஆபிரிக்கா ஒரு நிதிக் கட்டமைப்பில் வேலை செய்ய உடன்படிக்கை செய்துள்ளன. இவற்றைப் பார்க்கின்ற போது பொருளாதார நலன்களின் அடிப்படையில் இக்கூட்டுக்கள் உருவாகின்றன என்பது தெரியும். இதுபோலவே புதிய இராணுவக் கூட்டுக்களும் நேட்டோ போன்று உருவாக்கப்படுகின்றன. புதிய பொருளாதாரக் கோட்பாடான உலக மயமாக்கல், சந்தை வர்த்தகப் பொருளாதாரம் உலகில் செல்வாக்கு செலுத்துகின்றது. உலகில் மூன்றாவது உலகப் போர் வருமாயின் பொருளாதார வளங்களை மையமாகக் கொண்டே தொடங்கப்படலாம்.

அடுத்து சீனாவின் பொருளாதார, இராணுவ தந்திரோபாயங்களில் உலகின் பரவலான புதிய வகிபாகத்தையும்; புதிய மூலோபாய சுற்றிவளைப்புக்களையும் உருவாக்கி வருகின்றது. கடன் கொடுப்பது முதல் முதலீடு செய்வதிலும் அந்தந்த நாடுகளில் உற்பத்தி பொருள்கள் கொள்வதிலும் செல்வாக்கைச் செலுத்துவதில் ஆழமாகவும்,அகலமாகவும் கால்பதித்து வருவதையும் மறுபக்கம் போட்டியாக அமைந்துள்ள சூழல்களையும் பரிசீலிக்க வேண்டியுள்ளோம். பிரதமர் நரேந்திர மோடி அவர்களையும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மற்றும் செயலர்களையும் ஓகஸ்ட் 22,23இல் சந்தித்துப் பேசுவதற்கு முன்னர் அரசின் கையாளாக நின்று வரும் சுப்பிரமணிய சுவாமியின் சலசலப்புகளுக்கு மத்தியில், பாரதப் பிரதமருடன் பேச்சு நடத்திய பொழுது பிரதமரின் அணுகுமுறை, பாதிப்புற்ற மக்களிடம்; அனுதாபம், அனுசரணை காட்டியமை எமக்கு ஒரு புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தந்திருந்தது. இராஜதந்திர ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கிறது என்று இராஜதந்திரியான தயான் ஜயதிலக போன்றோர் குறிப்பிடுமளவுக்கு இராஜதந்திரம் இரு தரப்பிலும் கையாளப்பட்டிருக்கிறது.

இது ராஜபக்ஷ அரசுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியாகும். அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவாக ஆஸ்திரேலியா சென்றிருந்தோம். ஆஸ்திரேலியாவில் மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் ஒரு கலந்துரையாடலில் பல்கலைக்கழக ஆய்வில் சீனாவின் முக்கியத்துவம் பற்றி குறிப்புக்கள் இருந்தபொழுதிலும் எதிர்காலத்தில் இந்தியா தான் வளரும் வல்லாண்மை நாடாகும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது. அடுத்ததாக ஆஸ்திரேலியாவின் முக்கிய பல நாடுகளில் முதலீடுகளும், வர்த்தக முன்னேற்றங்களும் பங்களிப்புக்களும் ஆஸ்திரேலியாவை மையப்படுத்தி பொருளாதாரக் கூட்டமைப்புகளும் ஏற்படலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் ஆஸ்திரேலியா முதலீடுகளை பெருக்கும் திட்டத்தில் உள்ளது. இன்னும் கொழும்புத் திட்டத்தை ஆஸ்திரேலியா முன்னெடுக்கவுள்ளது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு, மலையகப் பிரதேசங்கள் போரின் பாதிப்புக்கு உள்ளான பிரதேசங்களின் திட்டங்கள் உள்ளீர்க்கப்படவேண்டும். இவையெல்லாம் எமக்குள்ள இராஜதந்திர உபாயங்களினால் ஊக்குவிக்கப்படுகின்றன. அதற்கான ஆய்வுகளையும், திட்டங்களையும் உருவாக்க நிபுணத்துவத்தைப் பெறவேண்டியுள்ளோம். ஐ.நா.மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள போர்க்குற்ற விசாரணையை உருவாக்குவதில் எமக்கிருந்த பங்கானது கணிசமானது.

(தொடரும்)

---

## வாசகர் திருமுகம்

## பிள்ளையாருக்கும் ஏன் இந்தக் கதி

அண்மையில் விநாயகர் சதுர்த்தி தொடர்பாக புதிய கலாசாரம் என்ற தலைப்பின் கீழ் செய்தியொன்றை தங்கள் பத்திரிகையில் வாசித்தேன். இந்தப் பிள்ளையார் சிலைக் கரைப்பு வைபவத்தின் போது நான் கீரிமலையில் இருக்க நேரிட்டது.

சிலர் ஒலிபெருக்கியை அலறவிட்டவாறு கட தாசியாலும் வேறுபொருள்களாலும் உருவாக்கப்பட்ட ஒரு பிள்ளையார் சிலையை பின்புறம் திறந்த சிறிய லொறி ஒன்றில் கொண்டு வந்து கீரிமலைக் கடலில் போட்டு விட்டு திரும்பவும் ஒலி பெருக்கியை அலறவிட்டவாறு சென்றனர்.

அப்பொழுது தனது தந்தையுடன் அங்கு நின்ற ஏழு வயது மதிக்கத்தக்க சிறுவன் கேட்டான்; "ஏன் அப்பா நாங்கள் கும்பிடுகின்ற பிள்ளையாரை கடலில் கொண்டு வந்து போடுகிறார்கள்? இறந்தவர்களின் அஸ்தியை அல்லவா கீரிமலைக்கடலில் கரைப்பார்கள்?"

இதற்கு அந்த தந்தையால் பதில் கூற முடியவில்லை. இந்து சமயத்தில் மட்டும் தான் இவ்வாறான அநியாயங்கள் நடக்கின்றன. தட்டிக் கேட்பதற்கு எவருமில்லை. பிள்ளையார் சிலையை கடலில் எறிந்து அவ மானப்படுத்துமாறு எங்கும் கூறப்பட வில்லை. அதுவும் பிதிர்க் கடன் செய்யும் கீரிமலையில் எறிய வேண்டுமென்று சொல்லவில்லை. பிராமணர் என்று கூறிக்கொள்ளும் ஒரு சிலர் தமது பிழைப் புக்காக புதுப்புது விட யங்களை எல்லாம் அறிமுகப்படுத்துகின்றனர்.

வடபகுதியில் புதிதுபுதிதாக பிற மதக் கோயில்கள் இரவோடு இரவாக தோன்றும் போது இவர்கள் என்ன செய்தார்கள்? எனவே பொதுமக்களே! இவ்வாறான இழிசெயல்களில் ஈடுபடுவதைப் புறக்கணித்து ஏற்கனவே நான்கு வேதங்களிலும், தேவாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் வழிபாட்டு முறையைப் பின்பற்றி கந்தபுராணக் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்க முன்வாருங்கள்.

*சி.செல்லத்துரை, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*


Anchor
உங்களுக்கு நல்வாழ்வையும், போஷாக்கினையும் வழங்குவதே எனது தலையாய கடமை.....
அன்னையின் அன்பு தூய்மையானது. தனது பிள்ளையின் நல்வாழ்விற்கு அவர் எப்போதுமே முதலிடம் கொடுக்கின்றார். தனது பிள்ளைக்கு எப்போதும் மிகச் சிறந்தவற்றையே தெரிவுசெய்கின்றார்.
இந்த அதிவிசேடமான அன்பைப் போற்றும் வகையில் உங்களுடைய கண்மணிகளுக்கு அதியுயர் தரத்திலான பாலை வழங்கும் உத்தரவாதத்தில் அங்கர் மட்டற்ற அளவில் கவனம் செலுத்திவருகின்றது.
...அதனாலேயே அதிசிறந்த தரத்திலான, போஷாக்கு நிரம்பிய அங்கர் பாலை நான் தெரிவுசெய்கின்றேன்.
எங்களுடைய உறுதிமொழியின் 6 படிகள்
1 நியூசிலாந்து பாலின் நலச்செழுமை
சுத்தமான காற்றுக்கும், தூய்மையான தண்ணீருக்கும் பெயர்போன நியூசிலாந்து நாட்டின் பசுமையான மேய்ச்சல் தரைகளில் சுதந்திரமாக மேயவிடப்படுகின்ற பசுக்களில் இருந்து அங்கர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.
2 பால் கறக்கும் போது மிகச் சிறந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
உலகத்தரம் வாய்ந்த தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் கீழ் பால் கறக்கப்படுகின்றது. இயந்திரத்தொகுதிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஆண்டுதோறும் 2,000 இற்கும் மேற்பட்ட கணக்காய்வுகள் எம்மாலும், ஒழுக்காற்று அதிகார சபைகளாலும், வாடிக்கையாளர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன.
3 அதிநவீன பால் சேகரிப்பு நடைமுறை
500 வரையான அதிநவீன தாங்கிகள் பாற்பண்ணைகளிலிருந்து தினசரி பாலை நேரடியாகச் சேகரிக்கின்றன. பால் ஏற்றப்படுவதற்கு முன்னர் ஒவ்வொரு கொள்கலன் தாங்கியும் சோதனை நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்படுவதுடன், தொழிற்சாலைக்கு பால் எடுத்துச் செல்லப்படும் வரை அதனை குளிரூட்டிப் பேணுகின்றது.
4 பாலின் ஒவ்வொரு துளியும் தூய்மையானது, உயர் தரம் கொண்டது
பால் சேகரிக்கப்படும் இடத்திலிருந்து அது எமது விற்பனை நிலையங்களை எட்டும் வரை 300 இற்கும் மேற்பட்ட வேறுபட்ட சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு உயர் தரமும், போஷாக்கும் உறுதிசெய்யப்படுகின்றது.
5 உலகெங்கிலும் கிடைக்கும் அதியுயர் தரம் கொண்ட பால்
நியூசிலாந்தில் ஆண்டுதோறும் 15 பில்லியன் லீட்டர்களுக்கும் அதிகமான பால் பெறப்பட்டு உலகெங்கிலும் 100 இற்கும் அதிகமான நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.
6 நலச்செழுமையின் வழித்தடத்தை கண்டறியும் வசதி
அங்கர் பாலின் ஒவ்வொரு பொதிக்கும் தனித்துவமான இலக்கக் குறியீடு ஒன்று பொறிக்கப்படுகின்றது. இதன் மூலமாக அதன் தரத்தை பேணுவதற்கு அது எங்கே, எப்போது உற்பத்தி செய்யப்பட்டது என்பதைக் கண்டறியமுடியும்.
கேளுங்கள்
அங்கர் இடம்
(011) 2 468 468
ஒவ்வொரு துளிக்கும் உத்தரவாதம்
நிரூபிக்கப்பட்ட போஷாக்கு

# பரபரப்பான ஆட்டங்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அணிகள்



பரபரப்பான ஆட்டங்களில் வெற்றி பெற்ற பலாலி விண்மீன் விளையாட்டு கழகம், அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுப் போட்டிகளுக்கு முன்னேறியுள்ளன.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் அண்மையில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்து பல போட்டிகளில் விளையாடிய பலமான அணியாகக் கருதப்பட்ட விண்மீன் அணி, கத்துக்குட்டி அணியான சிவகுமரனை இலகுவில் வெற்றி கொள்ளும் என்றே அனைவரும் கணித்திருந்தனர். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக போட்டி பரபரப்பின் உச்சக்கட்டம் வரை சென்றது. சிவகுமரன் அணியினர் கோல்களைப் பெற முடியாத அளவிற்குப் பலாலி விண்மீனுக்குச் சவால் விடும் வகையில் விளையாடி அவர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தனர். இடைவேளைக்கு முன்னர் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கான சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன. அதிலும் சிவகுமரன் அணிக்கு 2 அருமையான சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவ்வணி வீரர்களால் உதைக்கப்பட்ட பந்துகள் கோல் காப்பாளர்களுக்கும் அருகாலும் சென்று ஏமாற்றியது. இடைவேளையின் பின்னரும் இதே நிலையே தொடர்ந்தது. இதே வேளை இரு அணியினதும் பின்கள வீரர்களினதும் அபாரமான தடுத்தாடு உத்தியினால் இரு அணிகளாலும் கோல்களைப் போட முடியவில்லை. இதனால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலைதவிர்ப்பு உதையில் முதலில் வழங்கப்பட்ட 5 உதைகளிலும் இரு அணி வீரர்களும் கோல் பெறும் வாய்ப்பை கை நழுவ விட்டனர். மேலதிகமாக வழங்கப்பட்ட உதைகளில் 2:1 என்ற அடிப்படையில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு பரபரப்பான ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும், பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் மோதின. பரபரப்புக்கு குறைவில்லாமல் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் இடைவேளையின் பின் நக்கீரன் விளையாட்டுக் கழகம் சார்பாக சிந்துஜன் ஒரு கோலைப் போட்டு அசத்தினார். போட்டி நேரம் நிறைவு பெற 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ரி- 108)

## தடகளப் போட்டி



யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கான இலக்கங்களை அந்தப் பகுதி விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், சனிக்கிழமை தெரிவுப் போட்டிகள் மட்டுமே நடைபெறும் எனவும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ். மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (108)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினரால் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான வடமாகாண ரீதியிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது அணியின்பெயர்விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு போட்டி ஏற்பட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ரி- 23)



# இன்றைய ஆட்டங்கள்

கரணவாய்,செப்.12

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில், பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி கரவை சுடர் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

* * *

கரணவாய்,செப்.12

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையப் பொன்விழாவை முன்னிட்டு பாரதிதாசன் விளையாட்டுக்கழகத்தினர் வடமராட்சி பிரதேச ரீதியாக மின்னொளியில் நடத்தும் அணிக்கு 5பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் அல்வாய் காமாட்சி விளையாட்டுக் கழகத்தை 16:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழகம் அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஏற்கனவே மாதனை விளையாட்டுக் கழகமும் உபயகதிர்காமம் யு.கே. விளையாட்டுக்கழகமும் என்பன அரையிறுதியாட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளன.

இதேவேளை பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கிறீஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் போன்ற இளைஞர் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்ச்சிகள் இன்று காலை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ரி- 108)

* * *

கரணவாய்,செப்.12

மருத்துவர் சிவகுரு ஞாபகார்த்தமாக கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (108)

* * *

கரணவாய்,செப்.12

யாழ்.மாவட்டச் செயலகத்தால் வருடாந்தம் நடத்தப்படும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டமும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டமும் இன்று இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட செயலக அணிகள் மற்றும் பிரதேச செயலக அணிகள் என்பன பங்குபற்றவுள்ளன. (ரி-108)

* * *

யாழ்ப்பாணம்,செப்.12

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிண்ணியா உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (ரி- 23)

# பிரான்ஸில் மன்னார் வீரன்

யாழ்ப்பாணம்,செப்.12

பிரான்ஸ் நாட்டின் கிரவலிங்ஸ் நகரில் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை நடைபெறவிருக்கும் உலக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 13வது படகு ஓட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் உயிலங்குளம் சிறு நீலாசேணைக் கிராமத்தைச் சேர்ந்த கிங்ஸ்லி சாள்ஸ்லியோ என்பவர் பிரான்ஸ் நாட்டிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணமாகியுள்ளார். மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனான இவரை உலகப் பல்கலைகழகங்களுக்கு இடையிலான 13 ஆவது படகு ஓட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை பல்கலைக் கழகங்களின் விளையாட்டு சங்கத்தினால் தெரிவுசெய்யப் பட்டிருந்த நிலையில் அவர் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றுள்ளார்.



2014 ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகு ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட கிங்ஸ்லி சாள்ஸ்லியோ முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதோடு இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் போட்டியிட்டு பல பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் றோ.க.த.க.பாடசாலை, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார் உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலைகளின் பழைய மாணவரான கிங்ஸ்லி சாள்ஸ்லியோ தற்போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விளையாட்டு சங்கத்தின் செயலாளராக பதவி வகிக்கிறார். (ரி- 56)

# அஜ்மலுக்கு விதிக்கப்பட்ட தடை காலதாமதமானது

## பிஷன்சிங் பேடி

சயீட் அஜ்மலுக்கு விதிக்கப்பட்ட தடை மிகவும் தாமதமான முடிவு என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும், முன்னாள் பிரபல சுழற்பந்து வீரருமான பிஷன் சிங் பேடி கூறியுள்ளார்.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீரர் சயீட் அஜ்மல் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது வீசிய பந்துவீச்சு முறை



சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக போட்டி நடுவர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் செய்திருந்தார். இதையடுத்து அவரது பந்துவீச்சை ஆய்வு செய்த ஐ.சி.சி. ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் மையத்தில் 'பயோ மெக்கானிக்' முறையில் ஆய்வுகளை மேற்கொண்டது. இதில் அஜ்மல் வீசும் பந்துகள் முறையற்ற முறையில் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அஜ்மலின் பந்துவீச்சுக்கு ஐ.சி.சி இடைக் காலத் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் அஜ்மலுக்கு விதிக்கப்பட்ட தடை மிகவும் தாமதமான முடிவு என்று பேடி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது : சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் பந்துவீசிய சயீட் அஜ்மலுக்கு தடை விதித்ததை வரவேற்கிறேன். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஆனால் சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்த முடிவு மிகவும் காலதாமதமானது. முன்பே இந்த நடவடிக்கையை எடுத்து இருக்க வேண்டும். இந்த தாமதத்தில் அவர் சர்வதேச கிரிக்கெட்டில் அதிகமான இலக்குகளை எடுத்து விட்டார். அதுவரை ஐ.சி.சி. என்ன செய்து கொண்டு இருந்தது. அவரது பந்துவீச்சில் எத்தனையோ துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டம் இழந்து இருக்கிறார்கள். இந்த ஆட்டமிழப்புகள் எல்லாம் தவறானதா? என்பதை ஐ.சி.சி. தெரிவிக்க வேண்டும். அஜ்மல் மட்டுமல்லாமல் இன்னும் பல பந்து வீச்சாளர்கள் இது போன்று பந்து வீசுகிறார்கள். அவர்களையும் கண்டறிந்து ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ரி)

# அமெரிக்க ஓபன் ரென்னிஸ் சம்பியனானார் மரின் சிலிச்



அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், குரோஷியாவின் மரின் சிலிச் சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் ஜப்பானின் கெய் நிஷிகோரியுடன் நேற்று மோதிய சிலிச் 6-3, 6-3, 6-3 என்ற நேர் செற்களில் எளிதாக வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். இது அவர் பெறும் முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். 2001இல் குரோஷியாவின் கோரன் இவானிசெவிச் விம்பிள்டன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றிருந்த பிறகு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற முதல் குரோஷிய வீரர் என்ற பெருமை சிலிச்சுக்கு கிடைத்துள்ளது. சிலிச்சின் பயிற்சியாளராக இவானிசெவிச் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டதாக பரிசோதனையில் தெரியவந்ததால், சிலிச்சுக்கு 4 மாத தடைவிதிக்கப்பட்டது. மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தவறான சத்துணவைச் சாப்பிட்டதால் அவர் சர்ச்சையில் சிக்க நேரிட்டது. இதைத் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்காமல் ஓய்வெடுத்து வந்த அவர், தடைக்காலம் முடிந்த பிறகு தீவிரமாக பயிற்சியில் ஈடுபட்டு கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

சிலிச்சுடன் இறுதிப் போட்டியில் மோதிய கெய் நிஷிகோரி, இந்த தொடரில் பலம் வாய்ந்த வீரர்களான கனடாவின் மிலோஸ் ரயோனிக், சுவிஸின்ஸ்டானிஸ்லாஸ்வாவ்ரின்கா, செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் ஆகியோரை வெளியேற்றி அதிர்ச்சி அளித்திருந்தார். எனினும், இறுதிப் போட்டியில் சிலிச்சின் உறுதியான ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் நேர் செற்களிலேயே தோல்வியடைந்து இரண்டாவது இடத்தைப் பெற்றார். (ரி)

# இந்தியாவை அடைந்தது லாகூர் லயன்ஸ்

சம்பியன் லீக் ரி 20 தொடரில் பங்கேற்கவுள்ள பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணி நேற்று முன்தினம் இந்தியாவை சென்றடைந்தது.

ஆறாவது சம்பியன் லீக் ரி-20 தொடர் இந்தமாதம் 17ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 6ஆம் திகதி வரை நடக்க இருக்கிறது. இந்தியா சார்பில் நடப்பு ஐ.பி.எல். சம்பியன் கொல்கத்தா, சென்னை, பஞ்சாப் என 3 அணிகளும், ஆஸ்திரேலியாவின் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ், ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணிகளும் தென்னாபிரிக்காவின் டால்பின்ஸ், கேப் கோப்ராஸ், மேற்கிந்திய தீவுகளின் பார்படாஸ் டிரைடென்ட்ஸ் அணியுமாக 8 அணிகள் நேரடியாக பங்கேற்கின்றன. ஏனைய இரண்டு அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் 13ஆம் திகதி ஆரம்பிக்கிறது. இதில் இந்தியாவின் மும்பை இந்தியன்ஸ்,நியூஸிலாந்தின் நோர்தர்ன் நைட்ஸ், இலங்கையின் சௌத்தர்ன் எக்ஸ்பிரஸ் மற்றும் பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் என 4 அணிகள் விளையாடவுள்ளன.

இவற்றில் பாகிஸ்தானின் அணி தொடரில் பங்கேற்பதற்கான விசா கிடைக்கப் பெற்றதையடுத்து, நேற்று முன்தினம் அவர்கள் இந்தியாவை சென்றடைந்தனர்.

இதேவேளை -சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த அகமட் செஷாட், ஊடகங்களைப் புறக்கணித்தார்.

அண்மையில்நடந்துமுடிந்த இலங்கை அணிக்கெதிரான தொடரில், இலங்கை வீரர் டில்சானுடன் இஸ்லாமிய மதம் பற்றி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இந்த விவகாரத்தால் சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. இந்த நிலையில் விமான நிலையத்தில் வைத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக அங்கிருந்த பத்திரிகையாளர்கள் செஷாட்டிடம் விளக்கம் கேட்டனர். ஆனால் பத்திரிக்கையாளர்களின் கேள்விகள் எதையும் கண்டுகொள்ளாமல் ஊடகங்களை செஷாட் புறக்கணித்தார்.

செஷாட்டுடன் வந்திருந்த நிர்வாகி ஒருவர், தயவு செய்து செஷாட்டை தொல்லை செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

தகுதிச்சுற்றில் லாகூர் அணி, 16ஆம் திகதி கடைசி லீக் ஆட்டத்தில் இலங்கையின் சௌத்தர்ன் எக்ஸ்பிரஸை சந்திக்கிறது. இதில் செஷாட் மற்றும் டில்சான் களமிறங்குவது, எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ரி)

# முரளியின் பந்து வீச்சு பற்றி இந்திய பந்து வீச்சாளர்

இலங்கை அணியின் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் சுழற்பந்து வீச்சில் அசத்தி இலக்குகளைக் கைப்பற்றிய முறை பற்றி தனது கருத்துக்களை இந்திய முன்னாள் பந்து வீச்சாளர் பிரசன்னா வெளியிட்டிருக்கிறார்.



இந்திய முன்னாள் பந்து வீச்சாளர் பிரசன்னா முரளியின் பந்து வீச்சு குறித்து பதிவு செய்துள்ள கருத்தில், மிகவும் சுவாரஸ்யமான ஒரு சுழற்பந்து வீச்சாளர் என்றால் எனக்கு முதலில் நினைவுக்கு வருவது முத்தையா முரளிதரனே. இவரது பந்து வீச்சை விவரிப்பது அவ்வளவு சுலபமல்ல, முரளிதரன் ஒரு விநோதமான பந்து வீச்சாளர். இவரது பந்து வீச்சு முறை குறித்து சர்ச்சைகள் இருந்தாலும், சுழற்பந்து உலகின் தலை சிறந்த பந்துவீச்சாளர் இவர், இவரது பந்துகள் பல முறையற்றவை என்று கருதப்பட்டது. ஆனால் 800 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். அவரது பந்து வீச்சின் அனுகூலங் களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். அவரது பந்து வீச்சு முறை முற்றிலும் வேறுபட்டது. அவர் பந்துகளை பயங்கரமாகத் திருப்பக் கூடியவர் என்பதே பிரதானமாக இருந்து வருகிறது. அவரது சாதாரண பந்து வீச்சே திறமையானதாக உள்ள போது, 'தூஷ்ரா', 'லெக்ஸ்பின்' என்று பந்து வீச்சை மாற்ற வேண்டிய அவசியமில்லை. மேலும் இலக்குகள் எடுப்பதே குறிக்கோள் என்பதை அறிவிக்கும் விதமாக பந்து வீசுவதை முதன் முதலில் அறிவித்த பந்துவீச்சாளர் அவர் என்றே நான் கருதுகிறேன். துடுப்பாட்ட வீரர்கள் தங்களை தற்காத்துக் கொள்ளும் போதும், அல்லது அடித்து ஆடும்போதும் சிரமம் அதிகம். இதில் தான் முரளி அவ்வளவு இலக்குகளைக் குவிக்க முடிந்துள்ளது என்று கூறியுள்ளார். (ரி)

# சானியாவை வாழ்த்திய தெலுங்கானா முதல்வர்



அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியின் கலப்பு இரட் டையர்பிரிவில் கிண்ணத்தை வென்ற சானியா மிர்சா தெலுங்கானா முதல்வரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் பங்குபற்றிய சானியா கிண்ணத்தை வென்று இந்தியாவுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார். இந்த வெற்றியை அவர் இந்தியாவுக்கும், புதிதாக பிறந்த தெலுங்கானா மாநிலத்துக்கும் அர்ப்பணிப்பதாகத் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் இந்தியாவுக்கு திரும்பியுள்ள சானியா தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவை ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- சானியா மிர்சா சந்திரசேகர் ராவின் ஊக்குவிப்பால் அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றி பலரை ஊக்குவிக்கும். சானியா மேலும் பல வெற்றிகள் பெற வாழ்த்துக்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சந்திப்பின் போது, சானியாவுக்கு தேவையான உதவிகளை செய்வதாக ராவ் வாக்குறுதி அளித்துள்ளார். (ரி)

## தொடர்ச்சிகள்

### அமைச்சர்

சர் டக்ளஸ், உதயன் பத்தி ரிகையின் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்களை மறுத்தார். தானோ தனது கட்சியினரோ கொலைகளில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றார். அது தமது கொள்கையும் அல்ல என்றார். கடத்தல்களிலோ கப்பம் வாங்குவதிலோ தனக்கும் தனது கட்சிக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றும்கூடச் சொன்னார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கமும் அவரது குடும்பத்தினரும் தனக்கு நெருக்கமான நண்பர்கள் என்றும் பரராஜசிங்கத்தின் கொலையில் தனது கட்சிக்குத் தொடர்பு ஏதும் இல்லை என்றும் கூறினார். இவை அனைத்தையும் தான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொண்ட "உண்மையைத் தவிர வேறு எதனையும் தெரிவிப்பதில்லை" என்ற சத்தீய வாக்குக்கு அமையவே தெரிவிக்கிறேன் என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கூறினார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தலை எதிர்த்து இடம்பெற்ற மாணவர்களின் போராட்டத்துடன் தனது அரசியல் பணி 1971ஆம் ஆண்டில் ஆரம்பமானது என்றார். அதைத் தொடர்ந்து ஈழ விடுதலை இயக்கத்திலும் பின்னர் ஈரோஸ் அமைப்பிலும் அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பிலும் இறுதியாக ஈ.பி.டி.பி. எனப்படும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிலும் தனது அரசியல் பணி தொடர்ந்தது என்றார். ஈ.பி.டி.பி யின் முதலும் முழுதுமாகத் தானே இருக்கிறார் என்றும் டக்ளஸ் என்கிற அடையாளமே தனது கட்சி என்றும் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இத்தகைய தன் மீது அவதூறு சொல்லி அவமானத்தை ஏற்படுத்துவதை 'உதயன்' பத்திரிகை நீண்ட காலமாகச் செய்து வருவதாகவும் அதைப் பொறுக்க முடியாமலே தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார் என்றும் அவர் நீதிமன்றத்திடம் கூறினார்.

அவரது சாட்சியத்தைத் தொடர்ந்து 'உதயன்' பத்திரிகை தரப்பு சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அமைச்சரைக் குறுக்கு விசாரணை செய்தார். இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக குடைந்து குடைந்து குறுக்குக் கேள்விகளைக் கேட்டார்.

அமைச்சரின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அவர் சாட்சிக் கூண்டில் அமர்ந்திருந்து சாட்சியமளிக்க நீதிமன்று அனுமதி அளித்தபோதும் அதைத் தவிர்த்துவிட்டு இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக நின்று கொண்டே கேள்விகளுக்குப் பதிலளித்தார் அமைச்சர். எனினும் குறுக்கு விசாரணை இன்னும் முடிவுறாத நிலையில் நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்றைய தினம் மீதிக் குறுக்கு விசாரணை தொடரும்.

குறுக்கு விசாரணையின்போது சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கேட்ட கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்க்க விரும்பிய அமைச்சர், ஆம் அல்லது இல்லை என்ற பதிலுக்கு அப்பால் ஒவ்வொரு கேள்விக்கும் விளக்கங்கள் கொடுத்தார். இதனால் "முதலில் கேள்விக்கான பதிலை ஆம் அல்லது இல்லை என்று கூறிவிட்டு உங்கள் விளக்கத்தை வழங்குங்கள்" என்று நீதிமன்றால் அறிவுறுத்தப்பட்டார். நீதிமன்றத்தில் நடைமுறைகள் எப்படி இருக்கும் என்று அவருக்கு நாசூக்காக விளங்கப்படுத்தப்பட்டது. தனக்கு நீதிமன்றத்துக்கு அடிக்கடி வந்து பழக்கமில்லை என்பதனால், இனி வரும் காலத்தில் அதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வார் என்றும் கூறினார். அவரது சில பதில்கள் நீதிமன்ற அவமதிப்பாகக் கருத்தில் எடுக்கப்படக்கூடியவை என்பதை சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக் காட்டியபோது அத்தகைய பதில்களுக்காக அவர் நீதிமன்றத்திடம் மன்னிப்புக் கேட்டார்.

சட்டத்தரணி சுமந்திரனின் கேள்விகள் இரண்டு முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக அமைச்சரை நோக்கிக் கேட்கப்பட்டன. அதில் முதல் விடயம். நீதிமன்றத்தை ஏய்த்துவிட்டு - அதாவது திரும்பி வருவார் என்று இந்திய நீதிமன்றத்துக்கு உறுதியளித்துப் பிணையில் வெளிவந்தபோதும் இந்தியாவை விட்டு நீதிமன்றத்துக்குச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்து விட்டமை - வெளியேறி இலங்கை வந்தமை. இரண்டாவது விடயம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கம் வகிக்கும் அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும்கூடப் பலர் கடத்தல் மற்றும் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களை ஈ.பி.டி.பி இயக்கத்துக்கு எதிராகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதுடன் கட்சி என்பது முழுதும் முதலுமாக டக்ளஸ் தேவானந்தாவே என்று அவரே மன்றில் தெரிவித்திருப்பதால் அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அமைச்சர் டக்ளஸ்’க்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களே என்பதுமாகும்.

இவற்றை நீதிமன்றுக்கு விளக்கும் வகையில் அடுத்தடுத்து சரமாரியாக அமைச்சரை நோக்கி கேள்விக் கணைகள் வீசப்பட்டன. தான் ஒரு கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முன்னதாகச் சட்டத்தரணி அடுத்த கேள்வியைக் கேட்டுவிடுகிறார் என்று அது தொடர்பில் அமைச்சர் முறையிட்டார்.

இந்தக் குறுக்கு விசாரணையின் போது. நேற்று வரையில் (அதாவது கடந்த புதன் கிழமை வரையில்) இந்தியாவில் தான் ஒரு பிணையில் வெளிவரமுடியாத பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபராகவே இருந்தார் என்பதை டக்ளஸ் ஏற்றுக்கொண்டார். அத்தோடு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைத் தான் ஏற்றுக்கொள்கிறார் என்றும் இருந்தாலும் அதில் தன்னைப் பற்றியும் தனது கட்சியைப் பற்றியும் சொல்லப்பட்ட விடயங்கள் தவறானவை என்றும் தெரிவித்தார்.

குறுக்கு விசாரணை நவம்பர் 27ஆம் திகதி தொடரும். (உ)


**விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக்கோழி, ஊர்ப் பேட்டுக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில்.

தொடர்பு: 078 880 3483 (F/15632) (4.6.3)

**வாடகைக்கு**

சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்துக்கு அருகில் விருந்தினர் தங்கக்கூடிய அறைகள் சகல வசதிகளுடனும் நாளாந்த அடிப்படையில் வாடகைக்குண்டு. ஹைஏஸ் வான், ஓட்டோ, படிவாகனம் என்பன இளவாலை சண்டிலிப்பாய் பகுதியில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். (F/15631) (4.6.3)

தொடர்பு: 078 880 3483/077 160 4059


## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்

(முன்னாள் ஆசிரியை யாழ்.இந்து மகளிர் கல்லூரி)



காரைநகர் களபூமியை சேர்ந்தவரும் மலேசியாவை பிறப்பிடமாகவும் தற்பொழுது கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் (11.09.2014) வியாழக்கிழமை காலமானார்.

[illegible]

அன்னார் காலஞ்சென்றவர்களான [illegible] யன் பென்சனியர் வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், அன்னபூரணியின் பெறாமகளும் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (தபாலதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியம், புனிதவதி, உமாதேவி மற்றும் திலகவதி, திருநாவுக்கரசு, வீரசிங்கம், புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் சிவகாமசுந்தரி, சிதம்பரம் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மைத்துனியும் வசந்தி Dr.பவானி(ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு, சுன்னாகம்), நந்தினி (பொறியியலாளர், லண்டன்) காலஞ்சென்றவர்களான பாலசரஸ்வதி, சிவசங்கரி ஆகியோரின் அன்புத் தாயாரும் அருணகிரிநாதர், பாஸ்கரன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் கானியாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் (14.09.2014)ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு - 21/1 றெயில் றோட் கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (52138)

தகவல்: குடும்பத்தினர். T.P : 021 300 1207

## அணித்தலைவராக கிரன் பொலார்ட்

இங்கிலாந்து தொடரின் போது காயமடைந்த இந்திய ஒரு நாள் தொடக்க வீரர் ரோகித் சர்மா சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக் கெட் தொடரில் இருந்து விலகி யதையடுத்து மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவராக க்ரன பொலார்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான தொட ரின் போது விரலில் காயமடைந்த ரோகித் சர்மா தற்போது தோள் பட்டைக் காயத்திற்கும் உள்ளாகியுள்ளார். இதனால் அவர் சம்பியன் லீக் 20 ஓவர் தொடரில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது. குறைந்தது 4 வாரங்களுக்கு அவரால் விளையாட முடியாது என்று தெரிவிக்கப்பட்டதால் மும்பை இந்தியன்ஸ் அணி சம்பியன் லீக் தொடருக்கு புதிய அணித் தலைவரைத் தெரிவு செய்தாக வேண்டியிருந்தது. ஹர்பஜன் சிங், பொலார்ட், மலிங்க ஆகியோரில் ஒருவர் அணித்தலைவர் பதவியைப் பெற வாய்ப்பு இருந்த நிலையில் மும்பை அணி நிர்வாகம் பொலார்ட்டை அணித்தலைவராக தெரிவு செய்துள்ளது.

பொலார்ட் 2010ஆம் ஆண்டு முதல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். இவர் மேற்கிந்திய தீவுகளின் 20 ஓவர் அணியான பார்படாஸ் டிரைடெண்ட்ஸ் அணியை தனது அணித் தலைமையில் சம்பியன் [illegible] வெல்ல இட்டுச் சென்றார் என்பது குறிப் பிடத்தக்கது. ஆனால் தன் சொந்த அணியை விடுத்து மும்பை இந்தி யன்ஸ் அணி சார்பாக சம்பியன்ஸ் லீக்கில் விளையாட முடிவெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் மனோகரன்

(இளைப்பாறிய ஆசிரியர்- யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, இளைப்பாறிய அதிபர் கொல்லவிளாங்குளம் அ.த.க. பாடசாலை-வவுனிக்குளம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மனோகரன் நேற்று முன்தினம் (10.09.2014) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (ரூக்கு) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவானந்தம், மதுராம்பாள், புவிராஜசிங்கம், விபுலானந்தன், சுலோசனா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், சோமசுந்தரம், [illegible], சண்முகசுந்தரம், மகேஸ்வரி, [illegible], செல்லத்துரை, அரியநாயகம், மேரி, இராசலட்சுமி, முத்துக்குமார் ஆகியோரின் மைத்துனரும், சித்திராஞ்சனி (அஞ்சனா), சுகுமாரன் (சுகு), நந்தினி, சுகந்தினி ஆகியோரின் அன்பு தகப்பனும், தர்மராஜா (அல்லா), கிளவ் [illegible], தர்மரெட்ணம் (சோமி), அதிகரன் ஆகியோரின் அன்பு மாமனும், [illegible], சட்சரன், ரஜீவா, பவித்திரன், பாரதி, கண்ணம்மா, தர்சனா, தனுஷன், அக்வாணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.09.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

106, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். (52139) (10)

தகவல்: குடும்பத்தினர் T.P: 021 300 8618 077 912 0[illegible]

## மரண அறிவித்தல்

### வீரவாகு நாகரத்தினம்



நவாலியை பிறப்பிடமாகவும் முருகுமூர்த்தி வீதி, வண்ணார்ப்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு நாக ரத்திணம் நேற்று (11.09.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு அன்னமுத்து தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கௌரியம்மாவின் அன்புக் கணவரும் ரதிகுமாரி, சிவகுமாரி (இத்தாலி), ஸ்ரீஸ்கந்தராசா (ராசன்), சிவகுமார் (இத்தாலி) ஆகியோரின் அருமைத் தந்தையும், பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி (இத்தாலி), லோஜினி ஆகியோரின் அன் மாமனும், சசிராஜ், மோகராஜ், வினோத், கஜானன், கம்சிகா, ரஜிவன், ரிஜிவன், துசானா, தனுசன், கஜானா ஆகியோரின் பேரனும், கனகம்மா, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(52141)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி. தம்பையா கனகம்மா

(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்)



மீசாலை மேற்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கனகம்மா நேற்று (11.09.2014) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லாச்சி தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தையா ஆகியோரின் சகோதரி யும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம், அன் னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்ணன் கடை மீசாலை. (C/16578) (10)

தகவல்: பே.சந்திர[illegible] (பெறாமகன்)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் வரதராஜா(V.T.S)

(உரிமையாளர்- ஸ்ரீமலர் ஸ்ரோர்ஸ், கலுத்துறை)



புளியங்கூடல் வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு [illegible] வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதராஜன்(V.T.S) [illegible] (10.09.2014) புதன்கிழமை காலமாகி[illegible]விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் ஊர்காவற்றுறை

தகவல்: பிள்ளைகள்

# கட்சி தாவுவதைத் தடுப்போம்

*முஸ்லிம் காங். மசூறா சபைக்கான ஒன்றுகூடலில் கருத்து*

காத்தான்குடி, செப்.12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறுமலர்ச்சி ஒன்றியத்தின் மசூறா சபைக்கான ஒன்று கூடல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காத்தான்குடி நகர சபை உறுப்பினர் சல்மா ஹம்ஸாவின் இல்லத்தில் நடைபெற்றது.



இந்தக் கலந்துரையாடலில் மறுமலர்ச்சி ஒன்றியத்தின் செயலாளரும் புதிய காத்தான்குடி இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளருமான எம்.ஏ.எம். அஷ்ரப் உரையாற்றுகையில்,

காத்தான்குடியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது விழ்ச்சியடைந்து கொண்டு செல்கிறது. இந்த நிலைமை தொடருமானால் கட்சி என்று சொல்ல ஒரு சிலரே மிஞ்சுவார்கள்.

இதற்கு பிரதேச தலைமைத்துவங்களின் அசமந்தபோக்கு, செயற்திறன் அற்ற தன்மை, அனைவரையும் அரவணைத்து செல்லாமை, எடுத்ததுக்கெல்லாம் பொருளாதாரத்தில் பழி போடுதல் போன்ற காரணங்களே மிக முக்கியமானதாகும்.

இந்த மண்ணில் பல சகோதரர்கள் இரத்தம் சிந்தி, சிறைவாசம் அனுபவித்து, உயிர் தியாகம் செய்து, பல தாய்மார்களின் துஆவினால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்தக் கட்சி தொடர்ந்து மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்ல உண்மையான கட்சி தொண்டர்களாகிய நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே எமது பிரதேசத்தில் கட்சியை பலப்படுத்தி வளர்த்தெடுப்பதுடன் கட்சி தாவுகின்ற நடவடிக்கையை தடுத்து நிறுத்துவது ஒவ்வொருவரினதும் கடமை எனத் தெரிவித்தார்.

கலந்துரையாடலின் இறுதியில் மசூறா சபை அமைக்கும் நிகழ்வு நடைபெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மூத்த போராளிகள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் என அனைவரும் உள்ளடங்களாக 31 பேர் மசூறா சபைக்கு தெரிவானார்கள். (ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில்

பாதுகாப்பு உத்தியோகத்தராகச்

சிறந்த சேவையாற்றி

2014.09.13இல்

ஓய்வுபெறும்

**ச.ம.முத்துராசா**

அவர்கள் ஓய்வு காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் இறையருள் பெற்று இனிதே வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.

(49773)(7.6.3)


# உறவுகளை நினைவு கூரவும் கூட எமக்கு உரிமை இல்லையா?

*பொலிஸாரின் தடை குறித்து கண்டனம்; அதை அடுத்து சத்துருக்கொண்டான் கண்ணகியம்மன் ஆலயத்தில் வழிபாடு*

மட்டக்களப்பு, செப்.12

உயிரிழந்த உறவுகளை நினைவுகூரக்கூட எங்களுக்கு உரிமையில்லை. 23 வருடங்களாக உறவுகளை நினைவு கூர்ந்த எமக்கு இந்த ஆண்டு தடை விதிக் கப்பட்டது மிகவும் வேதனைக்குரிய விடயம் என சத்துருக்கொண்டான் கண்ணகியம்மன் ஆலய தலைவர் க.சிவக்கொழுந்து தெரிவித்தார்.

சத்துருக்கொண்டானில் 1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 9 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 184 பொதுமக்களின் நினைவு கூரல் நிகழ்வுகள் சத்துருக்கொண்டான் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அருகே நடைபெற விருந்தது. இந்த நிகழ்வுக்கு பொலிஸார் நீதிமன்றம் ஊடாக தடை விதித்திருந்ததுடன் அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதனைத்தொடர்ந்து நினைவுகூரல்கள் நிகழ்வுகள் நிறுத்தப்பட்டதுடன் பொதுமக்கள் ஆலயங்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த போதே சிவக்கொழுந்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சத்துருக்கொண்டானில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் உயிரிழந்த உறவினர்களை நினைவுகூரும் நிகழ்வை நடத்துவதற்கு நீதிமன்றினால் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இதன் காரணமாக நினைவுதின நிகழ்வுகள் கைவிடப்பட்டு சத்துருக்கொண்டான் கண்ணகியம்மன் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த காலத்தில் படையினர் மற்றும் பொலிஸாரின் ஆதரவுடன் இந்த நிகழ்வு நடத்தப்பட்டுவந்தது. உள்நாட்டுப் போர்க் காலத்திலும் படையினர்எங்களுக்குஆதரவுவழங்கினர்.ஆனால் இன்று பொலிஸார் இதனைத் தடுத்து விட்டனர், எனத் தெரிவித்தார். உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வை தடுத்தமையானது அடிப்படை மனித உரிமை மீறல். இந்த நாட்டில் தமிழர் களை அடக்குமுறைக்குள் வைத்திருக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே இதனை நான் கருதுவதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸ் தலைமையாக பொறுப்பதிகாரி ஹெட்டியாராச்சி, முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்ளப்பட்டமை காரணமாகவே நீதிமன்றின் ஊடாக இந்த நிகழ்வை தடைசெய்ததாகவும் எதிர்வரும் காலங்களில் முன்னறிவித்தல் பெற்று நிகழ்வுகளை மேற்கொள்ளலாம் என்றும் கூறினார். (ஒ-10)


வாக்கு உங்கள் உரிமை



**வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடாகும்.**

**உங்களுக்குத் தெரியுமா?**

- 2014 வாக்காளர்களை கணக்கெடுக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பப் பணிகள் தற்பொழுது முடிவடைந்துள்ளன.
- அதற்குரிய ஆவணங்கள் 2014 செப்ரெம்பர் மாதம் 03ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதி வரையில் காட்சிப்படுத்தப்படும்.
- உங்கள் பெயர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என பரிசீலித்துப் பார்த்து பதிவு செய்யப்படவில்லையாயின் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- தகைமை இல்லாதவரொருவர் பதிவு செய்வதற்காகக் கணக்கெடுக்கப்பட்டிருப்பின் உங்களால் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

**உரிமைக் கோரிக்கை சமர்ப்பிப்பது அல்லது ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வாறு ?**

- விண்ணப்பப்படிவங்களைக் கீழ்க் காணும் காட்சிப்படுத்தும் இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளவும் தேருநர் இடாப்புக்களையும் இவ்விடங்களில் பரிசீலித்துப் பார்க்க முடியும்.
- மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள்
- பிரதேச செயலகங்கள்
- ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம்
- ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம்
- நீங்கள் விண்ணப்பப் பத்திரத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2014 செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக குறிப்பிட்ட மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**2014ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் உங்களது பெயரை உட்சேர்ப்பதற்கு உங்களுக்குக் கிடைக்கும் இறுதிச்சந்தர்ப்பம் இதுவாகும். இதைப் பயன்படுத்திக்கொள்ளவும்.**

**சரியாகப் பதிவு செய்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.**

தொலைபேசி இல: 011 - 2868441,42,43
மின்னஞ்சல் : info@slelections.gov.lk
இணையத்தளம் : www.slelections.gov.lk

தேர்தல்கள் ஆணையாளர்
தேர்தல் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2014.09.12ஆம் திகதி

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872248 | அம்பாந்தோட்டை | 047-2220248 | குருநாகல் | 037-2222369 / [illegible]2265246 |
| கொழும்பு மாவட்ட | 011-2867471 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-[illegible]61 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2222855 | அநுராதபுரம் | 025-22225[illegible] |
| களுத்துறை | 034-2222286 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 024-3246356 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

(C/16583) (12.6.3)



CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm

Silver 10.15am, 2.15pm, 6.15pm

Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## சிறைக்கைதி கொடி விரியோகம் திருமலையில்

திருகோணமலை, செப், 12

தேசிய சிறைக் கைதிகள் தினத்தை முன்னிட்டு திருக்கோணமலை சிறைச்சாலையில் சிறைக்கைதி கொடி விரியோக நிகழ்வு உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் திரு.டபிள்யு. ஜி.யு.தென்னக்கோன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரும், கிழக்கு மாகாண சபை அமைச்சரவையின் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்து கொண்டதுடன் அவருக்கு முதற்கொடியை சிறைச்சாலை [illegible] அணிவித் [illegible] அதிகாரி [illegible]


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

செல்வி வை. ஸ்ரீநாகலீலாதேவி

அவர்களின் அன்புத் தாயார்

**வைரமுத்து தங்கம்மா**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை கொடிகாமம்.

# JOHN KEELLS FOUNDATION
மற்றும்
# GATEWAY LANGUAGE CENTRE

GATEWAY Language Centre

**இணைந்து வழங்கும்**

**ஆங்கில புலமைப்பரிசில் அனுமதி - 2014/15**

JOHN KEELLS FOUNDATION

John Keells நிறுவனத்தின் சமூக பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் கீழ் Gateway மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் கற்கைகள் நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப்படும் ஆங்கில மொழிக் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிக் காலம் :**

தெரிவுப்பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு 2014 ஐப்பசி முதல் 2015 மாசி வரையான நான்கு மாத காலம் முற்றிலும் இலவசமாகப் பயிற்சி வழங்கப்படும். இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் மாணவர்களுக்கு அடுத்த கட்ட கற்கைக்கான புலமைப்பரிசிலும் வழங்கப்படும்

**யார் விண்ணப்பிக்கலாம்?**

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12 - 14 வயதுடைய எந்தவொரு மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

உங்கள் வதிவிடத்துக்கு அருகிலுள்ள "கேற்வே" நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 20.09.2014 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களுக்கு :**

# GATEWAY
*Language and ICT Training Centre*

*#39, College Road, Neeraviady, Jaffna.*
*021 567 5555*

*Branches :*

| #55, Point Pedro Road, Nelliady. 021 567 7606 | #1, New Market Building, Chavakacheri. 021 567 8444 |
|---|---|

**மேலதிக தகவல்களுக்கு :**

# 0718 692 692

## பரீட்சை நிலைய இடமாற்றம்

கொழும்பு, செப்.12

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்துக்கான இறுதிப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நாளை 13 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவத்துறை பரீட்சை மண்டபத்திலும், வெளிவாரி பட்டப்படிப்புகள் அலகு பரீட்சை மண்டபத்திலும் நடைபெறும் என்று யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(ற)

## செயலமர்வு இன்று

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை பரதநாட்டியம், சித்திரம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறவுள்ளது. வலய மட்டக் கண்காட்சி இரண்டாம் தவணை பரீட்சைப் புள்ளிப் பகுப்பாய்வு என்பவை பற்றிக் கலந்துரையாடவுள்ளதால் பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட கண்காட்சியில் பொருள்களின் விவரம் மற்றும் தரம் 6 - 11 வரையான இரண்டாம் தவணைப் பரீட்சைப் புள்ளிப் பகுப்பாய்வு என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார். (ற-109)

## 45ஆம் நினைவுநாள் அழைப்பு



கடந்த 30.07.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு

அமரர் **பூராசா கனீதரன்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் வை.எம்.சி.ஏ. வீதி, பாரதிபுரம், கிளிநொச்சி இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பாரதிபுரம், கிளிநொச்சி.** (47872)(10) **குடும்பத்தினர்.**

## பிறந்த நாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



இலங்கை வங்கியில் பணியாற்றி அகவை அறுபதில் அடிபதித்து ஓய்வுபெற்றுச் செல்லும்

உயர்திரு

**சோ. சுந்தரலிங்கம்**

அவர்களை, அவர்தம் குடும்பத்தினருடன் சகல சிறப்புக்களும் பெற்று, வாழ வாழ்த்துகின்றோம்.

*Best Wishes*

**உத்தியோகத்தர்கள்**
**இலங்கை வங்கி**
**யாழ். 2ஆம் மேற்தரக் கிளை**

(52133)(10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 22.03.1924 — மறைவு 13.08.2014



அமரர்

**பராசக்தி முருகேசு**

அன்பினால் வழிகாட்டி அரவணைத்த அம்மாவே!
உயிராக இருந்து எம்மை ஊக்குவித்த அன்னையே!
பக்கத்தில் இருந்து பாசமுடன் பல கதைகள்
பாங்காகப் பேசியதை எப்படி மறப்போம் அம்மா
மாதம் ஒன்று சென்றாலும் மாறாது எம் துயரம்
மாதாவே உம் நினைவு எமை விட்டு
நீங்காது எந்நாளும்

இன்று (12.09.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.** (02104)(10) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**செல்லர் வேல்சாமி**

**முன்னாள் விற்பனை முகாமையாளர் (மில்க்வைற் சோப் தொழிலகம்)**

யாழ்.இல 29,ஆஸ்பத்திரி வீதி கொட்டடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல 965,காங்கேசன்துறை வீதி தட்டாதெரு யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்லர் வேல்சாமி 11.09.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்தி கேயன்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசக் கண்ணு, காலஞ்சென்ற பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற கௌரி வேல்சாமி (ஆங்கில ஆசிரியர் சன்மார்க்க வித்தியா சாலை) அவர்களின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (இந்தியா), சாந்தி, ராஜே ந்திரன்(காணாமல் போனவர்), காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவி, உதயசேகரன்(சிவன் அம்மை கொம்நெற்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கா, பிரதீப், அனுராஜ்(ATI Jaffna), சௌமியா, அருண்ராஜ், அரிஸ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது தட்டாதெரு இல்லத்தில் இன்று(12.09.2014) வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் அம்மை கொம்நெற்**
**இல-965, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்**

(c/16596)

தகவல்:
**சி.உதயசேகரன்** (மருமகன்)
0774478666 , 0776125789

## தொடர்ச்சிகள்

### விடுதலைப்

பட வில்லை. இந்நிலையில் அதனை நீக்க வேண்டுமென்று பொதுபலசேனா கூறுவது அதன் காழ்ப்புணர்ச்சியையே வெளிப்படுத்துகிறது."- என்றும் அவர் அங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

"ஷரியா சட்டங்களின் மூலமே காதி நீதிமன்றங்கள் இயங்குகின்றன என்றும், திருமணங்கள் நடைபெறுகின்றன என்றும் பொது பல சேனாவினர் தெரிவித்துள்ளமை முற்றிலும் உண்மைக்கு புறம்பான ஒன்று. விவாகம் மற்றும் விவாகரத்து சட்டங்கள் என்பனவே காதி நீதிமன்றங்களில் உள்ளன. இவை அரசமைப்புக்கு உட்பட்டவையாகும். நாடாளுமன்ற அனுமதியுடன் இவை நடைமுறைப்படுத்தப்பட்டவை என்பதை பொது பல சேனா தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கென அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயங்கரவாதி என்றும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கின்ற என்னை மதவாதி என்றும் அரசு சித்திரிக்கின்றது"- என்று தெரிவித்தார். (ற-10)

### 96 சதவீதம்

இடம்பெயர்ந்து குடியமர்த்தப்பட்ட மூன்றரை லட்சம் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு தற்காலிக வாழ்விடம் அமைக்க வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா பணம் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஏன் அவ்வாறு கிடைக்கவில்லை?"- என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்தபோதே மேற்கண்ட அறிவுரையை வடக்கு ஆளுநர் வழங்கியுள்ளார்.

"முதலில் மூன்றரை லட்சம் மக்கள் குடியமர்த்தப்பட்டனர் என்பதை ஏற்றுக் கொண்டமைக்கு சந்தோஷம். அவ்வாறு குடியேற்றப்பட்டமைக்கு நீங்கள் முதலில் பாராட்டுத் தெரிவித்திருக்க வேண்டும். வடக்கில் கடந்த 5 ஆண்டுகளில் பெருந்தொகை நிதியை அபிவிருத்திக்குச் செலவு செய்துள்ளோம். இந்த நிதியின் அடிப்படையில் ஒரு நபருக்கு ஒரு மில்லியன் ரூபா செலவு செய்துள்ளோம். 5 ஆண்டுகளில் நாம் மிகப்பெரிய அபிவிருத்திப் பணிகளைச் செய்துள்ளோம். இவற்றை எண்ணி சந்தோஷப்படுவதாகத் தெரியவில்லை. கிடைத்தவற்றை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும். நூற்றுக்கு 96 சதவீதம் கிடைத்ததையிட்டு சந்தோஷப்பட வேண்டும். கிடைக்காத 4 சதவீதத்தை பற்றிக் கதைக்கக் கூடாது"- என்று அவர் பதிலளித்தார்.

ஆயினும் குறித்த ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு வடக்கு ஆளுநர் இறுதி வரை பதிலளிக்கவில்லை. (ற-5)

### டக்ளஸை

போராட்டம் நடத்திய பின்னர், குறித்த செய்திக்கு மன்னிப்புக் கேட்டு செய்தி பிரசுரிக்காவிட்டால், மீளவும் நாளை (இன்று) போராட்டம் நடத்த வருவோம்- என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். தினக்குரல் ஆசிரியர் வி.அற்புதானந்தத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த செய்தி பட்டதாரி மாணவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே பிரசுரிக்கப்பட்டது. அதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தப் போராட்டம் பின்னணியில் இருந்து இயக்குபவர்களாலேயே நடத்தப்பட்டது என்று தெரிவித்தார். (ற-5)

### ஆள்

கொடுத்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் சுமார் 250இற்கும் மேற்பட்டோருக்கு இவ்வாறு மோசடியான ஆவணங்களை அவர்கள் தயார் செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அவர்களில் ஒருவர் மோசடியான ஆவணங்களைப் பயன்படுத்தி 10 பேரை மேற்கு நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த நபர் பிராந்திய பத்திரிகை வெளியீடுகளைப் போலியாகப் பிரசுரிப்பவர் என்றும், அதன் மூலம் சட்டவிரோதக் குடியேறிகளுக்கு தேவையான பத்திரிகை ஆவ்ணங்கைத் தயார் செய்து கொடுத்துள்ளார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யபட்ட மூவரும் தற்போது மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### யாழ்ப்பாண

திருட்டுச் சைக்கிள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டதோடு, அதனை உபயோகித்து வந்தவரும் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டார். குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ற-4)

### கேள்விகளுக்கு

யப்படுகின்றன?"- என்று ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோது, "அது தொடர்பில் குறித்த மாவட்டத்தின் அரச அதிபருடன் கதையுங்கள். மாகாண அதிகாரங்கள் தொடர்பில் மாத்திரம் கேள்வி கேளுங்கள்"- என்று ஆளுநர் பதிலளித்தார்.

மீள்குடியமர்வு தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியேழுப்பியபோதும், அதற்கும் பதிலளிக்காது மழுப்பிய ஆளுநர், "நாம் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு நடவடிக்கை களை மாத்திரமே நடைமுறைப்படுத்தினோம். எஞ்சிய நீண்டகால உள்ளக அகதிகள் தொடர்பில் மாவட்டச் செயலாளர்களிடம் கேளுங்கள்"- என்று மட்டுமே பதிலளித்தார். (ற-5)

### கைதடியில்

திகதி இன்னொருவரையும் கைது செய்தனர். அவர்கள் நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், நேற்று அவர்கள் நால்வரும் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்.

நீதிமன்றக் கட்டடத்துக்குள் பதில் நீதிவான் முன்னிலையில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் பாதிக்கப்பட்ட யுவதி இருவரை அடையாளம் காட்டினார். அதன்பின்னர் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நால்வரையும் தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9)

### ஐ.நாவின்

யில் இலங்கை அரசு பதிலளிக்கவில்லை எனவும் பான் கி மூன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### பேரவை

சென்று பார்வையிட்டிருந்தார். சபையின் கட்டிட வேலைகளைத் தொடர்வதற்கு மேலும் நிதி தேவை என்று கேட்கப்பட்டிருந்தது. உடனடியாகவே நூறு மில்லியன் ரூபாவை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய குறித்த நிதி நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதம செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் தெரிவித்தார். பேரவைச் செயலகத்தின் முழுமையான புனரமைப்புக்கு மேலும் 270 மில்லியன் ரூபா வழங்குவதற்கும் நிதி அமைச்சின் செயலாளர் சம்மதித்துள்ளார்.

இதனை விட வடக்கு மாகாண சபையால் அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில், 6 ஆயிரத்து 997 மில்லியன் ரூபா தேவை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் 6 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு நிதி அமைச்சின் செயலாளர் இணங்கியுள்ளார் என்றும் ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார். (ற-5)

### முன்னாள்

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சிப் பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களில் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் அவர்கள் கூறினர். (உ-55)

### வெளிநாடுகளில்

ரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதி மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பி விட்டது, சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது, சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய ஊடகத்துக்கு நேர்காணல் வழங்கி இரண்டு தினங்களிலேயே இராணுவத்தினர் இந்தப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். (ற-5)

### பொலிஸ்

லின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மகனும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியாக இருந்து மரணித்துள்ளார் என்ற தகவலின் பின்னணியிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### இராணுவத்துக்கு

அடிக்கல் நடும் விழா கிளிநொச்சி, முழங்காவில் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

**பாடசாலை சிறுவர்களை அழைக்க வேண்டாம்**

காலையில் இருந்து எங்களுக்காக காத்திருந்து, வரவேற்ற பாண்ட் வாத்தியங்கள் வாசித்த குழந்தைகளுக்கு நன்றி. அவர்கள் இங்கு காத்து நின்றதாக அறிந்தேன். மனம் வேதனை அடைகின்றேன். கல்லூரிகளில், பாடசாலைகளில் நடைபெறும் உள் நிகழ்சிகளில் இந்தக் குழந்தைகளை ஈடுபடுத்தலாம். ஆனால் வெளியில் நடைபெறும் விழாக்களுக்கு அதுவும் அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு அவர்களைக் கூட்டி வருவது சரியென எனக்குப் படவில்லை.

இந்தப் பழக்கத்தை நாங்கள் அடியோடு நிறுத்த வேண்டும். இன்று படிக்க வேண்டிய நாள். அவர்களின் முழு நாளைய படிப்பு இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் படிப்பிற்கே நாங்கள் முதல் இடம் கொடுக்க வேண்டும்.

இதுவரை காலமும் 'நாங்கள் எதைச் செய்தோம்?' என்றார்கள். இப்பொழுது 'ஏன் செய்கின்றோம்?' என்கிறார்கள். மொத்தத்தில் இராணுவம் வட - கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து இருபத்து ஐந்து வருடங்களுக்கேனும் இருக்க வேண்டும் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

**25 வருடங்கள் இராணுவம்**

எனக்குக் கிடைத்த தகவலின் படி 2008 ஆம் ஆண்டிலேயே அரசு சார்ந்த உயர் அதிகாரி ஒருவர் 'போர் விரைவில் முடிந்து விடும். ஆனால் எமது இராணுவம் குறைந்தது 25 வருடங்களாவது வட - கிழக்கு மாகாணங்களில் நிலைநிறுத்தப்பட்டு தமிழ்ப் பேசும் மக்களைத் தலையெடுக்க விடாமல் பண்ண வேண்டும்' என்று கூறியுள்ளாராம். அவரின் குறிப்பிட்ட கூற்றுக்கு ஏற்பவே நடவடிக்கைகள் நடந்து வருவதாகத் தென்படுகிறது.

அவர்களுக்கு ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். 1988 ஆம் ஆண்டில் இந்திய இராணுவ உயர் அதிகாரி, என் நண்பர் ஒருவருக்குக் கூறினாராம். 'நாங்கள் இங்கு வந்து விட்டோம். இனி 100 வருடங்களுக்கு இலங்கையை விட்டுப் போக மாட்டோம்' என்றாராம். ஆனரல் அடுத்த வருடமே பிரதமர் வி.பி. சிங்கின் வருகையுடன் இந்திய இராணுவம் மீளப் பெறப்பட்டது. மனிதன் முன்மொழிவான் இறைவன் முடித்து வைப்பான் என்பதன் அர்த்தத்தை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**ஈ.பி.டி.பி ஒட்டுக் குழு**

பின்னடைந்துள்ள கிராமங்களுக்கு, மக்கள் சார்பான திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ள நிலையில் இராணுவக் கட்டுப்பாடுகளில் இருந்து எங்கே மக்கள் விடுபட்டுப் போய் விடுவார்களோ என்ற பயத்தில் மக்கள் எமது நிகழ்ச்சிகளுக்கு வராது தடுக்க இமயப் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர் இராணுவமும் அதனைச் சார்ந்தோரும்.

அதனால் எமது மக்களை, நிகழ்வுகளுக்கு வராது தடுக்க அச்சுறுத்தி வருவதாகக் கேள்விப்படுகின்றேன். இதில் இராணுவத்தினர் மட்டுமன்றி ஈ.பி.டி.பி ஒட்டுக் குழுவும் ஈடுபட்டுள்ளதை இணையத்தளம் ஊடாக இன்று காலை அறிந்து கொண்டேன்.

**சிங்களத்தில் இராணுவத்துக்கு எச்சரிக்கை**

இந்தத் தருணத்தில் சிங்களத்தில் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். இராணுவத்தில் இருந்து சிலர் இங்கு வந்து படமெடுத்துக் கொண்டிருப்பதாக அறிகிறேன். ஏன் என்று எனக்குப் புரியவில்லை. எமது பாதுகாப்புக்கா அல்லது மக்களை அச்சுறுத்துவதற்கா படம் எடுக்கின்றீர்கள்?

பாதுகாப்பென்றால் எங்கள் மக்களுக்குத் தேவையான ஒரேயொரு பாதுகாப்பு இராணுவத்தினரிடம் இருந்து தான். நாங்கள் இராணுவத்தினரை, எங்களைப் பாதுகாக்குமாறு கேட்கவில்லை. இராணுவம் இங்கு இருப்பதால் எமது மக்கள் தான் பாதுகாப்பின்றி பயத்துக்கு ஆளாகின்றார்கள்.

படம் எடுப்போர் அவ்வாறு செய்வதை உடனே நிறுத்த வேண்டும். இல்லை என்றால் எங்கள் இளைஞர் யுவதிகளைக் கொண்டு உங்களின் படங்களை நாம் எடுத்து தெற்கிலே பத்திரிகைகளில் விளம்பரம் செய்வோம். இவ்வாறு தான் இராணுவம் இங்கு படம் எடுக்கின்றார்கள் என்று சொல்லி வைப்போம்.

இதன் பின்னர் தமிழில் தொடர்ந்த முதலமைச்சர், இதே போலத் தான் கடந்த ஏழாந் திகதி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கு கனகராயன் குளம், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் இருந்து வர எத்தனித்த மக்கள் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தொட்டிலையும் ஆட்டிவிட்டு குழந்தையையும் கிள்ளிவிடும் பணியில் அரசு ஈடுபட்டு வருகின்றது. ஒரு புறம் எம்முள் இணக்கம் வேண்டும், நாம் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்று ஊரறிய, உலகறிய, வாய் வழியாகக் கத்துகின்றார்கள் அரசாங்கத்தவர்கள்.

**ஒற்றுமையாக இருக்க வேண்டும்**

மறுபுறம் இராணுவக் கட்டுப்பாட்டை அதிகரித்து மக்களை அச்சுறுத்தி அவர்களின் ஜனநாயக உரிமைகளை பிரயோகிப்பதைத் தடுக்க முயல்கின்றார்கள். மலையகத்தில் இருந்து வந்து வன்னியில் குடியேறி இருக்கும் தமிழ் மக்கள் எமது சகோதர சகோதரிகள். அவர்களை இங்கு வாழ்ந்து வந்த சிலர் வேற்று மக்களாகப் பார்க்கின்றார்கள் என்றும், எமது அலுவலர்கள் சிலர் அவர்களைப் பாரபட்சத்துடன் நடத்த எத்தனிப்பதாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது நிறுத்தப்பட வேண்டும்.

எம்முள் வேற்றுமைகளை நாம் விரிவடையச் செய்தால் 25 வருடமல்ல 50 வருடங்களுக்கும் இராணுவத்தை வட - கிழக்கு மாகாணங்களில் இருந்து திருப்பி அனுப்ப முடியாது. எமது மக்களிடையே கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி, பாகுபாட்டை ஏற்படுத்தி மக்கள் ஒன்று சேராமல் தடுக்கச் சதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனை நாம் எமது ஒற்றுமையால் முறியடிக்க வேண்டும்" - என்றார். (ற-5)

### இந்திய

இதுவாகும். இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்குமாறு தமிழகத்தில் பெரும் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**பருத்தித்துறை**

நேற்று அதிகாலை பருத்தித்துறைக் கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 21 பேர் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 63 அடி நீளமான மிகப்பெரிய மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் தமிழகத்தின் பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர் கள் என்று தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்களை, நேற்றுக் காலை கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தியிடம் ஒப்படைத்தனர். உடனடியாகவே மதியம் மீனவர்கள் அனைவரும் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கைது செய்யப்பட்ட மீனவர்களில் ஒருவர் 15 வயதுடைய சிறுவன் என்பதால் அவரை, சான்று பெற்ற பாடசாலை ஒன்றில் சேர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

**நெடுந்தீவு**

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 5 பேர் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 30 மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 6 படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்றுக்காலை கடற்றொழில் நீரியவளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் நேற்று மாலையே மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்பாக முற்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கடந்த திங்கட்கிழமை தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட 6 மீனவர்ளும் நேற்று மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் 6 பேரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ற-21.4.109.56.106)

# பொலிஸ் அதிகாரம் தவிர்த்து பேசத் தயார்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்து 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுகளை நடத்துவதற்கு தான் தயாராக இருக்கிறார் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பேச்சுக்கு வர மறுக்கின்றனர் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், 2015 ஜனவரி மாதம் ஜனா திபதித் தேர்தல் நடைபெறலாம் என்றும் அதை தான் நிராகரிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் "இந்து" நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இந்தியப் பிரதமர் சந்தித்தது குறித்து தான் சீற்றமடைந்ததாக வெளியான கருத்துகளையும் நிராகரித்துள்ள ஜனாதிபதி ஜனநாயகத்தில் எவரையும் சந்திப்பதற்கான உரிமையுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மோடி மிகத்திறமையான வலுவான தலைவர். எங்களுடைய உறவுகள் எந்தத் திசையை நோக்கி பயணிக்கும் என இப்போது சொல்ல முடியாது. எங்களுக்கிடையிலான உணர் வுகள் சிறப்பாக உள்ளன. இந்திய - இலங்கை உறவுக ளில் மாற்றம் தேர்தலுக்கு முன்னரே நிகழ்ந்து விட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் வாக்கெடுப்பைப் புறக்கணிக்கத் தீர்மானித்த சமயமே அது நிகழ்ந்துவிட்டது. தேர்தல் காரணமாகவே முன்னர் அவர்கள் ஜெனிவா தீர்மானங்களுக்கு ஆதரவளித்தனர். எங்களுடைய உறவுகள் வலுவாகவே உள்ளன. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததில் அவர்களுடைய பங்களிப்பை மறந்துவிட முடியாது. அது ஒரு முக்கிய காரணியாக விளங்கியது. மோடி இலங்கைக்கு விஜயம் செய்வார் என நம்பிக்கை கொண்டுள்ளேன். மீண்டும் அவருக்கு அழைப்பு விடுப்பேன். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த முறை ஐக்கிய நாடு கள் மனித உரிமை ஆணைக்குழு காஷ்மீர் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியம் எனத் தெரிவிக்கும் அவ்வேளை எங்களது நிலைப்பாடு என்னவாகவிருக்கும், இந்தியாவோ இலங்கையோ எதுவாக இருந்தாலும் நாங்கள் வெளிநாட்டு விசாரணைகளை ஏற்றுக் கொள்ளமாட்டோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் 20 ஆயிரம் பேர் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன, பிரபாகரனின் மகன் பாலசந்திரனின் மரணத்திற்கு யார் காரணம் என்பது குறித்து இன்னமும் தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து நாங்கள் விசாரணை செய்து வருகிறோம். இராணுவம் இதனை செய்திருக்கும் என நான் கருதவில்லை, எனினும் இது உண்மையா என எனக்குத் தெரிய வேண்டும் அதன் காரணமாக விசாரிக் கிறோம். போரில் இருதரப்பும் மோதலில் ஈடுபடும் போது யார் சுட்டிருப்பார்கள் என எப்படி தெரிவிப்பது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது -

**கேள்வி:-** இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு இதுவரை சாதித்தது என்னவெனக் கருதுகீறீர்கள்?

**பதில் :-** நாங்கள் ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் 35 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியுள் ளோம். இன்னமும் பலவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். காணி போன்ற விவகாரங்களை ஒரே இரவில் நடைமுறைப்படுத்த முடியாது.

பல சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என நான் நம்புகிறேன்.

**கேள்வி:-** நீங்கள் போரில் வென்றாலும் சமாதானத்தை இன்னமும் வெல்லவில்லை என சொல்லப்படுகின்றதே?

**பதில் :-** நீங்கள் வடக்குக்கு சென்றால் உண்மை நிலையை அறியமுடியும். விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகளால் ஆழமாக ஈர்க்கப்பட்ட முதிய அரசியல் வாதிகளின் மனதை மாற்ற முடியாது. ஆனால், இளம் தலைமுறையினர் வேறு மாதிரி சிந்திக்கின்றனர். தோற்போம் எனத் தெரிந்தே கடந்த வருடம் தேர்தலை நடத்தினோம். யுத்தத்திற்கு பின்னர் நடமாடுவதற் கான சுதந்திரம் கிடைத்துள்ளது.

**கேள்வி:-** வடமாகாண சபையின் சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்வதாக குற்றம் சாட்டப்படுகின்றதே?

**பதில்:-** வட மாகாணசபையின் நிர்வாகத்தில் நாங்கள் எந்தத் தலையீட் டையும் செய்யவில்லை. முக்கிய அதிகாரிகளை நானே நியமனம் செய்கிறேன். அவர்களை இடமாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் குறிப்பிட்ட அதிகாரிள் நீதிமன்றம் செல்கின்றனர். நான் என்ன செய்ய?

**கேள்வி:-** இந்த அதிகாரங்களை நீங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் கையளிக்கலாமே?

**பதில்:-** பிரதம செயலாளர் என்பவர் ஒரு அதிகாரி, சுதந்திரமானவர், 13 ஆவது திருத்தத்தை பொறுத்தவரை பொலிஸ் அதிகாரம் தவிர ஏனைய அதிகாரங்கள் குறித்து நான் அவர்களுடன் விவாதிக்கத் தயார்.

**கேள்வி:-** முதலமைச்சர் தனக்கான அதிகாரிகளைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றதே?

**பதில்:-** முதலமைச்சர் தனக்கான அதிகாரிகளை தெரிவு செய்வது குறித்து நாங்கள் கலந்துரையாடலாம். நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசு வதற்குத் தயாராக உள்ளேன். ஆனால் அவர்கள் என்னுடன் பேச மறுக்கின்றனர். பேச்சுகள் இல்லாமல் எப்படி அதிகாரப்பகிர்வு குறித்தும் ஏனைய விடயங்கள் பற்றியும் ஆராய்வது.

**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** போர் முடிவுக்கு வந்த பின்னர் இராணுவத்தின் பிரசன்னத்தை 90 வீதமாக குறைத்துள்ளோம். ஏனைய பகுதிகளுக்கு அவர்களை மாற்ற முயல்கிறேன். ஆனால், எவ்வளவு இடத்திற்கு? இலங்கைக்குள்ளேயே எனது இராணு வத்துக்கான இடத்தை நான் கண்டுபிடிக்க வேண்டும். இந்தியாவிற்கோ வேறுநாடுகளுக்கோ அனுப்ப முடியாது.

**கேள்வி:-** வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் காணப்படுகின்றன என்ற விடயம் இந்தியாவில் உணர்வு பூர்வமானதாக உள்ளதே?

**பதில்:-** குடியேற்றம் இடம் பெறுகின்றது என்பதை நான் முற்றுமுழுதாக நிராகரிக்கிறேன். தமிழர்களின் நினைவுத்தூபிகள் எவையும் அழிக்கப்படவில்லை. இலங்கையைப் பொறுத்தவரை அதன் பிரஜைகள் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாழலாம்.

**கேள்வி:-** தமிழ் நாட்டுடன் முக்கியமாக முதலமைச்சரு டன் உங்களுக்குள்ள மோசமான உறவு காரணமாக மத்திய அரசால் இலங்கையுடன் நெருங்கி வரமுடியாமல் உள்ளதே?

**பதில்:-** இதற்கு நான் என்ன செய் யலாம்? நான் அவருடன் எப்போதும் பேச முயன்றுள்ளேன். வெள்ளைக் கொடியை காட்டி உள்ளேன். பாதுகாப்பு இணையத்தளத்தில் அவரைப் பற்றி வெளிவந்த விடயங்கள் மிகப் பெரிய தவறாகும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இதை எனக்குத் தெரிவித்தும் நான் அதை அகற்றுமாறு உத்தரவிட்டேன். நாங்கள் மன்னிப்புக் கோரினோம்.

**கேள்வி:-** இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவது நீண்ட காலப் பிரச்சினையாக உள்ளதே?

**பதில்:-** மீனவர்களுக்கு எல்லை இல்லை. அவர்கள் மீன்களை தேடிப் பிடிக்கவேண்டும் என நான் கருதுகிறேன். எனினும், பெரிய படகுகளைப் பயன்படுத்தி இந்திய மீனவர்கள் சூழலை நாசமாக்குகின்றனர். எமது மீன்வளத்தை அழிக்கின்றனர். இதை அனுமதிக்க முடியாது.

**கேள்வி:-** காணாமற்போனோர் விடயத்தில் உதவுவதற்கு ஏன் ஐ.நாவிற்கு அனுமதிக்கக் கூடாது?

**பதில்:-** அவர்களுக்கு என்ன நடந்தது எனக் கண்டறிய உள்ளூர் விசாரணைகளை மேற்கொள்ள விரும்புகின்றோம். பொதுமக்களையும், இராணு வத்தையும் சேர்ந்த பலர் போரில் பலர் காணாமற் போயுள்ளனர். ஆனால் நாங்கள் ஐ.நா ஆணைக்குழுவையும் அது உருவான விதத்தையும் நிராகரிக்கிறோம். ஆரம்பத்திலிருந்து நவிப்பிள்ளையின் அறிக்கைகள் ஒரு பக்கச் சார்பானவையாக காணப்பட்டன, அவரை நாங்கள் இங்கு அழைத்தோம். அவர் எங்களுக்கு ஒன்றை தெரிவித்தார். பின்னர் ஒன்றை கூறினார். எங்களிடம் மறைப்பதற்கு எதுவுமில்லை. புதிய ஆணையாளர் இங்கு வரவிரும்பினால் நாங்கள் அவரது வேண்டுகோளை பரிசீலிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. புதிய ஆணையரைச் சந்திக்க ஜோர்தான் தூதரை நாடுகிறது அரசு

## முஸ்லிம் அமைச்சரை தூதாக களமிறக்கியது கொழும்பு

கொழும்பு, செப்.12

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளரான ஜோர்தானின் செய்யத் அல் - ஹூஸைனை சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு இலங்கைக்கான ஜோர்தான் நாட்டுத் தூதுவரின் உதவியை கொழும்பு நாடியுள்ளது என அறியமுடிகின்றது.

இதற்காகத் தூதனுப்பும் பணியில் முஸ்லிம் அமைச்சர் ஒருவரை அரசதலைமை களமிறக்கி பேச்சுக்கான நடவடிக்கைகளை திரைமறைவில் முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரியவருகின்றது.

மேற்படி முஸ்லிம் அமைச்சருக்கும், ஜோர்தானுக்கான இலங்கைத் தூதரான அஸன் மெஹ்மூட் மொஹமட் அல் - ஜவாமிக்கும் இடையில் உள்ள நட்புறவை அடிப்படையாகக் கொண்டே சந்திப்புக்கான பேச்சுகளை முன்னெடுக்குமாறு அரச உயர்மட்டம் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளரைச் சந்திப்பதற்காக உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுப்பதற்கான நடவடிக்கைகளில் வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. மேலும், புதிய ஆணையாளருக்கான அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த ஜப்பான் பிரதமரூடாகவும் விடுத்துள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கான ஜோர்தான் நாட்டுத் தூதுவரூடாகவும் புதிய ஆணையாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான அழைப்பை விடுப்பதற்கு அரச உயர்மட்டம் முயற்சித்து வருகின்றது.

இதனூடாக இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளையும், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் நேரடியாகப் பார்வையிடுமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளருக்கு அழைப்பு விடுக்க அரசு எதிர்பார்க்கின்றது என்றும் தெரியவருகின்றது.

புதிய ஆணையாளராகப் பதவியேற்றதன் பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அல் ஹூஸைன் நிகழ்த்திய கன்னி உரையில், சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், சர்வதேச விசாரணை நடவடிக்கையிலிருந்து தாம் பின்வாங்க மாட்டார் என்றும் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, புதிய ஆணையாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளில் அரச உயர்மட்டம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பில் ஜோர்தான் நடுநிலை வகித்தமைக்கு புதிய ஆணையாளர் ஹூஸைனின் பங்கு அளப்பரியது எனத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-சி)



வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கோழிப் பண்ணைக்கான அடிகல் நாட்டும் விழா கிளிநொச்சி, முழங்காவில் கிராமத்தில் நேற்று நடைபெற்றது. வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அடிக்கல்லை நட்டார். (ற)

# மஹிந்த ஆட்சியில் தீர்வு இல்லை; அறப்போரை உடன் ஆரம்பிக்குக

## தமிழ்க் கூட்டமைப்பிடம் ஐக்கிய சோஷலிஸ, நவசமசமாஜக் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, செப்.12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்கீழ் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் நீதி கிடைக்காது. எனவே, விடியலை நோக்கிப் பயணிப்பதற்கான அறவழிப் போராட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெகுவிரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்றும், இதற்கு தென்னிலங்கை மக்களின் ஆதரவையும் திரட்டித் தருவதற்குத் தயாரென்றும் ஐக்கிய சோஷலிஸக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி ஆகியன நேற்று அறிவித்தன.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்தி, டிசம்பர் 31ஆம் திகதிக்குள் தமிழர் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வை முன்வைக்காவிட்டால், ஜனவரி முதலாம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மக்களை அணிதிரட்டி அறவழிப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாகக் கூறும் தீர்மானத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி நிறைவேற்றியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோர் மேற்கண்டவாறு கூறி னர்.

போர் முடிவ்டைந்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருந்திருக்குமானால், இக்காலப்பகுதிக்குள் தீர்வைக் கண்டிருக்கலாம். தமிழர்களை அடக்கித்தான் ஆள்வோம் என்ற மமதையில் ராஜபக்ஷ அரசு இருப்பதால், பேச்சு வழித் தீர்வு என்பது சாத்தியப்படாது. அரசுக்குத் தமிழர்கள் வழங்கிய கால அவகாசம் போதும். இனியும் மௌனம் காத்தால் மஹிந்த அரசு தமிழர்களைக் கைப்பாவையாகவே பார்க்கும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் - அதாவது, அடுத்த வாரத்தி லாவது போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று சிறி துங்க ஜயசூரிய மேலும் கூறி னார்.

## நன்றி நவிலும் வழிபாடு



அமரர்
திருமதி புஸ்பமலர்
தம்பிராஜா

(ஓய்வு பெற்ற ஆசிரியை யா/ உடுவில் மகளிர் கல்லூரி, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை- கொழும்பு)

அவர்களின் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி நவிலும் வழிபாடு, நவாலி CACM திருச்சபையில் (13.09.2014) சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெறும்.

J.I. தம்பிராஜா
குடும்பத்தினர்
நவாலி

(52136)

## விசேட கருத்தரங்கு

SLAS (LIMITED)
போட்டிப் பரீட்சைகள்
தாபன நடைமுறைகள்
விசேட கருத்தரங்கு
சனி காலை 10.00 மணி - 12.00 மணி

SLAS திறந்த போட்டிப் பரீட்சைக்கு
இறுதிக் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன
சிங்களமொழி மூல வினாத்தாள்கள் ஆராயப்படும்.
சனி காலை 8.30 மணி - 5.00 P.M

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சைக்கு
விசேட கருத்தரங்கு
சனி மாலை 2.00 மணி - 5.00 P.M

விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர் P. கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
077 469 6695

## கருத்தரங்கு

நடைபெறவுள்ள
SLAS திறந்த
பரீட்சைக்குரிய விடயங்கள்
ஆரம்பம்:
சனி (13/09) காலை 9 மணி
ஏற்கனவே நடைபெறும் மூன்று பிரிவுகளிலும் பிந்தி இணைந்தவர்களும் சமுகமளிக்கலாம்.
T.P: 075 4164564

அரச முகாமைத்துவ உதவியாளர் தேர்வு பரீட்சைக்கு
ஒவ்வொரு ஞாயிறு 2.00 மணி - 5.00 மணி வரை
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு
ஒவ்வொரு ஞாயிறும்
காலை 9.00 மணி - 12.00 மணி வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கோவிந்தன் வங்கிப்பக்கம்)

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கிராபிக்ஸ் டிசைனர் தேவை

Photo Shop இல் முன் அனுபவமுள்ளவர்கள் தேவை
ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு
நேரில் சமுகம் தரவும்
தொடர்புகளுக்கு:
**லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்**
சங்கானை.
(HNB BANK க்கு அருகாமை)

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்



மாணவர்களுக்கு Rs.84,500 வரையான புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது
மேலதிக விபரங்களை இம் மாதம் 13ம் திகதி பெற்றுக்கொள்ளலாம்

MS Office-CAA, Web Design, DTP, Hardware & Networking, Accounting
Engineering-Microsoft-USA, CIMA-UK, Chartered-Srilanka, aat, Banking

Qualified Lectures panel, 14 Years Experience
கல்வியங்காட்டில்
**MCAI CAMPUS**
Supported by Jaffna Computer Society
SMS Your Name & Course to 775520940 & Get Schol.
243,Adiyapatham Road
Bus Route : PointPedro(750/751)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

**After A/L What Next???**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

### Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

### Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
Duration: (2 Months)

### IELTS Acadamic/General

We do Official Online Registration for Exam Candidates
Duration: (2 Months)

(International English Language Testing System)
Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
(C/16587)(7.6.3)
Duration: (2 Months)

| | | |
|---|---|---|
| 13/09/2014 @3.00pm | Batches Starts on | 20/09/2014 @9.00am |
| 15/09/2014 @3.00pm | 17/09/2014 @9.00am | 22/09/2014 @11.00am |

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 021 222 4550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

## A/L பின்னர் தருகிறது HND கல்வியினை

அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்



BTEC edexcel HND
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT

**36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்**

நன்மைகள்
பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
மறைமுக செலவீனங்கள் இல்லை
வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
Diploma in English கற்கை நெறி இலவசம்

Edexcel -UK இனால் 2013 ம் ஆண்டிற்கான தங்கப்பதக்கம் பெற்ற நிறுவனம்

புதிய பிரிவுகள் 14.09.2014 9:00am

Your Career Pathway
HND 18 Months → Top-up Degree 1 Year → Masters 1 Year
Leading to B.Sc from London Metropolition University through ESOFT

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

## AFTER A/L? CIMA BIT MCSE BCS

**அனைத்துக்கும் ஒரே கட்டணம் 18000/=**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15 வருடங்களைப் பூர்த்தி செய்த எமது நிறுவனம் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு மேற்படி பயிற்சி நெறியினை மிகக்குறைந்த கட்டணத்தில் வழங்கவுள்ளது.விண்ணப்பிப்போர்
**U18<Name><Courses><Date.of.Birth><District>** என்பவற்றை
**772395895** என்ற இலக்கத்திற்கு sms செய்யவும்.
Registered:இளைஞர் திறன் விருத்தி அமைச்சு, மூன்றாம் நிலை தொழிற்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

**MCS**

## A/L அரசியல்

A/L 2016 - புதிய பிரிவு
A/L 2015 - Paper Class
By : K. சுகாஷ்
ஆரம்பம் : 13.09.2014

| DCM | SUBRA | அஸ்மின் |
|---|---|---|
| யாழ்நகர் | சித்தன்கேணி | சண்டிலிப்பாய் |

(52112) (7.6.3)

## டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதியுயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்பு உடனடியாக காத்திருக்கின்றன.



Car washer 40 பேர் உடன் தேவை.

| | |
|---|---|
| Basic Salary | 750 DHS |
| Commission | 5 DHS Per car |
| Other benefit | Tips & OT |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்
கைவசம் விசா உள்ளதால்
மிகக் குறுகிய காலத்தில் பயணம்
(மாதம் 80,000இற்கு மேல் சம்பளம் பெறக்கூடியது)
இடம் : உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 10.00 - பி.ப. 3.00 மணி வரை
ஆவணங்கள் : பாஸ்போட், சுயவிரக்கோவை, Photo
முக்கிய குறிப்பு : வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.

உடன் தொடர்பு கொள்ள :
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) : 076 669 7789
Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
L/L No-2248

(C 16586) (7.6.3)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
வங்கியில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள
**IABF, DABF**

**கணக்கீடு**
தொழில்நுட்பவியலாளராவதற்கு
**aat**
Foundation, Intermediate & Final

**பட்டயக் கணக்காளராகுவதற்கு**
**CA (SriLanka)**
Executive Level, Business Level

Further Details:
**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE DEPT,
464, Hospital Road, Jaffna.
021 222 3382

## கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதிஉயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| Category | QTY | Monthly Salary (QR) AC |
|---|---|---|
| Technician | 05 | 1600 - 1900 + OT |
| Plumber | 04 | 1800 - 2000 + OT |
| Electrical Technician | 03 | 1600 - 1900 + OT |
| Handyman | 03 | 1600 - 1800 + OT |
| HVAC Techician | 06 | 1700 - 2000 + OT |
| Painter | 03 | 1400 - 1600 + OT |
| Grader Operator | 05 | 1500 + 500 + OT |
| Dozer Operator | 05 | 1500 + 500 + OT |
| Punctury | 06 | 1500 + 500 + OT |
| Diesel Operator | 06 | 1500 + 500 + OT |
| Excavator Operator | 05 | 1500 + 500 + OT |
| Auto Electrician | 05 | 1300 + 300 + OT |
| Shuttering Carpenter | 05 | 1100 + 300 + OT |
| Van Sales Man | 05 | 1500 + 300 + OT |
| Garden Helper (Age 30-55) | 10 | 1000 + OT |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
இடம் : உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 10.00 - பி.ப. 3.00 மணி வரை
ஆவணங்கள் : பாஸ்போட், சுயவிரக்கோவை, Photo
முக்கிய குறிப்பு : வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.

உடன் தொடர்பு கொள்ள :
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Mannar Vavuniya - 076 669 7789
Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
L/L No-2248

(C 16585) (7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.